# Government of Tamil Nadu

## Department of Employment and Training

Course : Competitive Exam

Subject : Current Affairs(Tamil Version)

Topic : Current Affairs - March 2021


**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to make copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act.

It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

# பொருளடக்கம்


வரலாறு 01








26 அரசியல் அறிவியல்

புவியியல் 31









32 பொருளாதாரம்

அறிவியல் 35

தினசரி
தேசிய நிகழ்வு 41

56 சர்வதேச நிகழ்வு

தமிழ்நாடு 63



# 1. வரலாறு






## 1.1 முக்கிய தினங்கள்

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 2–4 | சபஹர் துறைமுக தினம் | ▪ இந்திய கடல்சார் உச்சி மாநாடு – 2021 மார்ச் 2–4 வரை நடைபெற்றது.<br>▪ அர்மீனியா, ஆப்கானிஸ்தான், கஜகஸ்தான், ஈரான், உஸ்பெகிஸ்தான் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் பங்கெடுத்தன.<br>▪ இந்த மாநாட்டில் சபஹர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.<br>▪ சபஹர் துறைமுகம்<br>▪ ஈரான் நாட்டில் ஓமன் வளைகுடாவில் அமைந்துள்ளது.<br>▪ சபஹர் துறைமுகத்தின் மூலம் ஈரான் நாட்டின் வழியாக ஆப்கானிஸ்தான் நாட்டிற்கு பொருட்களை அனுப்ப இந்தியா திட்டமிட்டுள்ளது. |
| மார்ச் 3 | உலக வனவிலங்கு தினம் | ▪ மையக்கருத்து: "Forests and Livelihoods: Sustaining People and Planet". |
| மார்ச்–3 | உலக காது கேட்டல் தினம் | ▪ 2021 ஆம் ஆண்டிற்கான உலக காதுகேட்டல் தினத்திற்கான மையக் கருத்தாக:<br>▪ Hearing Care for All என்பது நிர்ணயிக்கப்பட்டிருந்தது. |
| மார்ச் 7 | ஜன் அவுஷாதி தினம் | ▪ மக்களிடையே மருந்துகள் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த 2019 முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 7ம் நாள் ஜன் அவுஷாதி திவாஸ் (தினம்) கடைப்பிடிக்கப்படுகிறது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 8 | சர்வதேச பெண்கள் தினம் | ▪ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலின வாதம் மற்றும் வன்முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாள்.<br>▪ பிரான்ஸின் லூயிஸ் பிளாங் பெண்கள் அரசவை ஆலோசனை குழுவில் இடம்பெற செய்த 1848 மார்ச 8ஆம் நாளே சர்வதேச பெண்கள் தினமாக கொண்டாடப்படுகிறது.<br>▪ ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்த ஆண்டு – 1975<br>▪ சர்வதேச பெண்கள் ஆண்டு – 1978. |
| | ஜன் அவுஷாதி தினம் | ▪ மக்கள் மருந்தகங்களில் (ஜன்ஔஷதி கேந்திரா), வெளிச்சந்தைகளைவிட 50 முதல் 90 சதவீதம் வரை குறைவான விலையில் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கின்றன. இந்த மருந்தகத்தின் 7,500–ஆவது கிளை, மேகாலய மாநிலம், ஷில்லாங்கில் உள்ள இந்திரா காந்தி பிராந்திய மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் திறக்கப்பட்டது.<br>▪ ஜன் அவுஷாதி<br>▪ மக்கள் மருந்தகம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, மக்கள் மருந்தக வாரம் மார்ச் 1–ஆம் தேதி முதல் 7–ஆம் தேதி வரை கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த திட்டம், வடகிழக்கு மாநிலங்களில் மலைப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பேருதவியாக உள்ளது. |
| மார்ச் 8 | அனைத்துலக பெண்கள் நாள் | ▪ **முக்கியத்துவம்** – பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலினவாதம் மற்றும் வன்முறைகளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாள்.<br>▪ **வரலாறு**: பிரான்சின் லூயிஸ் பிளாங்க் பெண்களை அரசவை ஆலோசனை குழுவில் இடம்பெற செய்யவும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கவும் ஒப்புதல் தந்த நாள் – மார்ச் 8, 1848.<br>▪ ஐ.நா. அங்கீகரித்த ஆண்டு – 1975.<br>▪ சர்வதேச பெண்கள் ஆண்டு – 1978. |
| மார்ச் 11 | உலக சிறுநீரக தினம் | ▪ மையக்கருத்து – 'Living Well with Kidney Disease'.<br>▪ ஆண்டுதோறும் மார்ச் மாதம் 2வது வியாழக்கிழமை சர்வதேச சிறுநீரக தினமாக கொண்டாடப்படுகிறது. |
| மார்ச் 18 | தேசிய ஆயுத தளவாட தினம் | ▪ உலகின் மிகப்பெரிய அரசு ஆயுத தளவாட அமைப்பை கொண்டுள்ள இந்தியாவில் ஆண்டுதோறும் மார்ச்–18 தளவாட தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.<br>**இந்திய ஆயுத தளவாடவாரியம்**<br>▪ தோற்றம் – 1712<br>▪ தலைமையிடம் – கொல்கத்தா |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| மார்ச் 18 | சர்வதேச மறுசுழற்சி தினம் | ▪ 2021ன் மையக்கருத்து – "Recycling Heroes". |
| மார்ச் 19 | உலக தூக்க தினம் (World Sleep Day – March 19) | |
| மார்ச் 20 | சர்வதேச மகிழ்ச்சி தினம் | ▪ 2021 சர்வதேச மகிழ்ச்சி பிரச்சாரத்தின் மையக்கருத்து – 'Keep Calm. Stay Wise. Be Kind'. |
| மார்ச் 22 | உலக தண்ணீர் தினம் | ▪ ஐநா சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் 1993 ஆம் ஆண்டு முதல் மார்ச் 22ம் நாள் அன்று உலக தண்ணீர் தினம் கொண்டாடப்படுகிறது.<br>**நோக்கம்**<br>• நீர் வளத்தின் ஒட்டுமொத்த திட்டத்தையும் நிர்வாகத்தையம் மேம்படுத்தி நீர்வள பாதுகாப்பை வலுப்படுத்தி நாள்தோறும் கடுமையாகியுள்ள நீர் பற்றாக்குறை பிரச்சைனையை தீர்ப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நோக்கமாகும். |
| மார்ச் 23 | தியாகிகள் தினம் | ▪ பகத்சிங், சுக்தேவ் தபார், சிவராம் ராஜ்குரு போன்றோரின் வீரமரணத்தை போற்றும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 23 தியாகிகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. |
| மார்ச் 24 | உலக காசநோய் தினம் | ▪ மக்களிடையே காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 உலக காசநோய் தினம் அனுசரிக்கப்படுகிறது.<br>▪ உலக காசநோய் நாள் உலக சுகாதார அமைப்பினால் அதிகாரப்பூர்வமாக கடைப்பிடிக்கப்படும். எட்டு உலகளாவிய முக்கியமான நாட்களில் ஒன்றாகும்.<br>▪ 1882, மார்ச் 24ல் டாக்டர் ரொபேர்ட் கொக் என்பவரால் காசநோய்க்கான காரணியை பெர்லினிலில் அறிவிக்கப்பட்டது.<br>▪ 1996ம் ஆண்டிலிருந்து உலக சுகாதார அமைப்பு இந்த நாளை காசநோய் விழிப்புணர்வு நாளாக அறிவித்தது.<br>▪ 2021ம் ஆண்டிற்கான மையக்கருத்தாக – 'The Clock is Ticking'.<br>▪ இந்த நாளில் 'Mask for the Masses' என்ற ஸ்டான்லி மருத்துவமனையில் துவங்கப்பட்டுள்ளது. |

| தேதி | நாள் | மையக்கருத்து |
|---|---|---|
| | புவி மணிநேரம் | ▪ இது உலகளாவிய இயற்கை நிதியம் (WWF) நிறுவிய ஆண்டுதோறும் மார்ச்–ல் கடைபிடிக்கும் ஆற்றல் வளம் பேணும் நாளாகும்.<br>▪ இந்த நிகழ்ச்சி, தனியார்களையும் குழுமங்களையும், வணிக அமைப்புகளையும், தனிநபர்களையும், மற்றும் அரசாங்கங்களையும் ஊக்குவித்து மார்ச் இறுதியில் ஒருநாளில் ஒருமணி நேரத்துக்கு தேவையற்ற விளக்குகளை இரவு 8:30 மணியில் இருந்து இரவு 9:30 மணி வரையில் புவிக்கோளுக்காக அணைத்து வைக்குமாறு வேண்டும் நாளாகும்.<br>▪ இது ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் விளக்கணைப்பு நாளாக 2007 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. |

## 1.2 பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதம்

### Desert FLAG VI

- இந்திய விமானப்படை ஐக்கிய அரபு எமிரெட்ஸ் ஏற்பாடு செய்த Desert FLAG VI என்ற பயிற்சியில் முதன்முறையாக பங்கேற்றுள்ளது.
- இதில் அமெரிக்கா, பிரான்ஸ், சவுதி அரேபியா, தென்கொரியா, பஹ்ரைன் ஆகிய நாடுகள் பங்கேற்றன.
- இந்தியாவின் சார்பாக ஆறு Su–30 MKI இரண்டு C–17 மற்றும் ஒரு IL–78 டேங்கர் விமானங்கள் பங்கேற்றன.

### டெசர்ட் ப்ளாக் VI (Desert Flag VI)

- இந்திய விமானப்படை ஐக்கிய அரபு அமீரகத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் டெசர்ட் ப்ளாக் VI எனப்படும் பன்னாட்டு மிகப்பெரிய விமானப்படை பயிற்சியில் முதல்முறையாக பங்கெடுத்துள்ளது.

### முப்படை தளபதிகள் மாநாடு

- குஜராத் மாநிலம் கெவாடியாவில் ஒருங்கிணைந்த முப்படைத் தளபதிகளின் மாநாடு 3 நாள்கள் (மார்ச் 4–6) நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் வெள்ளிக்கிழமை கலந்து கொண்டார்.

### பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு பிரம்மோஸ் ஏவுகணை விற்பனை

- இந்தியா–ரஷ்யா கூட்டு முயற்சியில் உருவான பிரம்மோஸ் ஏவுகணையை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் பிலிப்பைன்ஸ் நாடு கையெழுத்திட்டுள்ளது.

### பிரம்மோஸ்

- உலகின் மிக வேகமான ஏவுகணை
- ஒலியை விட வேகமானது.
- இந்தியாவின் பிரம்மபுத்ரா ரஷ்யாவின் மாஸ்கோ நதியின் பெயர் இணைக்கப்பட்டு பிரம்மோஸ் என பெயரிடப்பட்டது.
- தாக்கும் தொலைவு 300 கி.மீ

### ஆயுதம் ஏந்திய 30 ட்ரோன்களை அமெரிக்காவிடம் வாங்க திட்டம்

- பாகிஸ்தான், சீனாவின் அச்சுறுத்தலை சமாளிக்க ஆயுதம் ஏந்திய 30 ட்ரோன்களை அமெரிக்காவிடம் வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.
- அமெரிக்காவின் சாண்டியாகோவைச் சேர்ந்த ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 30 எம்க்யூ–9பி பிரடேட்டர் ட்ரோன்களை வாங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ரூ.21,900 கோடி மதிப்பிலான இந்த ஒப்பந்தத்துக்கு அடுத்த மாதம் ஒப்புதல் வழங்கப்படும்.
- எம்க்யூ–9பி ரக ட்ரோன்கள் 1,700 கிலோ எடையுள்ள ஆயதங்களை சுமந்தபடி 48 மணி நேரம் பறக்கும் திறன் வாய்ந்தது.
- இந்த ட்ரோன்கள் இந்தியப் பெருங்கடலின் தென் பகுதியில் சீனாவின் போர்க்கப்பல்களை இந்திய கடற்படை கண்காணிக்க உறுதுணையாக இருக்கும். இமயமலைப் பகுதியில் பாகிஸ்தானுடனான எல்லையை கண்காணிக்கவும் இவை உதவும் என கூறப்படுகிறது.

## இந்திய கடற்படையில் மூன்றாவது "ஸ்கார்பீன்" ரக நீர்மூழ்கி கப்பல் சேர்ப்பு

- இந்திய கடற்படையில் மூன்றாவது "ஸ்கார்பீன்" ரக நீர்மூழ்கி கப்பலான ஐ.என்.எஸ். கரஞ்ச் சேர்க்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் தொழில்நுட்ப உதவியுடன் மும்பையில் உள்ள மசாகன் கப்பல் கட்டும் நிறுவனம் (எம்டிஎல்) மூலமாக 6 "ஸ்கார்பீன்"ரக நீர்மூழ்கி கப்பல்களை இந்தியா கட்டமைத்து வருகிறது. இதில், இரண்டு நீர்மூழ்கி கப்பல்கள் கட்டி முடிக்கப்பட்டு, கடற்படையில் ஏற்கெனவே இணைக்கப்பட்டன.
- இப்போது மூன்றாவது நீர்மூழ்கி கப்பலான கரஞ்ச் இணைக்கப்பட்டது.

Project 75

- இந்திய கப்பல் படையில் 6 புதிய நீர்மூழ்கிக் கப்பலை இணைப்பிற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கும் திட்டம் 1990களுக்கு பிறகு துவங்கப்பட்டது. இதில் முதல் நீர்மூழ்கிக் கப்பலான கல்வாரி – 2017லிலும், இரண்டாவது நீர்மூழ்கிக் கப்பலான கந்தேரி – 2019லிலும் தற்போது மூன்றாவது நீர்மூழ்கிக் கப்பலான கரஞ் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.
- வேலா, வாகிர், வக்சீர் போன்ற கப்பல்கள் கட்டுமான பணியில் உள்ளது. கப்பல் கட்டும் நிறுவனம் – மசகான் டாக் நிறுவனம்.

## INS ஜலாஷ்வா–அஞ்சுவோன் துறைமுகம் கொமாரஸ்

- இந்திய போர்க்கப்பலான INS ஜலாஷ்வா 1000 டன் அரிசியை கோமோரஸ் நாட்டு அஞ்சுவோன் துறைமுகத்திற்கு கொண்டு சேர்த்துள்ளது.

**சாகர்**

- சாகர் (Security and Growth for all in the Indian Ocean Region) என்ற திட்டம் 2020 மே மாதத்தில் பிரதமர் நரேந்திர மோடியால் துவங்கப்பட்டது.
- இந்த திட்டத்தின் கீழ் கோவிட் கால அவசர உதவிகள் அண்டை நாடுகளுக்கு வழங்கப்பட்டது.
- INS–ஜலாஷ்வா – இந்திய கப்பற்படையில் மாபெரும் கப்பலாகும்.

## இந்தியாவில் நீண்ட காலமாக பணியிலிருந்த இரண்டு துப்பாக்கி கருவிகள் விடுவிக்கப்பட்டுள்ளது

- ராஜஸ்தான் மாகாஜன் துப்பாக்கி சுடும் பகுதியில் நீண்டகாலமாக பயன்பாட்டில் இருந்த M–46 கடாபுல்ட் மற்றும் 160mm தம்பெல்லா மார்ட்டர்ஸ் போன்ற துப்பாக்கிகள் 60 ஆண்டுகள் பயன்பாட்டை கருத்தில் கொண்டு பயன்பாட்டில் இருந்து விடுவித்துள்ளனர்.

**130 மி.மீ கடாபுல்ட்**

- 27 கிலோ மீட்டர் தூரம் தாக்கவல்லது

**160 மி.மீ மார்ட்டர்ஸ்**

- 9.6 கிலோ மீட்டர் தூரம் தாக்கவல்லது.

## எல்–58

- எல்–58 என்று பெயரிடப்பட்ட போர்க்கப்பல் அந்தமானின் போர்ட்பிளேர் கடற்படைத் தளத்தில் இந்திய கடற்படைக்கு அர்ப்பணிக்கப்பட்டது.
- நீரிலும், நிலத்திலும் செல்லக்கூடிய இந்த போர்க்கப்பலை கொல்கத்தாவை சேர்ந்த கார்டன் ரீச் கப்பல் கட்டும் நிறுவனம் வடிவமைத்துள்ளது.
- 63 மீட்டர் நீளம், 11 மீட்டர் அகலம், 900 டன் எடை கொண்ட எல்–58 போர்க்கப்பலில் அதிநவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

## ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற சரத் கமல், G.சத்தியன்

- ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்ற சரத் கமல், G.சத்தியன் ஆகியோர் சரத் கமல், G.சத்தியன், மனிகா பத்ரா, சுதிர்தா முகர்ஜி ஆகியோர் தேசிய பெடரேஷன் கோப்பை சாம்பியன் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் டோக்கியோ 2021 ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

## சமுத்ரி விராசத் பர்தர்ஷன்

- கடல்சார் பாரம்பரியத்தை பொதுமக்களுக்கு விளக்குவதற்காக சமுத்ரி விராசத் பர்தர்ஷன் என்ற பெயரில் நிகழ்ச்சிகளை இந்திய கடற்படை நடத்தி வருகிறது. இதையொட்டி இந்திய கடற்படை கப்பல் மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவிலுள்ள கங்கை ஆற்றுக்கு கொண்டு வரப்பட்டது.

## உலகின் பலம் வாய்ந்த ராணுவம் இந்தியாவுக்கு 4–ஆவது இடம்

- உலகின் பலம் வாய்ந்த ராணுவத்தைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்திய ராணுவம் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. இப்பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது.
- பாதுகாப்புத் துறை தொடர்பான இணையதளமான "மிலிட்டரி டைரக்ட்" இது தொடர்பாக ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வில் ராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு,

ராணுவத்தில் உள்ள வீரர்களின் எண்ணிக்கை, தரைப்படை, கடற்படை, விமானப்படைகளின் பலம், அணுஆயுதங்கள், தளவாடங்களின் அளவு, ராணுவத்தினருக்கான சராசரி ஊதியம் உள்ளிட்டவை கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

- அதே நேரத்தில் விமானப் படை பலத்தில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டிடம் 14,141 போர் விமானங்கள் உள்ளன. இதற்கு அடுத்து ரஷ்யாவிடம் 4,682 போர் விமானங்களும், சீனாவிடம் 3,587 போர் விமானங்களும் உள்ளன. அதே நேரத்தில் தரைப்படையில் பயன்படுத்தும் டாங்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களில் ரஷியா, அமெரிக்கா, சீனா ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களில் உள்ளன.
- கடற்படையில் 406 போர்க் கப்பல்களுடன் சீனா முதலிடத்தில் உள்ளது. இதற்கு அடுத்து ரஷியாவிடம் 278 போர்க் கப்பல்கள் உள்ளன. இதற்கு அடுத்து அமெரிக்கா மற்றும் இந்தியாவிடம் தலா 200–க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் உள்ளன.
- உலகிலேயே மிக அதிகமாக அமெரிக்கா ராணுவத்துக்காக ஆண்டுதோறும் 732 பில்லியன் டாலர் (சுமார் ரூ.53 லட்சம் கோடி) வரை செலவிடுகிறது. இதற்கு அடுத்து சீனா 261 பில்லியன் டாலர் (ரூ.18 லட்சம் கோடி), மூன்றாவதாக இந்தியா 71 பில்லியன் டாலர் (ரூ.5 லட்சம் கோடி) செலவிட்டு வருகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## அஹோம் வீரர்கள்

- பிரதமர் நரேந்திர மோடி 17ஆம் நூற்றாண்டு அஹோம் போராட்டத்தின் வீரர்கள் அப்போதைய ஆத்மநிர்பார் ராணுவத்திற்கு உதாரணமாக திகழ்ந்தனர் என்று தெரிவித்துள்ளார்.
- ஆசாத் கா அம்ரித் மகோத்சவ் என்ற விழாவை தொடங்கி வைத்து அஹோம் போராட்ட வீரர்களின் போர் யுக்திகளை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.
- 1671ல் போர்புகான் தலைமையிலான அஹோம் படை சராய்கட் போரில் முகாலய படையை தோற்கடித்தது.

## கடலோர காவல் படையில் இணைக்கப்பட்ட புதிய ரோந்து கப்பல் "வஜ்ரா"

- சென்னையை அடுத்த காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளத்தில் L&T நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட "வஜ்ரா" என்ற ரோந்து கப்பல் கடலோர காவல் படையில் இணைக்கப்பட்டது.
- ராணுவ தலைமைத் தளபதி விபின் ராவத் கப்பலை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- 7 ரோந்து கப்பல்கள் கட்டுவதற்காக பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் பணி ஆணை வழங்கப்பட்டிருந்தது. இதில் 6–வது கப்பலான "வஜ்ரா" கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் கடலோர காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டது.
- 2,100 மெட்ரிக்டன் எடையும் 98 மீட்டர் நீளமும், 15 மீட்டர் அகலமும் கொண்ட இக்கப்பல் மணிக்கு அதிகபட்சமாக 26 கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடியது. மேலும் கரைக்குத் திரும்பாமல் சுமார் 5000 கடல் மைல் தூரம் பயணிக்கும் வகையில் பல்வேறு நவீன கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- வஜ்ரா கிழக்கு பிராந்திய ஆளுகைக்குட்பட்ட தூத்துக்குடி பகுதியில் ரோந்து பணியில் ஈடுபடுத்தப்படும்.

## உலகின் முதல் கப்பல்களுக்கான சுரங்கப்பாதை

- கப்பல் போக்குவரத்தில் மேம்பாட்டிற்காக நார்வே நாட்டில் உலகின் முதல் கப்பல் சுரங்கப்பாதையை அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது.
- 1.7 கி.மீ. தூரத்திற்கு 16000 டன்களை தாங்கக்கூடிய வகையில் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வருகிறது.

## பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதியில் அமைதியான சூழல் : ராணுவ தலைமை தளபதி

- பாகிஸ்தானுடனான ஜம்மு–காஷ்மீர் எல்லைப் பகுதி, சுமார் 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அமைதியாகக் காணப்படுவதாக ராணுவ தலைமைத் தளபதி எம்.எம்.நரவணே தெரிவித்துள்ளார்.

## முக்கிய துறைமுகங்கள்

- மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தீன்தயாள் (முன்பு கண்ட்லா), மும்பை, ஜேஎன்பிடி. மர்மகோவா, நியூ மங்களூர், கொச்சின், சென்னை, காமராஜர், வ.உ.சிதம்பரனார், விசாகப்பட்டினம், பாரதீப், கொல்கத்தா (ஹால்டியா உள்பட) ஆகிய 12 துறைமுகங்கள் இயங்கி வருகின்றன.
- குறிப்பாக காமராஜர் துறைமுகம் (எண்ணூர்) கையாண்ட சரக்கின் அளவு ஏப்ரல்–பிப்ரவரி காலகட்டத்தில் 23.29 சதவீதம் வீழ்ச்சியடைந்து 2.22 கோடி டன்னாகியுள்ளது.

### இந்திய–அமெரிக்க கூட்டு கடற்படை பயிற்சி: கிழக்கு இந்திய பெருங்கடல் பகுதியில் தொடக்கம் (PASSEX)

- இரு நாடுகளிடையே வளர்ந்து வரும் பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை பிரதிபலிக்கும் வகையில் இந்த இரண்டு நாள் கூட்டு பயிற்சி மேற்கொள்ளப்படுவதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.
- "பாஸ்எக்ஸ்" என்ற இந்த கூட்டுப் பயிற்சியில் இந்தியா சார்பில் "ஷிவாலிக்" போர்க் கப்பலும், நீண்டதூர கண்காணிப்பு போர் விமானம் "பி8ஐ" ஆகியவை ஈடுபடுத்தப்பட்டுள்ளன.
- அமெரிக்க யுஎஸ்எஸ் தியோடர் ரூஸ்வெல்ட் போர் விமானம் தாங்கி கப்பல் குழுவை ஈடுபடுத்தியுள்ளது. இந்த கப்பல் குழுவில் சிறிய போர் கப்பல்களும் ஏராளமான போர் விமானங்களும் இடம் பெற்றிருக்கும் என்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.
- அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாயட் ஆஸ்டின் கடந்த வாரம் இந்திய பயணம் மேற்கொண்ட நிலையில், இந்த கூட்டு கடற்படை பயிற்சியை இரு நாடுகளும் தொடங்கியுள்ளன. அவருடைய பயணத்தின் போது, இந்தோ–பசிபிக் பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இரு நாடுகளிடையேயான பாதுகாப்பு மற்றும் ராணுவ ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது என்று இரு தரப்பிலும் தீர்மானிக்கப்பட்டது.

## 1.3 உலக அமைப்புகள் உடன்படிக்கைகள் மற்றும் மாநாடுகள்

### தடுப்பூசியை கண்டுபிடித்து தயாரிக்கும் திறனை இந்தியா நிரூபித்துள்ளது

- தடுப்பூசியை கண்டுபிடித்து தயாரித்து தனது திறனை இந்தியா உலக அரங்கில் பறைசாற்றியதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானி சௌம்யா சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.
    - தலைமையகம்: ஜெனீவா, சுவிச்சர்லாந்து
    - தலைவர்: டெட்ரோசு அதானோம்
    - தொடக்கம்: 7 ஏப்ரல், 1948

### சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக 2023ஐ அறிவித்தது ஐ.நா

**நோக்கம்**

- சிறுதானியங்களால் உடல்நலனுக்கு ஏற்படும் நன்மைகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சிறுதானியங் களின் சாகுபடி பரப்பை அதிகரிக்க செய்யவும்.
- இந்தியா உள்ளிட்ட நாடுகள் அளித்த முன்மொழிவின் அடிப்படையில் 2023–ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டாக ஐ.நா. பொதுச் சபை அறிவித்துள்ளது.
- சிறுதானியங்கள் வரலாற்று ரீதியில் பல நாடுகளில் விளைவிக்கப்பட்டு வருகின்றன. ஆனால், சில நாடுகளில் அவற்றின் சாகுபடி குறைந்து வருகிறது. சிறுதானிங்களால் கிடைக்கும் நன்மைகளை நுகர்வோரிடம் கொண்டு சேர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**முன்மொழிந்த நாடுகள்**

- இந்தியா, ரஷ்யா, வங்கதேசம், கென்யா, நேபாளம், நைஜீரியா, செனகல்.
- ஆதரவு : ஐ.நாவின் சபையின் 193 உறுப்பு நாடுகள் அனைத்தும்.

**இந்தியாவுக்கான பெருமை**

- ஐ.நா.வின் அறிவிப்பு தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தனது கட்டுரைப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "சிறுதானியங்களை பிரபலப்படுத்துவதில் முன்னணியில் நிற்பதற்கு இந்தியா பெருமை கொள்கிறது. ஐ.நா.வின் அறிவிப்பானது ஊட்டச்சத்து மேம்பாடு, உணவுப் பாதுகாப்பு, விவசாயிகள் நலன் உள்ளிட்டவற்றை உறுதி செய்யும்.

**ஐ.நா :**

- **தலைமையகம்** – மேன்ஹட்டன் தீவு, நியூயார்க்
- **தொடங்கப்பட்ட ஆண்டு** – 1946.
- **தற்போதைய தலைவர்** – Volkan Bozkir (துருக்கி)
- **பதவிக்காலம்** – 1 ஆண்டு
- ஐ.நா. சபையின் முதல் பெண் தலைவர் – விஜயலட்சுமி பண்டிட்
- ஐ.நாவிற்கான இந்திய தூதர் – T.S.திருமூர்த்தி

## மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 139வது இடம்

- ஐ.நா. வெளியிட்டுள்ள மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் இந்தியா 139–வது இடத்தைப் பிடித்துள்ளது.
- "உலக மகிழ்ச்சி அறிக்கை 2021"–ஐ ஐ.நா அமைப்பு அண்மையில் வெளியிட்டது. 149 நாடுகளின் மக்கள் கடந்த ஆண்டில் எந்த அளவுக்கு மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்பது குறித்து ஆராய்ந்து, அந்த அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இந்தியா 139–வது இடத்தைப் பிடித்துள்ளது.
- மகிழ்ச்சிகரமான நாடுகள் பட்டியலில் ஃபின்லாந்து முதலிடத்தில் உள்ளது. அமெரிக்கா 19–வது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான், சீனா, வங்கதேசம் உள்ளிட்ட அண்டை நாடுகள் இந்தப் பட்டியலில் இந்தியாவை விட முன்னணியில் உள்ளன. போரால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தான், பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.
- சர்வதேச மகிழ்ச்சி நாள் 2021 மையக்கருத்து – "Happiness For All, Forever"

**ஐக்கிய நாடுகள் சபை**

- துவக்கம்:1945
- தலைமையிடம்: New York, USA
- தலைவர் : Antonio gutteres

## ஷாங்காய் அமைப்பு நாடுகளின் ராணுவப் பயிற்சி: இந்தியா, சீனா, பாகிஸ்தான் பங்கேற்க முடிவு

- இந்த ஆண்டு நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் பயங்கரவாத எதிர்ப்பு கூட்டு ராணுவப் பயிற்சியில் இந்தியா, சீனா, பாகிஸ்தான் ஆகியவை பங்கேற்கவுள்ளன.
- சர்வதேச அளவில் நேட்டோவுக்கு அடுத்தபடியாக பலம் வாய்ந்த கூட்டமைப்பாக கருதப்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியா, ரஷியா, சீனா, பாகிஸ்தான், கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய 8 நாடுகள் உள்ளன.
- கடந்த 18–ஆம் தேதி நடைபெற்ற ஷாங்காய் அமைப்பு நாடுகளின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கவுன்சில் கூட்டத்தில், அனைத்து நாடுகளும் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு கூட்டு ராணுவப் பயிற்சியை மேற்கொள்ள முடிவு செய்தன.
- பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் இந்தியாவும், பாகிஸ்தானும் கடந்த 2017–ஆம் ஆண்டு முழு நேர உறுப்பினராக இணைந்தன.

**ஷாங்காய் அமைப்பு (SCO)**

- தலைமையகம் – பெய்ஜிங் (சீனா)
- நிறுவப்பட்ட ஆண்டு – 2001
- ஷாங்காய் ஐந்து எனும் பெயரில் 1996ம் ஆண்டு ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை கொண்டு சீனாவில் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.
- 2005ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அஸ்தானா பிரகனத்தின் மூலம் SCO ஓர் பிராந்திய பாதுகாப்பு அமைப்பாக உருவானது.
- உறுப்பு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதே இந்த அமைப்பின் முக்கிய நோக்கம்.
- கூர்நோக்கு நாடுகளாக இருந்து வந்த இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு 2017ம் ஆண்டு ஜூன் மாதம் கஜகஸ்தான் தலைநகர் SCO மாநாட்டில் முழு உறுப்பினர் தகுதி வழங்கப்பட்டது.

## சாஹி திஷா பிரச்சாரம்

- ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டத்தால் சாஹி திஷா என்ற கிராமப்புற பெண்கள் தொழில்முனைவு மற்றும் வாழ்வாதாரம் குறித்த பிரச்சாரத்திற்காக துவங்கியுள்ளது.
- பெண்கள் வாழ்வாதாரத்திற்காகவும் தொழில் முனைவுகளிலும் சந்திக்கும் பிரச்சினைகள் குறித்த அனைவருக்கும் தெரிவிப்பதே இந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.

UNDP (ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டம்)

- துவக்கம் – 1965
- தலைமையிடம் – நியூயார்க் நகரம், அமெரிக்கா
- உள்ளடங்கிய வளர்ச்சி, சுற்றுச்சூழல் மற்றும் ஆற்றல், அரசு நிறுவனங்களை வலுப்படுத்துதல் போன்ற 3 மையக்கருத்துகளின் அடிப்படையில் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு திட்டம் இந்தியாவின் வளர்ச்சி திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

## சிறந்த வாழ்விற்கான 2021ம் ஆண்டு உலக மேம்பாட்டு அறிக்கை (World Development Report 2021: Data for Better lives)

- உலக வங்கி சிறந்த வாழ்விற்கான உலக மேம்பாட்டு அறிக்கை 2021ஐ வெளியிட்டுள்ளது.

- தரவுகள் தளம் ஏழைமக்களின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் பெற்றவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உலக வங்கி**

- தலைவர் – டேவிட் மால்பாசிஸ்
- தலைமையிடம் – வாஷிங்டன் DC, USA
- தோற்றம் – ஜுலை 1944, பிரிட்டன்வுட் மாநாடு

**உலக காற்று அறிக்கை 2021**

- 2020ம் ஆண்டு காற்று மின் உற்பத்திக்கு சிறந்த ஆண்டாக அமைந்துள்ளதாக உலக காற்று ஆற்றல் குழு தெரிவித்துள்ளது.
- உலக காற்று அறிக்கை – 2021ஐ உலக காற்று ஆற்றல் குழு வெளியிட்டுள்ளது.
- 2020ம் ஆண்டில் 93 ஜிகாவாட் காற்று மின் உற்பத்தி மையங்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

**உலக காற்று ஆற்றல் குழு:**

- தலைமையிடம் – புருஸல்லஸ், பெல்ஜியம்

# 1.4 சிறந்த நபர்கள்

## தமிழக பசுமை இயக்கத் தலைவர் மருத்துவர் ஜீவா காலமானார்

- தமிழக பசுமை இயக்கத் தலைவரும், மருத்துவருமான ஜீவா என்கிற வெ.ஜீவானந்தம் காலமானார். 'தமிழக பசுமை இயக்கம்" என்ற அமைப்பின் மூலம் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்னைகளில் தீவிரமாகச் செயல்பட்டவர்.
- திப்பு சுல்தான் குறித்து ஜீவா எழுதிய நூல், திப்பு சுல்தான் மீதான பிம்பத்தை மாற்றியது. 15–க்கும் மேற்பட்ட நூல்களை ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## அய்யா வைகுண்டர் அவதார தினம்: முதல்வர் வாழ்த்து

- அய்யா வைகுண்டர் அவதார தினத்தை முன்னிட்டு, முதல்வரும் அதிமுக இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி கே.பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை: சாமிதோப்பு அய்யா வைகுண்டரின் அவதார தினத்தையொட்டி ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 20–ஆம் தேதி அவதார தினம் கொண்டாடப்படுகிறது. அந்த வகையில் வியாழக்கிழமை (மார்ச்–4) அய்யாவின் 189–ஆவது அவதார தினம் கொண்டாடப்படுகிறது.

**வைகுண்ட சுவாமிகள் (1809–1851)**

- 1809–ல் தென் திருவிதாங்கூரில் சாஸ்தான் கோவில் விளை எனும் சிற்றூரில் பிறந்தார்
- சமூக நீதிக்காக அறப்போரில் ஈடுபட்டவர்களுள் ஒருவர்.
- இந்து மத உயர் வகுப்பினரின் எதிர்ப்பால் இவரது இயற்பெயரான முடிசூடும் பெருமாளை "முத்துக்குட்டி" என இவரது அன்னை மாற்றினார்.
- அவரது சீடர்கள் அவரை "அய்யா" என அழைத்தமையால், அவருடைய சமய வழிப்பாடு முறை "அய்யாவழி" என்றழைக்கப்படுகிறது.
- தனது போதனைகளில், திருவிதாங்கூர் சமூகத்தில் மரபு வழிப்பட்ட சாதிமுறையையும், ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து அதிக வரி வசூல் செய்யும் அரசையும் கடுமையாக விமர்சித்தார்
- அரசுக்கு எதிராகப் பேசினார் என்பதற்காக அவர் திருவிதாங்கூர் அரசரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**போதனைகள்**

- கடவுளுக்கு விலங்குகளைப் பலியிடும் பழக்கத்தை எதிர்த்தார்
- சாதியமுறையை எதிர்க்கும் அடையாளமாக தலைப்பாகை அணியும்படி வற்புறுத்தினார்
- அக்காலத்தில் தலைப்பாகை அணியும் உரிமை உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப் பட்டிருந்தது
- வழிபாட்டில் உள்ள தேவையற்ற சடங்குகளை கைவிடும்படி வேண்டினார்
- சமுதாயத்தில் நிலவிய பிறப்பினாலான சாதி வேறுபாட்டையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார்
- மக்களை அவர்களின் சமூக உரிமைக்காகவும் சுயமரியாதைக்காகவும் போராட ஒற்றுமைப் படுத்தினார்.

## தினமலர் முன்னாள் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி

- பிறப்பு – 1933 வடிவீஸ்வரம் (நாகர்கோவில்) (அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தானம்)
- பெற்றோர் – டி.வி.இராமசுப்பையா (தினமலர் நிறுவனர்) – கிருஷ்ணம்மாள்
- தினமலர் நாளிதழில் 2017 வரை 40 ஆண்டுகள் ஆசிரியராக இருந்தார்.
- இரா.கிருஷ்ணமூர்த்தி கடந்த 1933–ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் பிறந்தார். 1956–ல் தினமலர் நாளிதழில் தனது பயணத்தை தொடங்கிய அவர், கடந்த 1977–ல் "தினமலர்" ஆசிரியர் ஆனார்.
- நாளிதழில் தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை முதலில் நடைமுறைப்படுத்திய அவர், கணினியில் தமிழ் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் எழுத்துருக்களை உருவாக்கினார். தமிழ் வட்டெழுத்துகள் குறித்த ஆவணங்களை சேகரித்து தமிழில், "சேர நாட்டில் தமிழ் வட்டெழுத்து" "பிற்கால தமிழ் வட்டெழுத்து" என்பது உள்ளிட்ட 3 நூல்களை எழுதியுள்ளார்.

**நாணவியல் அறிஞர்:**

- நாணவியல் தொடர்பாக 30க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.
- பிரிட்டனில் உள்ள இலண்டன் ராயல் நாணயவியல் கழகம் இவரை சிறப்பிக்கும் வகையில் கௌரவ உறுப்பினராக அங்கீகரித்துள்ளது.
- தமிழ் நாளிதழில் தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை முதல் முதலில் மேற்கொண்டவர்.

**தொல்காப்பியர் விருது:**

- 2012–13க்கான தொல்காப்பியர் விருது குடியரசு தலைவரால் வழங்கப்பட்டது.
- **காரணம்** : தமிழ் செம்மொழி அந்தஸ்து பெற இவரது நாணயவியல் கண்டுபிடிப்புகளை தமிழக அரசு முக்கிய வரலாற்று ஆதாரமாக சமர்பித்தது.

## அறிவியல் தமிழறிஞர் இராம.சுந்தரம் காலமானார்

- தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவரும், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகத் தலைவரும், அறிவியல் தமிழறிஞருமான இராம.சுந்தரம் காலமானார்.
- 1981–ஆம் ஆண்டு முதல் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தமிழ் வளர்ச்சி இயக்குநராகவும், 1987 முதல் அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறைப் பேராசிரியராகவும், 1997 முதல் முதுநிலைப் பேராசியரியராகவும் பணியாற்றினார்.
- 10–க்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். மேலும், பதிப்பாசிரியராக இருந்து 35–க்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்துள்ளார். தமிழ், ஆங்கிலம், மலையாளம், போலிஷ் ஆகிய மொழிகளில் ஏறத்தாழ 200 கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். பல்வேறு அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

## உத்தரகாண்ட் புதிய முதல்வர் தீரத் சிங் ராவத் பதவியேற்பு

- ஆளுநர் – பேபி ராணி மௌரியா
- தலைநகர் – டேராடூன் (உத்தரகாண்ட்)
- முதல்வர் – தீரத் சிங் ராவத்

## சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவராக தாமஸ் பாச் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்

**சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி**

- துவக்கம் – 1894
- தலைமையிடம் – லுதியானா சுவிட்சர்லாந்து
- தலைவர் – தாமஸ் பாச்

## முதுபெரும் கதகளி நடனக் கலைஞர் சேமஞ்சேரி குஞ்ஞிராமன் மறைவு

- கேரளத்தில் முதுபெரும் கதகளி நடனக்கலைஞர் சேமஞ்சேரி குஞ்ஞிராமன் காலமானார்.
- கேரள மாநிலம் கோழிக்கோடு மாவட்டம் கொயிலாண்டி வட்டத்தில் உள்ள சேலியாவைச் சேர்ந்தவர் முதுபெரும் கதகளி நடனக் கலைஞர் சேமஞ்சேரி குஞ்ஞிராமன். கேரளத்தின் வடக்கு மலபார் பகுதியில் கதகளி கலை பரவச் செய்வதில் முக்கிய பங்காற்றினார்.
- கடந்த 2017–ஆம் ஆண்டு இவருக்கு மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்தது. இதுதவிர கேரள சங்கீத நாடக அகாதெமி விருது, கலாரத்னம் விருது, மயில்பீலி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ளார்.

## ஓவியர் – லக்ஷமன் பாய்

- பத்ம பூஷன் விருது பெற்ற புகழ்பெற்ற ஓவியர் லக்ஷமன் பாய் 95வது வயதில் காலமானார்.
- இவர் கோஷி மாநிலத்தை சேர்ந்தவர்.

## பி.எஸ்.குமாரசுவாமி நினைவு நாள்

- சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த பி.எஸ்.குமாரசுவாமி நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

## தான்சானியாவுக்கு முதல் பெண் அதிபர்

- கிழக்கு ஆப்பிரிக்க நாடான தான்சானியாவின் முதல் பெண் அதிபராக சமியா சுலுஹி ஹஸன் பதவியேற்றார்.

**தான்சானியா**

- தலைநகரம் – டோடோமா
- அதிபர் – சமீயா சுளுஹு ஹாசன்
- பிரதமர் – காசிம் மஜீலிவா
- நாணம் – தான்சானியன் ஷில்லாங்

## செபி அமைப்பின் முதல் தலைவர்

- SEBI (Securities Exchange Board of India)
- செபி 1988இல் இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது
- பங்குவர்த்தகம் சார்ந்த செயல்பாடுகளை ஒழுங்குபடுத்த இந்த அமைப்பு ஏற்படுத்தப்பது.
- 1992 இல் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்டரீதியிலான அமைப்பாக மாறிய பின்னர் இதன் முதல் தலைவராக ஜி வி ராமகிருஷ்ணா பணிபுரிந்தார்.

## உச்சநீதிமன்ற புதிய தலைமை நீதிபதி என்.வி.ரமணா

- உச்சநீதிமன்றத்தின்48–ஆவது தலைமை நீதிபதியாக என்.வி.ரமணாவை நியமிப்பதற்குத் தற்போதைய தலைமை நீதிபதி எஸ்.ஏ. போப்டே மத்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார்.
- உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக உள்ள எஸ்.ஏ.போப்டே, ஏப்ரல் 23–ஆம் தேதி பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.
- உச்சநீதிமன்றத்தில் தனக்கு அடுத்து மூத்த நீதிபதியாக உள்ள என்.வி.ரமணாவை புதிய தலைமை நீதிபதியாக நியமிப்பதற்கு எஸ்.ஏ.போப்டே பரிந்துரைத்துள்ளார்.
- விதிகளின்படி, உச்சநீதிமன்றத்தின் மூத்த நீதிபதியே தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டு வருகிறார்.
- உச்சநீதிமன்றத்தின் புதிய நீதிபதியாக குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- உச்சநீதிமன்றத்தின் 48–ஆவது தலைமை நீதிபதியாக என்.வி.ரமணா ஏப்ரல் 24–ஆம் தேதி பொறுப்பேற்பார்.
- 2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 26–ஆம் தேதி வரை என்.வி.ரமணா அப்பதவியில் நீடிப்பார். அவர் ஆந்திரத்தின் கிருஷ்ணா மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

## லெப்டினைட் ஜெனரல் பின்டோ

- 1971 பசந்தர் போரின் ஹீரோ என்று அழைக்கப்பட்ட ஓய்வுபெற்ற லெப்டினைட் ஜெனரல் பின்டோ போரில் இந்தியாவின் வெற்றிக்காக பாடுபட்டவர்.
- 1971ல் வங்கதேச நாடு உருவாக முக்கிய காரணமாக விளங்கியது பசந்தர்போர்.

## முன்னாள் ரிசர்வ் வங்கி துணை ஆளுநர் K.C. சக்ரவர்த்தி

- 2009ம் ஆண்டு முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் ரிசர்வ் வங்கியின் முன்னாள் துணை ஆளுநராக பணியாற்றிய K.C.சக்ரவர்த்தி சமீபத்தில் காலமானார்.

# 1.5 முக்கிய இடங்கள்

## சிம்ளிபால் உயிர்கோள பாதுகாப்பு வனப்பகுதியில் தீ விபத்து

- இந்தியாவின் மிகப்பெரிய உயிர்கோள பாதுகாப்பு பகுதிகளில் ஒன்றான ஒடிசா மாநிலத்தை சேர்ந்த சிம்ளிபால் உயிர்கோள பாதுகாப்பு பகுதியில் தீவிபத்து ஏற்பட்டுள்ளது
- யுனேஸ்கோவின் உயிர்கோள பாதுகாப்பு பகுதிகள் பட்டியலில் இந்த சிம்ளிபால் உயிர்கோள அமைப்பு இடம்பெற்றுள்ளது.

### வயநாடு வனவிலங்கு காப்பகம்

- வயநாடு வனவிலங்கு காப்பகம் (Wayanad Wildlife Sanctuary) என்பது இந்தியாவின் கேரள மாநிலம் வயநாடு மாவட்டத்தில் உள்ள விலங்குகள் சரணாலயமாகும்
- வயநாடு வனவிலங்கு சரணாலயம் பசுமையான காடுகளையும், வன உயிரினங்களையும் கொண்டுள்ள கேரளாவின் இரண்டாவது மிகப் பெரிய வனவிலங்கு சரணாலயமாகும்.
- 1973 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்தச் சரணாலயம் இப்போது நீலகிரி உயிர்க்கோளக் காப்பகத்தின் ஓர் உட்பகுதியாகும்.
- வடகிழக்கில் கர்நாடக மாநிலத்தின் பந்திப்பூர் தேசியப் பூங்கா மற்றும் நாகர்ஹோளே தேசியப் பூங்கா தென்கிழக்கில் தமிழ்நாட்டின் முதுமலை தேசியப் பூங்காவாலும் சூழப்பட்டுள்ளது.

## உலக தண்ணீர்

- அசாம் மாநிலம் கோலாகாட் மாவட்டத்தில் உள்ள காசிரங்கா தேசிய பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் யானை சவாரி செய்தனர்.

### காசிரங்கா தேசிய பூங்கா (அசாம்)

- 1908ம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- காசிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகம்.

## தால் ஏரி

- காஷ்மீரின் ஸ்ரீநகரில் அமைந்துள்ள புகழ்பெற்ற தால் ஏரி மாசடைந்து வருகிறது. ஏரி பகுதியில் அமைந்துள்ள மரங்கள் வெட்டப்பட்டு வருகின்றது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு வருகிறது. தால் ஏரியில் சிலர் மரங்களை வெட்டி படகில் எடுத்துச் சென்றனர். இந்த ஏரியை பாதுகாக்க வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

### தால் ஏரி (உவர் நீர் ஏரி)

- அமைவிடம்: ஜம்மு–காஷ்மீர் ஸ்ரீநகர் (கோடைகால தலைநகரம்).
- ஆசியாவின் மிகப்பெரிய நன்னீர் ஏரி ஊலர் ஏரியாகும். இது ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் அமைந்துள்ளது.

## சூயஸ் கால்வாய்

- எகிப்தில் உள்ள செயற்கைக் கால்வாய் ஆகும்.
- இது மத்தியதரைக் கடலையும் செங்கடலையும் இணைக்கிறது.
- 163 கி.மீ நீளமும் 300 மீ அகலமும் கொண்ட இக்கால்வாய் 1869 இல் திறக்கப்பட்டது.
- இக் கால்வாய் வெட்டப்பட்டமையால் ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்குமிடையிலான கப்பற்போக்குவரத்து மிக இலகுவானது. அதன் முன்னர் கப்பல்கள் ஆப்பிரிக்காவைச் சுற்றியே பயணிக்க வேண்டியிருந்தது.

# 1.6 விளையாட்டு

## உகாண்டா பாட்மிண்டன் வருண், மாளவிகாவுக்கு பட்டம்

- உகாண்டாவில் நடைபெற்ற சர்வதேச பாட்மிண்டன் போட்டியில் இந்திய இளம் போட்டியாளர்களான வருண், கபூர், மாளவிகா பன்சோத் ஆகியோர் சாம்பியன் ஆகினர்.

## ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா புதிய சாதனை

- ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 88.07 மீ. தூரம் ஈட்டி எறிந்து புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.
- 24–ஆவது இந்திய கிராண்ட்ப்ரீ தடகளப் போட்டிகள் பஞ்சாப் மாநிலம், பாட்டியாலாவில் நடைபெற்று வருகின்றன.
- இதில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆடவர் ஈட்டி எறிதலில் பங்கேற்ற நீரஜ் சோப்ரா, தனது 5–ஆவது வாய்ப்பில் 88.07 மீ. தூரம் ஈட்டி எறிந்தார்.
- 2018 ஆசிய விளையாட்டுப் போட்டியில் அவர் 88.06 மீ. தூரம் ஈட்டி எறிந்ததே தேசிய சாதனையாக இருந்தது. தற்போது அந்தச் சாதனையை முறியடித்துள்ளார்.

### நீரஜ் சோப்ரா

- ஹரியானா மாநிலம் பானிபட்டை சேர்ந்தவர்.

## சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைவின் பொறுப்பில் மேரிகோம்

- 6 முறை உலக சாம்பியன் பட்டம் வென்ற குத்துச்சண்டை வீரர் மேரிகோம் சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைவின் சாம்பியன்கள் மற்றும் முன்னோடிகளின் கூட்டமைவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சர்வதேச மல்யுத்தம் – சரிதாவுக்கு (இந்தியா) வெள்ளி

- போட்டி – மேட்டியோ டெலிகோன்
- தரவரிசை நடைபெறும் இடம் – இத்தாலி தலைநகர் ரோம்
- ஆடவர் 72 கிலோ எடைப்பிரிவு கிரக்கோ ரோமன் பிரிவில் இந்தியாவை சேர்ந்த குல்தீப் வெண்கலம் பெற்றார்.

## சர்வதேச மல்யுத்தம்: வினேஷுக்கு தங்கம்

- மேட்டியோ பெலிகோன் தரவரிசை சர்வதேச மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் வினேஷ் போகாட் மகளிருக்கான 53 கிலோ பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். இந்த வெற்றியின் மூலம் தரவரிசையில் உலகின் முதல்நிலை வீராங்கனை இடத்தையும் அவர் எட்டினார்.

## ஸ்விஸ் ஓபன்: இறுதிச்சுற்றில் சிந்துவுக்கு இரண்டாம் இடம்

- ஸ்விஸ் ஓபன் பாட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி.சிந்து மகளிர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் தோல்வி கண்டார்.
- நடப்பு உலக சாம்பியனான சிந்து, அந்தச் சுற்றில் ஒலிம்பிக்கில் தங்கம் வென்றவரான ஸ்பெயினின் கரோலினா மரினிடம் வீழ்ந்தார்.
- ஒட்டுமொத்தமாக இத்துடன் 8 முறை கரோலினாவை சந்தித்துள்ள சிந்துவுக்கு இது 5–ஆவது தோல்வியாகும்.

## சர்வதேச மல்யுத்தம் தங்கம் வென்றார் பஜ்ரங் புனியா

- இத்தாலியில் நடைபெற்ற மேட்டியோ பெலிகோன் தரவரிசை சர்வதேச மல்யுத்தப் போட்டியில் ஆடவருக்கான 65 கிலோ பிரிவில் இந்தியாவின் பஜ்ரங் புனியா தங்கப் பதக்கம் வென்றார். இதன் மூலம் சர்வதேச தரவரிசையில் அவர் மீண்டும் முதலிடம் பிடித்தார்.
- இப்போட்டியில் ஆடவருக்கான 70 கிலோ பிரிவில் இந்தியாவின் விஷால் காளிரமணா வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் கஜகஸ்தானின் சிர்பாஸ் தல்காத்தை 5–1 என்ற கணக்கில் வீழ்த்தி பதக்கம் வென்றார்.
- நடைபெற்ற இடம் – இத்தாலி (ரோம்)
- 65 கிலோ பிரிவு இறுதிசுற்றில் மங்கோலியாவின் துல்கா துமுர் ஆசிரை வென்று பஜ்ரங் புனியா தங்கம் வென்றார்.
- இவர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

**காளி ரமணாவுக்கு வெண்கலம்:**

- இப்போட்டியில் ஆடவருக்கான 70 கிலோ பிரிவில் இந்தியாவின் விஷால் காளிரமணா கஜகஸ்தான் சிர்பாஸ் தல்காதை வீழ்த்தி வெண்கலம் வென்றார்.
- மேட்டிமோ பெலிகான் தரவரிசை போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்கள்
  - தங்கம் – 3
  - வெள்ளி – 1
  - வெண்கலம் – 4

## தேசிய சிலம்பப் போட்டி திருவள்ளூர் மாணவர்களுக்கு தங்கம், வெண்கலம்

- அகில இந்திய சிலம்பம் கூட்டமைப்பு சார்பில் 17–ஆவது தேசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டி கன்னியாகுமரியில் உள்ள உள்விளையாட்டு அரங்கத்தில் இரு நாள்களுக்கு முன் நடைபெற்றது. இதில் மினி சப்–ஜுனியர், சப் ஜுனியர், ஜுனியர், சீனியர் ஆகிய பிரிவுகளில் இப்போட்டி நடைபெற்றது.
- இதில் புதுதில்லி, பஞ்சாப், மகாராஷ்டிரம், ஆந்திரம், தமிழ்நாடு, கேரளம், உத்தர பிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து 700–க்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இதில் ஒற்றை கம்பு வீச்சு, இரட்டை கம்பு வீச்சு, ஒற்றைவாள் வீச்சு, இரட்டை வாள் வீச்சு, இரட்டை சுருள் வாள் வீச்சு, வேல் கம்பு வீச்சு, மான்கொம்பு வீச்சு உள்ளிட்ட நேரடி போட்டிகள் நடைபெற்றன.
- இப்போட்டியில் தமிழக தரப்பிலிருந்து திருவள்ளூர் மாவட்ட வீர அபிமன்யு சிலம்ப அகாதெமி மாணவர்கள் பங்கேற்றனர். இதில் மாணவி எஸ்.யேமாவதி தங்கப் பதக்கமும், மாணவர்கள் என்.அமீஷ், பி.யுவன், பி.ஏ.அக்ரிஷ், எஸ்.கோகுல், ஜி.பிரகதீஷ் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

## பிபிசி யின் இந்தியாவின் ஆண்டின் சிறந்த விளையாட்டு வீராங்கனை

- உலக விரைவு செஸ் சாம்பியன் கோனேரு ஹம்பி இந்தியாவின் ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அஞ்சு பாபி ஜார்ஜ் அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- கிரிக்கெட் வீரர் பென் ஸ்டோக்ஸ் மற்றும் துப்பாக்கி சூடு வீரர் மனுபாகர் ஆகியோர் வளர்ந்துவரும் வீரர்களாக அறியப்படுகின்றனர்.

## சர்வதேச போட்டிகளில் 10000 ரன்களை கடந்த முதல் இந்திய பெண்

- சர்வதேச போட்டியின் அனைத்து வகையிலான போட்டிகளிலும் சேர்த்து 10000 ரன்களை கடந்த முதல் இந்திய பெண் மித்தாலி ராஜ் ஆவார்.

## துபை ஓபன்: முகுருஸா சாம்பியன்

- துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஸா சாம்பியன் ஆனார். கடந்த 2019–ஆம் ஆண்டுக்குப் பிறகு இவர் பட்டம் வெல்வது இது முதல் முறையாகும்.
- முகுருஸாவின் டென்னிஸ் வாழ்க்கையில் இது அவரது 8–ஆவது ஒற்றையர் பட்டம். அதில் இரு கிராண்ட்ஸ்லாம் பட்டங்களும் அடக்கம். துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றிருந்த முகுருஸா, அதில் செக் குடியரசின் பார்போரா கிரெஸ்சிகோவாவை வென்று சாம்பியன் ஆனார்.

## விஜய் ஹஸாரே கோப்பை

- விஜய் ஹஸாரே கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மும்பை அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் உத்தர பிரதேச அணியை வீழ்த்தி சாம்பியன் ஆனது. அந்த அணி 4–ஆவது முறையாக கோப்பை வென்றுள்ளது.

## ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்று பவானி தேவி சாதனை

- தமிழக வாள்வீச்சு வீராங்கனை பவானி தேவி டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார். இதன் மூலம், ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெற்ற இந்தியாவின் முதல் வாள் வீச்சு போட்டியாளர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

## ■ ஈட்டி எரிதலில் தேசிய சாதனை புரிந்த அனுராணி

- தேசிய ஈட்டி எரிதல் சாம்பியன் போட்டியில் 63.24 மீட்டர் தூரம் எறிந்து புதிய தேசிய சாதனையை புரிந்தார். ஒலிம்பிக் தகுதிக்கான அளவீடாக 64 மீட்டர் குறிக்கப்பட்டு உள்ளது.

## உயரம் தாண்டுதலில் தகுதி பெற்ற ஸ்ரீசங்கர்

- தேசிய பெடரேஷன் உயரம் தாண்டுதலில் சாதனை புரிந்த ஸ்ரீசங்கர் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

## தேசிய டேபிள் டென்னிஸ்: தியா, ஸ்வஸ்திகா சாம்பியன்

- தேசிய ஜூனியர் மற்றும் இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் ஸ்வஸ்திகா கோஷ், தியா சிதாலே ஆகியோர் சாம்பியன் ஆகினர்.
- முன்னதாக அரையிறுதிகளில் மகாராஷ்டிரத்தின் தியா சிதாலே 11–8, 11–8, 11–4, 11–9 என்ற செட்களில் உத்தர பிரதேசத்தின் ராதாபிரியா கோயலை வென்றார். கர்நாடகத்தின் யஷஸ்வினி கோர்படே 7–11, 11–3, 11–6, 11–8, 11–4 என்ற செட்களில் மகாராஷ்டிரத்தின் அனன்யா பாசக்கை வீழ்த்தினார்.
- பின்னர் நடைபெற்ற இறுதிச்சுற்றில் தியா சிதாலே யஷஸ்வினி கோர்படேவை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.
- அதேபோல் ஜூனியர் பிரிவில் நடைபெற்ற அரையிறுதிச் சுற்றுகளில் தில்லியின் ஸ்வஸ்திகா கோஷ் தில்லியைச் சேர்ந்த லக்ஷிதா நரங்கை வென்றார். ஹரியாணாவின் சுஹானா சைனி தமிழகத்தின் நித்யஸ்ரீ மணியை வீழ்த்தினார்.
- இறுதிச்சுற்றில் ஸ்வஸ்திகா கோஷ் சுஹானா சைனியை தோற்கடித்து சாம்பியன் ஆனார்.

## தேசிய சீனியர் தடகளம்: தமிழகத்துக்கு இரு தங்கம்

- ஃபெடரேஷன் கோப்பை சீனியர் தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்துக்கு இரு தங்கப் பதக்கம் கிடைத்தது.
- ஆடவருக்கான 110 மீட்டர் தடை தாண்டுதலில் தமிழகத்தின் பி.வீரமணி (14.57 விநாடிகள்) முதலிடம் பிடித்தார்.
- மகளிருக்கான 100 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் தமிழகத்தின் சி.கனிமொழி 13.63 விநாடிகளில் இலக்கை எட்டி தங்கம் வென்றார்.

## தேசிய தடைத்தாண்டுதல் போட்டியில் சாதனை

- தேசிய தடைத்தாண்டுதல் ஒட்ட போட்டியில் புதிய சாதனை புரிந்த தேசிய தடைத்தாண்டுதல் ஒட்டப் போட்டியில் அவினாஷ் சாப்லே புதிய சாதனையை செய்துள்ளார்.
- ஃபெடரேஷன் கோப்பை தேசிய விளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் தடைத்தாண்டுதல் ஒட்ட போட்டியில் புதிய தேசிய சாதனை புரிந்து ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றார்.

## டி20 போட்டிகளில் 3000 ரன்களை கடந்த விராட் கோலி

- சர்வதேச டி20 போட்டிகளில் 75 போட்டிகளில் 3000 ரன்களை கடந்த முதல் வீரராக விராட் கோலி உருவாகி உள்ளார். சர்வதேச போட்டிகளில் 12000 ரன்களைக் கடந்த 3வது கேப்டனாக விராட்கோலி, நிக்கி பாண்டிங் மற்றும் கிரோமி ஸ்மித்திற்கு அடுத்த நிலையில் உள்ளார்.

## ஒலிம்பிக் போட்டிக்கு கமல்பிரீத் கவுர் தகுதி

- 24வது பெடரேஷன் கோப்பை சீனியர் தடகள சாம்பியன்ஷிப் பஞ்சாப் மாநிலம் பாட்டியாலாவில் நடைபெற்று வருகிறது. இதில் நடைபெற்ற மகளிருக்கான வட்டு எறிதலில் கமல்பிரீத் கவுர் 65.06 மீட்டர் தூரம் எறிந்து தேசிய சாதனை படைத்ததுடன் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கும் தகுதி பெற்றார்.
- இதற்கு முன்பு கிருஷ்ணா பூனியா கடந்த 2012-ம் ஆண்டு 64.76 மீட்டர் தூரம் எறிந்ததே சாதனையாக இருந்தது. இதை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.

## உலக துப்பாக்கிச்சூடு சாம்பியன்ஷிப் போட்டி

- உலக துப்பாக்கிச்சூடு சாம்பியன்ஷிப் போட்டிகளில் இறுதிப் போட்டிக்கு அஞ்சும் இரண்டாம் இடம் பெற்று தகுதி பெற்றுள்ளார்.
- இந்த போட்டிகள் துக்ளகாபாத்தில் நடைபெற்று வருகிறது.

## உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் தேஷ்வாலுக்கு தங்கம்

- உலக கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவின் யாஷாஸ்வினி சிங் தேஸ்வால் தங்கமும், மானுபாக்கர் வெள்ளியும் வென்றுள்ளார்.
- தில்லியில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் மகளிர் 10மீ. ஏர் ரைபிள் பிரிவில் பங்கேற்ற யாஷாஸ்வினி சிங் தேஸ்வால் 238.8 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து தங்கம் வென்றார். இதே பிரிவில் பங்கேற்ற மற்றொரு இந்திய வீராங்கனையான மானு பாக்கர் 236.7 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

## சரத்–மணிகா ஜோடி ஒலிம்பிக்கிற்கு தகுதி

- டோக்கியோ ஒலிம்பிக்கில் டேபிள் டென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாட இந்தியாவின் சரத் கமல்–மணிகா பத்ரா ஜோடி தகுதி பெற்றுள்ளது.

## முதல் ஏடிபி டூர் பட்டம் வென்றார் அஸ்லான்

- துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் ரஷியாவின் அஸ்லான் கராட்சேவ் சாம்பியன் ஆனார். இது அவரது முதல் ஏடிபி டூர் பட்டமாகும்.
- இந்த வெற்றியின் மூலம் கடந்த 1997க்கு பிறகு துபை ஓபன் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற முதல் வைல்டுகார்டு வீரர் என்ற பெருமையை பெற்றார்.

## தேசிய டென்னிஸ்: அர்ஜுன், ராஷ்மிகா சாம்பியன்

- தி புராஜெக்ட் டென்னிஸ் ஹார்டுகோர்ட் தேசிய சாம்பியன்ஷிப் போட்டியில் அர்ஜுன் காதே, ராஷ்மிகா பாமிடிபடி ஆகியோர் தங்களது பிரிவில் சாம்பியன்கள் ஆகினர்.
- நடைபெற்ற இடம் : குருகிராம்
- அர்ஜுன் காதே – மகாராஷ்டிரா
- ராஷ்மிகா பாமிடிபடி – தெலுங்கானா

## ரஷ்யாவில் நடைபெற்ற செண்ட் பீட்டர்ஸ்பர்க் மகளிர் டென்னிஸ் போட்டியில் ரஷ்யாவின் டரியா காட்கினா சாம்பியன்

- ரஷியாவில் நடைபெற்ற செண்ட் பீட்டர்ஸ்பர்க் மகளிர் டென்னிஸ் போட்டியில் சாம்பியன் ஆன ரஷியாவின் டரியா கசாட்கினா. இறுதிசுற்றில் அவரை எதிர்கொண்ட சக நாட்டவரான மார்கரிடா கஸ்பாரினா, 6–3, 2–1 என்ற செட்களில் பின்தங்கியிருந்த போது போட்டியிலிருந்து விலகியதால், கசாட்கினா சாம்பியன் ஆனார். இது நடப்பு சீசனில் அவரது 2–ஆவது பட்டமாகும்.

## சர்வதேச குத்துச்சண்டை

- சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் நிகர் ஜரீன், கௌரவ் சோலங்கி ஆகியோர் வெண்கலப் பதக்கம் வென்றனர்.
- துருக்கியின் இஸ்தான்புல் நகரில் பாஸ்போரஸ் சர்வதேச குத்துச்சண்டை போட்டி நடைபெற்று வருகிறது.

## உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் இந்திய ஆடவர், மகளிர் அணிக்கு தங்கம்

- சர்வதேச துப்பாக்கி சுடுதல் விளையாட்டு கூட்டமைவின் உலகக்கோப்பை 2021ஆம் ஆண்டு போட்டிகள் கர்னீசிங் துப்பாக்கி சுடும் தளம் புதுதில்லியில் நடைபெற்று வருகிறது.
- உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் அணிகள் பிரிவில் ஆடவர் மற்றும் மகளிர் என இரு பிரிவிலுமே இந்தியா தங்கம் வென்றது.
- உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி தில்லியில் நடைபெற்று வருகிறது. இதில் போட்டியில் ஆடவர் அணிகளுக்கான 10 மீட்டர் ஏர் பிஸ்டலில் இந்தியாவின் சௌரவ் சௌதரி, அபிஷேக் வர்மா, ஷாஸார் ரிஸ்வி ஆகியோர் அடங்கிய அணி 17 ஷாட்களுடன் முதலிடம் பிடித்தது.
- உலக தரவரிசையில் முதலிடத்தில் உள்ள இந்திய துப்பாக்கி சுடும் வீரர் திவ்யான் சிங் பன்வார் வெண்கலப் பதக்கம் வென்றார்.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் கலப்பு அணிகளில் இந்தியாவுக்கு 2 தங்கம்

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் 10 மீட்டர் ஏர் பிஸ்டல் மற்றும் 10 மீட்டர் ஏர் ரைஃபிள் பிரிவுகளில் இந்தியாவின் கலப்பு அணிகள் தங்கப் பதக்கம் வென்றன. அதே போல் ஆடவர் ஸ்கீட் அணிகள் பிரிவிலும் இந்தியர்கள் முதலிடம் பிடித்தனர்.
- இப்போட்டியில் நிலவரப்படி இந்தியா 6 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் என 14 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- 10 மீட்டர் ஏர் ரைஃபிள் கலப்பு அணிகள் பிரிவில் தங்கம் வென்ற இளவேனில் வாலறிவன், திவ்யான்ஷ் சிங் பன்வர்.

## உலக பாரா தடகள துப்பாக்கி சுடுதல் போட்டி

- உலக பாரா தடகள துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் சிங் ராஸ் 10 மீட்டர் எர் பிஸ்டர் எஸ்ஹெச்1 பிரிவில் தங்கப் பதக்கம் வென்றார். அந்தப் பிரிவில் மற்ற இந்தியர்களான மணீஷ் நர்வால் 4–ஆம் இடமும், ராகுல் ஜகார் 8–ஆம் இடமும் பிடித்தனர்.
- 31வது சீனியர் தேசிய வாள்வீச்சு சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் பிரிவில் சல்வீசஸ் அணியும், மகளிர் பிரிவில் கேரளா அணியும் சாம்பியன் பட்டத்தை தக்கவைத்தன.

## கேலோ இந்தியா

- மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் நல அமைச்சகம் கேலோ இந்தியா விளையாட்டு போட்டிகளுக்கான திட்டத்தை 2021–22 முதல் 2025–26 ஆண்டு வரை நீட்டித்து உள்ளது.

**கேலோ இந்தியா**

- இந்திய விளையாட்டு துறையை அடிநிலையிலிருந்து வலுப்படுத்தி சர்வதேச போட்டியில் பங்கேற்றவை ஊக்குவிக்க 2016–17ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் அங்கத்–கனிமத் ஜோடிக்கு தங்கம்

- தில்லியில் நடைபெறும் உலகக்கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் அங்கத் வீர்சிங் பாஜ்வா, கனிமத் சிகோன் இணை தங்கப் பதக்கம் வென்றது.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் தங்கம் வென்றனர் சிங்கி யாதவ், ஐஷ்வரி பிரதாப் தோமர்

- துப்பாக்கி சுடுதல் போட்டியில் மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் சிங்கி யாதவும், ஆடவருக்கான 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் பிரிவில் ஐஷ்வரி பிரதாப் தோமரும் தங்கப்பதக்கம் வென்றனர்.
- மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் முதல் 3 இடங்களையும் இந்திய வீராங்கனைகளே பிடித்தனர். இளம் வீராங்கனை சிங்கி யாதவ் 32 புள்ளிகளுடன் தங்கம் வெல்ல அனுபவமிக்க வீராங்கனை ராஹி சர்னோபாத் 30 புள்ளிகளுடன்

வெண்கலப் பதக்கத்தையும் தனதாக்கினார். மூவரும் ஏற்கெனவே டோக்கியோ ஒலிம்பிக்கிற்கு தகுதி பெற்றுவிட்டது குறிப்பிடத்தக்கது.

- மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் முதல் 3 இடங்களைப் பிடித்த இந்திய வீராங்கனைகளுடன் மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிரன் ரிஜிஜீ.

## தொடங்கியது டோக்கியோ ஒலிம்பிக் ஜோதி ஓட்டம்

- ஜப்பானின் டோக்கியோ நகரில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கான ஜோதி ஓட்டம் தொடங்கியது.
- ஜப்பானின் ஃபுருஷிமா நகரில் தொடங்கிய இந்த ஓட்டம், ஒலிம்பிக் போட்டியின் தொடக்க நாளான ஜுலை 23–ஆம் தேதி டோக்கியோ நகரில் நிறைவடைகிறது.
- 2011–இல் உலகக் கோப்பையை வென்ற ஜப்பான் மகளிர் கால்பந்து அணியைச் சேர்ந்த வீராங்கனை அஸுசா இவாஷிமிஸு முதல் நபராக ஜோதியை ஏந்தி ஒட்டத்தை தொடங்கினார்.
- போட்டி தொடக்க நாள் – ஜுலை 23
- நிறைவடையும் நாள் – ஆகஸ்ட் 8

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் இந்தியாவுக்கு மேலும் ஒரு தங்கம், வெள்ளி

- மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் அணிகள் பிரிவில் இந்தியாயவின் சிங்கி யாதவ், மானு பாக்கர், ராஹி சர்னோபாத் ஆகியோர் 17 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தனர்.
- இப்போட்டியில் நிலவரப்படி இந்தியா, புள்ளிகள் பட்டியலில் 10 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலம் என 21 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.
- மகளிருக்கான 25 மீட்டர் பிஸ்டல் மற்றும் 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் அணிகள் பிரிவில் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனைகள்.

## உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல்: வெள்ளி வென்றார் விஜய்வீர் சித்து

- உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் ஆடவருக்கான 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் இந்தியாவின் விஜய்வீர் சித்து வெள்ளிப்பதக்கம் வென்றார்.
- தில்லியில் 8–வது நாளாக நடைபெற்ற இந்தப் போட்டியில் 25 மீட்டர் பிஸ்டல் இறுதிச்சுற்றில் விஜய்வீருக்கும், எஸ்டோனியாவின் பீட்டர் ஆலெஸ்குக்கும் கடுமையான போட்டி நிலவியது. ஒரு கட்டத்தில் ஆலெக்ஸ் முன்னேற்றம் பெற்று தங்கம் வென்றார். விஜய்வீர் சித்துவுக்கு 2–ஆம் இடம் கிடைத்தது.
- இதில் ஆடவருக்கான 50 மீட்டர் 3 பொசிஷன்ஸ் அணிகள் பிரிவில் இந்தியாவின் நீரஜ் குமார், ஸ்வப்னில் குசேல், செயின் சிங் கூட்டணி 47 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்து தங்கத்தை தனதாக்கியது.
- 50 மீட்டர் ரைஃபிள் 3 பொசிஷன்ஸ் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் சஞ்சீவ் ராஸ்புத், தேஜஸ்வினி சாவந்த் இணை 31 புள்ளிகளுடன் தங்கம் வென்றது.
- இப்போட்டியின் நிலவரப்படி இந்தியா 12 தங்கம், 7 வெள்ளி, 6 வெண்கலம் என 25 பதக்கங்களுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

## உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடுதல் விஜய்வீர்–தேஜஸ்வினி ஜோடிக்கு தங்கம்

- உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் 25மீ. ரேபிட் ஃபயர் பிஸ்டல் கலப்பு அணிகள் பிரிவில் இந்தியாவின் விஜய்வீர் சித்து–தேஜஸ்வினி ஜோடி தங்கம் வென்றது.
- இந்த போட்டிகள் தில்லியில் நடைபெற்று வருகிறது.

## உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல்

- உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் இந்தியாவுக்கு மேலும் இரு தங்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.
- தில்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் தொடக்கநாள் முதலே ஆதிக்கம் செலுத்திய இந்திய அணி, கடைசி நாளில் இரு தங்கம், ஒரு வெள்ளியை வென்றதோடு 30 பதக்கங்களுடன் பதக்க பட்டியலிலும் முதலிடத்தைப் பிடித்தது.
- இந்தப் போட்டியில் இந்தியா 15 தங்கம், 9 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 30 பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்தது.

# 1.7 புத்தகங்கள் மற்றும் எழுத்தாளர்கள்

### ஆங்கிலத்தில் கான் அப்துல் காபரின் சுயசரிதை

- பிராண்டியர் காந்தி என அழைக்கப்பட்ட கான் அப்துல் காபரின் சுயசரிதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு The Frontier Gandhi: My life and struggle என்ற பெயரில் வெளியிட்டுள்ளது.
- இம்தியாஸ் அகமது சாகிப்சடா ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

### கீதை உபதேசம் அன்றாட வாழ்க்கைக்கு அவசியம்

- பகவத் கீதையில் சொல்லப்பட்ட உபதேசங்கள் அனைத்தும் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமானவை என பிரதமர் மோடி கருத்து தெரிவித்துள்ளார்.
- ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவன நிறுவனர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் எழுதிய "ஸ்ரீமத் பகவத் கீதை" (ஆங்கில உரை) 5,00,001–வது இ–புத்தக பிரதியை இணைய வழி வெளியிடும் நிகழ்ச்சி தமிழகத்தில் 16 மையங்களில் நடந்தன.
- மதுரை மாவட்டம் திருவேடகம் விவேகாந்தா கல்லூரியில் உள்ள ஸ்ரீராம கிருஷ்ண தபோவனம். இங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் செயலாளர் சுவாமி விவேகானந்தா, குலபதி அத்தியமானந்தா, கல்லூரி முதல்வர் டாக்டர் வெங்கடேசன், துணை முதல்வர் பார்த்தசாரதி மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- ராமகிருஷ்ண தபோவனத்தின் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் "ஸ்ரீமத் பகவத் கீதை" இ–புத்தகம் மூலம் கீதை பற்றிய விரிவான விளக்கவுரை அளித்துள்ளார். ராமகிருஷ்ண தபோவனத்தின் செயல்பாடுகள் அளப்பரியது.
- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் எழுதிய இந்த புத்தகம் 5 லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்றுள்ளது. மேலும், அனைவரும் பலன் பெறும் வகையிலும் இணைய வழி புத்தகமாகவும் அமைந்திருப்பது மிகச் சிறப்பானதாகும்.

### My life in full: work, family and our Future

- புத்த பூஷன் விருது பெற்ற இந்திரா நூயி எழுதியுள்ள My life in full: work, family and our Future என்ற புத்தகத்தை வெளியிட திட்டமிட்டுள்ளார்.

**இந்திரா நூயி**

- 24 ஆண்டுகள் பெப்சி நிறுவனத்தில் பணியாற்றியவர்.

# 1.8 விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### முதியோர் நல மருத்துவர் நடராசனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

- இந்திய வம்சாவளி மருத்துவர்கள் மாநாட்டில், முதியோர் நல மருத்துவர் வ.செ.நடராசனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.
- முதியோர் நல மருத்துவர் வ.செ.நடராசனுக்கு, முதியோர் நலத் துறையில் கடந்த 40 ஆண்டுகளாக சேவை செய்ததற்காக 'வாழ்நாள் சாதனையாளர்' விருது வழங்கப்பட்டது.

### திருப்பூர் சக்தி விருதுகள் அறிவிப்பு

- திருப்பூர் முத்தமிழ்ச் சங்கம், கனவு இலக்கிய அமைப்பு ஆகியன சார்பில் 17–ஆம் ஆண்டு திருப்பூர் சக்தி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன
- திருப்பூர் கனவு இலக்கிய அமைப்பு சார்பில் ஒவ்வோர் ஆண்டும் எழுத்தாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிறதுறையைச் சேர்ந்தவர்களுக்கு சக்தி விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- மும்பை புதிய மாதவி, புதுவை ராஜலட்சுமி, சென்னை தேவகிராம லிங்கம், பொற்கொடி, வான்மதி, பொள்ளாச்சி கிருத்திகா, கோவை பிரபாவதி சுகுமார், மங்கை, அறச் செல்வி, மதுரை அம்பிகாவர்ஷினி, காரைக்குடி பா. தென்றல், திருப்பூர் மாவட்டம், கொடுவாய் கமலம் சுப்பிரமணியம், திருப்பூர் சரஸ்வதி உள்ளிட்ட பலருக்கு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

### பிரதமர் மோடிக்கு "சர்வதேச எரிசக்தி சுற்றுச்சூழல் தலைமை விருது"

- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்ததற்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு "செராவீக் சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் தலைமை விருது" வழங்கப் பட்டுள்ளது.

- அமெரிக்காவின் கேம்பிரிட்ஜ் எரிசக்தி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் இந்த விருது வழங்கப்பட்டது.

## சர்வதேச திரைப்பட கூட்டமைப்பு பெடரேஷனில் அமிதாப்பச்சனுக்கு விருது

- பெல்ஜிய தலைவர் புருஸலஸில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட கூட்டமைவின் விழாவில் இந்தியாவின் பழம்பெரும் நடிகர் அமிதாப்பச்சன் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டார். இந்த விருதைப் பெறும் முதல் இந்தியர் இவராவர்.

## உலக பொருளாதார மன்றத்தில் – தீபிகா படுகோன்

- உலக பொருளதார மன்றத்தின் இளம் உலக தலைவர் பட்டியலில் இந்திய நடிகை தீபிகா படுகோன் இணைக்கப்பட்டுள்ளார்.
- உலக பொருளாதார மன்றம் (WEF)
- உருவாக்கம் – 1971
- தலைமையிடம் – சுவிட்சர்லாந்து
- தலைவர் – கிளாஸ் ஷ்வாப்

## உலக தலைசிறந்த பெண்கள் விருது

- தெலுங்கானா மாநில ஆளுநர் தமிழிசை சவுந்தராஜன் உலகின் தலைசிறந்த 20 பெண்கள் என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.

## சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிப்பு இமையம், வீரப்ப மொய்லி உள்ளிட்டோருக்கு விருது

- 2020–ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதில், தமிழில் "செல்லாத பணம்" நாவலை எழுதிய எழுத்தாளர் இமையம், கன்னடத்தில் "ஸ்ரீபாகுபலி அஹிம்சா திக்விஜயம்" பெருங்கவிதை நூலை எழுதிய முன்னாள் மத்திய அமைச்சர் வீரப்ப மொய்லி, ஆங்கிலத்தில் "வென் காட் இஸ் எ டிராவலர்" என்ற கவிதை நூலை எழுதிய அருந்ததி சுப்பிரமணியம் உள்பட 20 பேருக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
- 7 கவிதை நூல்கள், 4 நாவல்கள், 5 சிறுகதை தொகுப்புகள், 2 நாடகங்கள், ஒரு பெருங்கவிதை நூல், ஒரு அனுபவ நூல் என மொத்தம் 20 மொழிகளில் வெளியான 20 நூல்கள் சாகித்ய அகாதெமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- நாவல்களுக்காக, இமையம் (தமிழ்), நந்த கரே (மராத்தி), மகேஷ் சந்திர சர்மா கௌதம் (சமஸ்கிருதம்), ஹுசைன் அல் ஹேக் (உருது) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- சிறுகதை தொகுப்புகளுக்காக, அபூர்வ குமார் சைகியா (அஸ்ஸாமி), தரணிதர் ஒவாரி (போடோ), ஹிதய் கொல் பாரதி (காஷ்மீரி), காமாகாந்த் ஜா (மைதிலி) குருதேவ் சிங் ரூபனா (பஞ்சாப்) ஆகியோர் தேர்வாகியுள்ளனர்.
- கவிதை நூல்களுக்காக, அருந்ததி சுப்பிரமணியம் (ஆங்கிலம்), ஹரீஷ் மீனாட்சி (குஜராத்தி), அனாமிகா (ஹிந்தி), ஆர்.எஸ்.பாஸ்கர் (கொங்கனி), இருங்பாம் தேவன் (மணிப்பூரி), ரூப்சந்த் ஹன்ஸ்டா (சந்தாலி), நிகிலேஷ்வர் (தெலுங்கு) ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- நாடக நூல்களுக்காக, கியான் சிங் (டோக்ரி), ஜேதோ லால்வன் (சிந்தி) ஆகிய இருவருக்கும் விருது வழங்கப்படவுள்ளது.
- அனுபவக் குறிப்பு நூலுக்காக, வங்க மொழி எழுத்தாளர் மணிசங்கர் முகோபாத்யாய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சாகித்ய அகாதெமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்களுக்கு ரூ.1 லட்சம் ரொக்கத்துடன் தாமிர கேடயம் பரிசளிக்கப்படும்.

### எழுத்தாளர் இமையம்

- எழுத்தாளர் இமையத்தின் இயற்பெயர் சி.வெ. அண்ணாமலை, கடலூர் மாவட்டம் கழுதூரில் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.
- "மண்பாரம்", "வீடியோ மாரியம்மன்", "கொலைச்சேவல்", "சாவு சோறு", "பெத்தவன்", "நறுமணம்", "நன்மாறன் கோட்டைக் கதை" ஆகிய தொகுப்புகள் வெளியான காலகட்டங்களிலேயே அவரது "ஆறுமுகம்", "செடல்", "எங் கதெ", "செல்லாத பணம்" ஆகிய நாவல்களும் அடுத்தடுத்து வெளியாகின.
- "கோவேறு கழுதைகள்", "ஆறுமுகம்", "பெத்தவன்" ஆகிய நாவல்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இமையம் ஏற்கெனவே கதா விருது, பாஷாபாரதி உள்ளிட்ட பல விருதுகள் பெற்றவர்.
- இந்திய அரசின் பண்பாட்டு அமைச்சகம் சார்பில் இளநிலை ஆய்வு நல்கை விருதும், தமிழக அரசு சார்பில் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருதும் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தின் விருது உள்பட பல்வேறு இலக்கிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

## சர்வதேச துணிச்சலான பெண் விருது : 2021

- அமெரிக்க தூதரகம் சார்பில் 2021ம் ஆண்டிற்கான துணிச்சலான பெண் என்ற விருது கவுசல்யா சங்கர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## தேசியக் கொடியை வடிவமைத்த பிங்கலி வெங்கய்யாவின் மகளுக்கு ரூ.75 லட்சம் நிதி ஆந்திர முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி வழங்கினார்

- ஆந்திர மாநிலம், மசூலிப்பட்டினம் அருகே உள்ள பட்லபெனுமர்ரு கிராமத்தில் 1876–ம் ஆண்டு ஆகஸ்ட் 2ம் தேதி பிறந்தவர் பிங்கலி வெங்கய்யா, சுதந்திர போராட்டங்களில் ஈடுபட்டவர்.
- வைர சுரங்கங்களை கையாள்வதில் நிபுணராக இருந்ததால் "டைமண்ட்" வெங்கய்யா என்றும் பருத்தி வகைகளை அறிந்திருந்ததால் "பருத்தி" வெங்கய்யா என்றும் அழைக்கப்பட்டார்.
- நமது நாட்டுக்கென தனி தேசியக் கொடி வேண்டும் என்று காந்தி பல முறை வலியுறுத்தி பேசியிருக்கிறார். இதையடுத்து, விதவிதமாக 30–க்கும் மேற்பட்ட கொடிகளை தயாரித்து, காந்தி 1921–ம் ஆண்டு விஜயவாடா வந்திருந்தபோது காண்பித்தார்.
- அதை பார்த்த காந்தி, நடுவில் வெண்மை நிறம் இருக்கும்படி கொடியை உருவாக்க யோசனை கூறியுள்ளார்.
- இந்த தேசிய கோடிக்கு 1947 ஜூலை 22இல் அங்கீகாரம் வழங்கப்பட்டது
- பிங்காலி வெங்கையா 1962 இல் மறைந்தார்.

## சாகித்ய அகாதெமி விருது பெற்றார் தமிழ் எழுத்தாளர் கே.வி.ஜெயஸ்ரீ

- சிறந்த மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருது தமிழ் எழுத்தாளர் கே.பி.ஜெயஸ்ரீக்கு தில்லியில் வழங்கப்பட்டது.
- மலையாள எழுத்தாளர் மனோஜ் குரூசின் "நிலம் பூத்து மலர்ந்த நாள்" என்ற நாவலை கே.வி.ஜெயஸ்ரீ "நிலம் பூத்து மலர்ந்த நாள்" என தமிழில் மொழிபெயர்த்திருந்தார். இந்த மொழிபெயர்ப்புக்காக அவருக்கு சாகித்ய அகாதெமி விருது கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டது.
- இதில் ஜெயஸ்ரீக்கு விருதுக்கான செப்பு பட்டயம், ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசு ஆகியவற்றை சாகித்ய அகாதெமி தலைவர் சந்திரசேகர கம்பாரா வழங்கினார்.
- கேரள மாநிலம், பாலக்காட்டை பூர்விகமாகக் கொண்ட கே.வி.ஜெயஸ்ரீ, திருவண்ணாமலையில் பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார். கேரளாவை பூர்விகமாக கொண்டிருந்தாலும் தமிழகத்தில் தான் வளர்ந்துள்ளார். ஜெயஸ்ரீயையும் சேர்த்து, இதுவரை நான்கு பெண் படைப்பாளிகள் தமிழகத்திலிருந்து சாகித்ய அகாதெமி விருது பெற்றுள்ளார்கள்.
- சாகித்ய அகாடெமி விருது சிறந்த இந்திய இலக்கிய படைப்பாளர்களுக்கு இந்திய அரசால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது
- 24 இந்திய மொழிகளில் சிறந்த இலக்கிய படைப்புகளுக்காக இந்த விருதுகள் வழங்கப்படுகிறது
- நிறுவியது: 1954 மார்ச்12
- முதல் விருதாளர் : ரா பி சேதுப்பிள்ளை

## ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்கு காந்தி அமைதி விருது

- 2020–ஆம் ஆண்டுக்கான காந்தி அமைதி விருது வங்கபந்து என அழைக்கப்படும் மறைந்த ஷேக் முஜிபூர் ரஹ்மானுக்கு வழங்கப்படுவதாக மத்திய கலாசார துறை அறிவித்தது.
- 2019–ஆம் ஆண்டுக்கான இந்த விருது மறைந்த ஓமன் சுல்தான் கபூஸ் பின் சையது அல் சையதுக்கு வழங்கப்படுவதாகவும், இந்தியாவுடனான உறவை வலுப்படுத்த விரும்பிய அவரது நோக்கத்துக்கும், வளைகுடா பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிக்கும் அங்கீகாரம் அளிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பிரதமர் மோடி தலைமையிலான நடுவர் குழுவானது கடந்த மார்ச் 19–ஆம் தேதி கூடி, காந்தி அமைதி விருதுக்கு மறைந்த வங்கதேச முதல் அதிபர் ஷேக் முஜிபூர் ரஹ்மானையும், ஓமனின் நீண்டகால ஆட்சியாளரான சுல்தான் கபூஸையும் ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததாக மத்திய கலாசார துறை செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தியில் 125–வது பிறந்த ஆண்டு கொண்டாட்டத்தையொட்டி 1995–ஆம் ஆண்டு முதல் காந்தி அமைதி விருதானது மத்திய அரசால் வழங்கப்பட்டு வருகிறது. தேசியம், இனம், மொழி, ஜாதி, மத வேறுபாடின்றி வழங்கப்படும் இந்த விருது ரூ.1 கோடி ரொக்கப் பரிசு, பாரம்பரிய

கைவினைப் பொருள்களை உள்ளடக்கியது ஆகும்.

- வங்கப்பந்து முஜிபூர்ரஹ்மான் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தின் வெற்றியாளர். இந்தியர்களுக்கும் அவர் ஒரு நாயகர். அவரது மரபு மற்றும் உத்வேகமானது இரு நாடுகளின் பாரம்பரியத்தை விரிவாகவும், ஆழமாகவும் வேரூன்றச் செய்தது. அவர் காட்டிய பாதையானது இரு நாடுகளின் கூட்டாண்மை, முன்னேற்றம் மற்றும் வளத்துக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தது என பிரதமர் தெரிவித்துள்ளார்.

### 2020ம் ஆண்டின் சிறந்த தொழில் முனைவோர் விருது

- மரிக்கா நிறுவனத்தின் தலைவர் ஹர்ஷ்வர்தன் "மாரிவாலா 2020ம் ஆண்டின் சிறந்த தொழில்முனைவோராக EY நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- பராசூட் மற்றும் சபோலா இந்நிறுவனத்தின் வியாபார குறிகள் ஆகும்.

## 1.10 சமீபத்திய வரலாற்று நிகழ்வு

### 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்கள்

- நாடு சுதந்திரமடைந்த 75–ஆவது ஆண்டைக் கொண்டாடும் நோக்கில் நாட்டின் 75 இடங்களில் 75 வாரங்களுக்குக் கொண்டாட்டங்களை முன்னெடுப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இதையொட்டி குஜராத்தின் ஆமதாபாதில் உள்ள சபர்மதி ஆசிரமத்திலிருந்து "சுதந்திரத்துக்கான அம்ருத் மகோத்சவம்" நிகழ்ச்சியை பிரதமர் மோடி தொடக்கி வைத்தார்.
- மகாத்மா காந்தியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க உப்புசத்தியாகிரக பாத யாத்திரையை நினைவுகூரும் வகையில், 81 பேர் கொண்ட குழு புறப்பட்டது. ஆமபாதிலிருந்து தண்டி கடற்கரை வரையிலான 386 கி.மீ. தூரத்தை இவர்கள் 25 நாட்களில் நிறைவு செய்வார்கள். ஏப்ரல் மாதம் 5ம் தேதி இந்த யாத்திரை நிறைவடையும்.
- மகாத்மா காந்தியடிகள் கடந்த 1930–ஆம் ஆண்டு மார்ச் 12–ஆம் தேதி உப்பு மீது விதிக்கப்படும் வரியை ரத்து செய்யக் கோரி சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி கடற்கரைக்குப் பாத யாத்திரை மேற்கொண்டார்.
- 75–ஆவது சுதந்திர ஆண்டு கொண்டாட்டங்களானது 2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15–ஆம் தேதி வரை நடைபெறவுள்ளன".
- "சுதந்திரத்துக்கான அம்ருத் மகோத்சவம்" நிகழ்ச்சியின் வாயிலாக சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நாட்டு மக்கள் மரியாதை செலுத்துவர். நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான உந்துசக்தியாகவும் இது திகழும்" என்று பிரதமர் குறிப்பிட்டார்.

## 1.11 இந்தியா மற்றும் அண்டை நாடுகள்

### கொழும்பு துறைமுகத்தின் ஒரு பகுதியை இந்தியா, ஜப்பானுக்கு வழங்க இலங்கை சம்மதம்

- கொழும்பு துறைமுகத்தில் கிழக்கு கன்டெய்னர் முனையம் அமைக்க இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் இலங்கை அரசு கடந்த 2019–ம் ஆண்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதன்படி, கன்டெய்னர் முனையம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை இந்தியா, ஜப்பான் நாடுகள் செய்து வந்த நிலையில், சமீபத்தில் இந்த ஒப்பந்தத்தை இலங்கை ரத்து செய்தது. கொழும்பு துறைமுகத்தில் உள்ள தொழிற்சங்கங்களின் கடும் எதிர்ப்பு காரணமாக இந்த ஒப்பந்தத்தை இலங்கை ரத்து செய்துள்ளதாக கூறப்பட்டது.
- அதே சமயம், இந்த முனையத்தின் மறுபுறத்தில் கொழும்பு சர்வதேச கன்டெய்னர் முனையத்தை சீன நிறுவனம் அமைத்து வருகிறது. இதனால், சீனாவின் அழுத்தம் காரணமாக இருக்குமா? என்றும் சந்தேகிக்கப்பட்டது. எனினும், சர்வதேச உறுதிமொழிகளை இலங்கை அரசு கடைப்பிடிக்கும்படி இந்திய அரசு வலியுறுத்தியது.
- இந்நிலையில், கொழும்பு துறைமுக கிழக்கு

கன்டெய்னர் முனையம் அமைக்கும் பணி இந்தியா, ஜப்பானுக்கு மட்டுமே வழங்கப்படும் என இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

## பிரம்மபுத்ராவில் அணை கட்டவிருக்கும் சீனா

- சீனாவின் புதிய ஐந்தாண்டு திட்டத்தில் சீன நிலப்பரப்பில் பாயும் பிரம்மபுத்திரா நதியில் அணைகட்ட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.
- பிரம்மபுத்திரா சீனாவின் திபெத் பகுதியில் சாங்போ என அழைக்கப்படுகிறது.
- கைலாஷ் மலைத்தொடரில் உற்பத்தியாகிறது. திபாங், லோஹித், சியாங், புர்ஹி திஹாவ், தீஸ்தா, தான்சரி போன்றவை பிரம்மபுத்திராவின் துணை நதிகள்.

## இந்தியா, பாகிஸ்தானின் சிந்து நதி ஆணையர்கள்

- இந்தியா, பாகிஸ்தானின் சிந்து நதி ஆணையர்கள் சந்திப்பு தில்லியின் மார்ச் 23, 24 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளது. இந்த சந்திப்பின் போது, செனாப் நதியில் இந்திய நீர்மின் திட்டங்களின் வடிவமைப்பு குறித்த பாகிஸ்தானின் கவலைகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக இந்தியாவின் சிந்து நதி ஆணையர் பி.கே.சக்சேனா தெரிவித்தார்.
- சிந்து நதி மற்றும் அதன் கிளை நதிகளின் நீர்ப் பங்கீடு தொடர்பாக இந்தியா, பாகிஸ்தான் இடையே சிந்து நதி நீர் ஒப்பந்தமானது 1960-ஆம் ஆண்டு கையெழுத்தானது.
- இந்த ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளையும் சேர்ந்த சிந்து நதி ஆணையர்கள் ஆண்டுக்கு ஒருமுறை இந்தியா அல்லது பாகிஸ்தானில் சந்தித்துப் பேச வேண்டும். 2020-ஆம் ஆண்டுக்கான சந்திப்பு தில்லியில் கடந்த ஆண்டு மார்க் மாதம் நடைபெறவிருந்த நிலையில், கரோனா தொற்று காரணமாக ரத்து செய்யப்பட்டது.
- இந்நிலையில், வரும் 23, 24-ஆம் தேதி இரு ஆணையர்கள் இடையிலான சந்திப்பு தில்லியில் நடைபெறவுள்ளது.
- ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கி வந்த அரசியலமைப்பு சட்டத்தின் 370-ஆவது பிரிவு ரத்து செய்யப்பட்ட பின்னர் நடைபெறவுள்ள முதல் கூட்டமாகும்.
- அன்று முதல் லடாக்கில் தர்புக் ஷியோக், ஷாங்கு, நிமு ஷில்லிங், ராங்டோ ஆகிய நீர்மின் திட்டங்களுக்கும், லே பகுதிக்காக ரத்தன் நாக் நீர்மின் திட்டத்துக்கும், கார்கில் மங்டும் சங்ரா, கார்கில் ஹண்டர் மேன், தமாஷா ஆகிய நீர்மின் திட்டங்களுக்கும் இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்திய தரப்பில் சக்சேனா தலைமையிலான குழுவினரும், பாகிஸ்தான் தரப்பில் சிந்து நதி ஆணையர் சையகு முகமது மெகர் அலி ஷா தலைமையிலான குழுவினரும் பங்கேற்பர்.

### சிந்துநதி ஒப்பந்தம்

- நோக்கம் – சிந்து நதி நீரை இந்தியாவும், பாகிஸ்தானும் பகிர்ந்து கொள்ள
- ஒப்பந்த நாள் – 1960 செப்டம்பர் 19

### கையெழுத்திட்டவர்கள்

- ஜவஹர்லால் நேரு (அப்போதைய இந்திய பிரதமர்)
- முகமது அயூப்கான் (பாகிஸ்தான் அதிபர்)
- உலக வங்கி
- இதன் படி சிந்து, ஜீலம், செனாப் நதிநீர் பாகிஸ்தானுக்கும், பியாஸ், சட்லஜ், ராவி நதிகள் இந்தியாவிற்கும் வழங்கப்பட்டது.

## பாகிஸ்தான் தேசிய தினம்

- மார்ச் 23ம் நாள் 1940ல் லாகூர் கூட்டத்தில் பாகிஸ்தான் என்ற தனி நாட்டிற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் நினைவாக ஆண்டுதோறும் பாகிஸ்தான் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது.

### லாகூர் மாநாடு

- முஸ்லீம் லீக்கின் லாகூர் மாநாட்டில் இந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## கரேன் இனத்தவர்கள்

- மியான்மரில் விமானப் படை நடத்திய தாக்குதலை தொடர்ந்து கரேன் இன மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் தாய்லாந்தில் தஞ்சம் அடைந்துள்ளனர்.
- மியான்மரில் கரேன் இன மக்களுக்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கக்கோரி கரேன் தேசிய விடுதலை ராணுவம் என்ற ஆயுதக்குழு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது.

# 1.12 நியமனங்கள்

## CII (இந்திய தொழில் கூட்டமைப்பு)ன் தலைவர்

- தமிழக பிரிவு தலைவராக டாக்டர் S.சந்திரகுமார் தேர்வு.
- 2021–22ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்வு சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.
- இந்திய தொழில் கூட்டமைப்பின் (சிஐஐ) தமிழகப் பிரிவு தலைவராக டாக்டர் எஸ்.சந்திரகுமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவர் திருச்சி ஸ்ரீ காவேரி மெடிக்கல் கேர் இந்தியா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் செயலர்.

**இந்திய தொழிலாளர் கூட்டமைப்பு**

- **தலைமையிடம்** – நியூடெல்லி
- **தொடங்கப்பட்ட ஆண்டு** – 1895
- **தலைவர்** – Uday Kotak
- **நோக்கம்** – வணிக மேம்பாடு கொள்கை சீர்திருத்தங்கள்

### புதிய நிர்வாக இயக்குநர்

- சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியாவின் புதிய நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரியாக மட்டம் வெங்கட ராவ் பதவியேற்றுள்ளார்.

## இந்திய பொருளாதார நிபுணர் விஜியோ

- விஜியோ நாரன்ஹோ ஐக்கிய நாடுகள் சபையின் துணை பொது செயலாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர். இவர் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டத்திற்கான தலைவராகவும் செயல்படுவார் என ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அந்தோனியா குட்டரசு தெரிவித்துள்ளார்.

**ஐக்கிய நாடுகள் சபை**

- துவக்கம் – 1945 அக்டோபர்
- தலைமையிடம் – நியூயார்க் அமெரிக்கா
- தலைவர் – அந்தோனியா குட்டரசு
- 193 உறுப்பு நாடுகளை கொண்டுள்ள இந்த அமைப்பில்
- பொதுச்சபை
- ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு கவுன்சில்
- பொருளாதார, சமூக குழு
- சர்வதேச நீதிமன்றம்
- ஐக்கிய நாடுகள் செயலகம்
- ஆகிய கிளை அமைப்புகள் செயல்படுகின்றன.

**ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல்**

- துவக்கம் – 1972 திட்டம்
- தலைமையிடம் – நைரோபி, கென்யா
- தலைவர் – இங்கர் ஆண்டர்சன்

## நபார்டு வங்கியின் தலைவர் ஆசிய பசிபிக் கிராமப்புற வேளாண்மை கடன் அமைப்பின் தலைவராக நியமனம்

- நபார்டு வங்கியின் தலைவராக பணிபுரிந்து வரும் G.R.சிந்தாலே ஆசிய பசிபிக் கிராமப்பற மற்றும் வேளாண்மை கடன் அமைப்பிற்கு தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- NABARD (National Bank for Agricultural and Rural Development)
- துவக்கம் – 12 ஜுலை 1982
- தலைமையிடம் – மும்பை

## ஐக்கிய நாடுகள் வெளியுறவு கணக்காளர்கள் தலைவராக கிரிஷ் முர்மு நியமனம்

- இந்தியாவின் தலைமை கணக்கு கட்டுப்பாட்டாளர் கிரிஷ் சந்திர முர்மு ஐக்கிய நாடுகள் சபையின் வெளியுறவு கணக்காளர்கள் குழுவுக்கு தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 13 நாடுகள் இந்த கூட்டமைப்பில் இடம் பெற்றுள்ளது.
- இந்தியா, ஜெர்மனி, சிலி, சீனா, ஐக்கிய ராஜ்ஜியம், பிரான்ஸ், பிலிப்பைன்ஸ், சுவிட்சர்லாந்து, இத்தாலி, கானா, இந்தோனேசியா, கனடா மற்றும் ரஷ்யா.

**தலைமை கணக்கு கட்டுப்பாட்டாளர் (CAG)**

- அரசிலமைப்பில் விதி எண் 148–151
- இவர் இந்திய பொதுப்பணத்தின் காவலர் என அழைக்கப்படுகிறார்.
- கணக்குகள் மற்றும் கணக்காளர் துறையின் தலைவர் ஆவார்.

## இந்திய தலைமை புள்ளியலாளராக (CSI) Dr.G.P.சமந்தா நியமனம்

- இவரது பதவிக்காலம் இரண்டாண்டுகள்

- இவர் இந்தியாவின் நான்காவது தலைமை புள்ளியியலாளர்.
- இவர் மத்திய புள்ளியியல் அமைச்சகத்தின் செயலாளராகவும் செயல்படுவார்.

## பொறுப்பேற்பு

- இந்தியன் வங்கியின் நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்ற இம்ரான் அமின் சித்திக்
- இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் நிர்வாக இயக்குநராக பொறுப்பேற்ற எஸ்.ஸ்ரீமதி

## இந்திய ராணுவத்தின் புதிய டி.ஜி. எம்.ஓ.வாக பி.எஸ்.ராஜு

- இந்திய ராணுவத்தின் லெப்டினன்ட் ஜெனரலாக தற்போது இருந்து வரும் பி.எஸ்.ராஜு விரைவில் ராணுவ நடவடிக்கைகளுக்கான தலைமை இயக்குனராக (டி.ஜி.எம்.ஓ.) பொறுப்பேற்கவுள்ளார்.
- இவர் இதுவரை தான் கவனித்து வந்த காஷ்மீர் பள்ளத்தாக்கின் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை பாதுகாக்கும் ராணுவத்தின் முக்கியப் பிரிவான 15 கார்ப்ஸ் பிரிவை லெப்டினென்ட் ஜெனரல் டி.பி. பாண்டேவிடம் ஒப்படைத்தார்.

## சர்வதேச சூரிய சக்தி கூட்டமைவு (ISA)

- அஜய் மத்தூர் சர்வதேச சூரிய கூட்டமைவின் பொது இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**சர்வதேச சூரிய சக்தி கூட்டமைவு (ISA)**

- இந்திய பிரதமர் மற்றும் பிரான்ஸ் அதிபர் கூட்டாக 2015 நவம்பர் 30ல் துவங்கி வைத்தனர்.
- 121 நாடுகளை கருத்தில் கொண்டு (அட்சரேகைக்கும் – கடகரேகைக்கும் இடைப்பட்ட) துவங்கப்பட்டது.

## "ஒன்றிணைந்து காசநோயை நிறுத்துவோம்" என்ற வாரியத்தின் தலைவராக ஹர்ஷ் வர்தன் நியமனம்

- மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ஷ் வர்தன் Stop TB Partnership Board" என்ற வாரியத்தின் தலைவராக மார்ச் 18ல் பொறுப்பேற்றுக் கொண்டார்.
- 3 ஆண்டுகளுக்கு அந்த பொறுப்பில் இருப்பார்.
- உலக காசநோய் முற்றிலும் ஒழிப்பிற்கான இலக்கு ஆண்டு – 2030. இந்திய காசநோய் முற்றிலும் ஒழிப்பதற்கான இலக்கு ஆண்டு – 2025.

## தேசிய பாதுகாப்பு படையின் தலைவராக M.A.கணபதி நியமனம்

- இந்திய காவல் அதிகாரி M.A.கணபதி தேசிய பாதுகாப்பு படையின் (NSG)யின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

NSG:

- தேசிய பாதுகாப்பு படைச்சட்டம் 1986ன் கீழ் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1984–ஆபரேஷன் புளுஸ்டார் சீக்கியர்களின் புனித இடமான அமிர்தசரஸில் செயல்படுத்தியதற்காக பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டதன் விளைவாக பிரதமர் மற்றும் அவரது குடும்பத்தினர் பாதுகாப்பிற்காக இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

## CRPF தலைவராக – குல்தீப் சிங்

- மத்திய ரிசர்வ் காவல் படையின் (CRPF) தலைவராக குல்தீப் சிங்கை நியமித்து நியமனங்கள் தொடர்பான அமைச்சரவை குழு ஒப்புதல் அளித்துள்ளது.

## அமெரிக்கா அறுவை சிகிச்சை ஜெனரலாக இந்திய–அமெரிக்கர்

- அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அரசில் அறுவை சிகிச்சை ஜெனரலாக இந்திய வம்சாவளி மருத்துவர் விவேக் மூர்த்தி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- 43 வயதான விவேக் மூர்த்தி இரண்டாவது முறையாக இந்த பதவியை பெறுகிறார்.
- 2011ம் ஆண்டில் அப்போதைய அதிபர் ஒபாமாவால் இந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர்.

## UIDAI

- இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (UIDAI) என்பது ஆதார் (நிதி மற்றும் பிற மானியங்கள், பயன்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றை உண்மையான பயனாளிகளை கண்டறிந்து வழங்குதல்) சட்டம், 2016 ("ஆதார் சட்டம் 2016") –ன் படி 12.07.2016 அன்று இந்திய அரசால் நிறுவப்பட்ட மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகத்தின் (MeitY) கீழ் செயல்படும் சட்டப்பூர்வமான ஆணையமாகும்.

**இந்திய உணவுக் கழகம்** (Food Corporation of India)

- உணவுக் கழகங்கள் சட்டம் 1964இன் கீழ் சனவரி 14, 1965ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

- அமைச்சகம் – நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகம்
- தலைமையகம் – புது தில்லி
- இது தேசிய உணவுக் கொள்கையின் கீழ்வரும் நோக்கங்களை செயல்படுத்த உருவாக்கப்பட்டது:
  1. விவசாயிகளின் நன்மையைக் கருத்தில்கொண்டு பயனுறு விலை ஆதரவை நல்குவது
  2. பொது விநியோக முறைக்காக நாடு முழுமையும் உணவுத் தானியங்களை வழங்குதல்
  3. தேசிய உணவு பாதுகாப்பிற்காக ஏற்றுக்கொள்ளத் தக்க செய்பணி மற்றும் இடைநிலை உணவுத்தானிய இருப்பை பராமரித்தல்.

## அரசாங்க மின் சந்தை (ஜெம்) / (GeM)

- அரசாங்க மின்–சந்தைப்பகுதி (ஜெம்), ஐந்து மாதக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட, பல்வேறு அரசாங்கத் துறைகள் / நிறுவனங்கள் / பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவைப்படும் பொதுவான பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள் ஆன்லைன் கொள்முதல் செய்ய உதவுகிறது.
- பொதுமக்களின் கொள்முதல் மீதான வெளிப்படைத்தன்மை, திறன் மற்றும் வேகத்தை மேம்படுத்துவதே, ஜெம்–ன் கொள்கை.
- அரசாங்கப் பயனாளர்களின் இடர்பாடுகளை எளிதாக்குவதற்காக இ–பிட்டிங், மற்றும் இ–ஆக்சன் மற்றும் கோரிக்கைத் திரட்டுதலுக்கானக் கருவிகளை வழங்குகிறது, தங்கள் பணத்திற்கானச் சிறந்த மதிப்பை அடைகிறது.
- தொடக்கம் – ஆகஸ்ட் 9, 2016.
- அமைச்சகம் – வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகம்.

## இந்திய வானூர்தி நிலையங்களின் ஆணையம்

- தொடக்கம் – ஏப்ரல் 1, 1995.
- அமைச்சகம் – உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகம்



# 2. அரசியல் அறிவியல்

## 2.1 சமீபத்திய நீதிமன்ற தீர்ப்புகள்

### அரசு உயரதிகாரிகள் மாநில தேர்தல் ஆணையராக நியமனம் செய்ய இயலாது: உச்சநீதிமன்றம்

- உச்சநீதிமன்றத்தில் நீதிபதி நாரிமன் தனிமையிலான அமர்வு தனிப்பட்ட நபர்களை மாநில தேர்தல் ஆணையராக நியமனம் செய்வதே சிறந்தது. அந்த மாநிலத்தில் உள்ள அரசு அதிகாரிகள் தேர்தல் ஆணையர்களாக நியமனம் செய்ய இயலாது என தெரிவித்துள்ளது.

**மாநில தேர்தல் ஆணையம்**

- பஞ்சாயத்து மற்றும் நகர்ப்புற தேர்தல்களை நடத்துவதற்காக 73, 74 அரசிலமைப்பு திருத்த சட்டங்கள் 1999 மூலம் மாநில தேர்தல் ஆணையம் உருவாக்கப்பட்டது.
- ஆளுநரால் நியமனம் செய்யப்படுவார்.
- பதவிக்காலம் 5 ஆண்டுகள்
- உயர்நீதி மன்ற நீதிபதியை பதவி நீக்கம் செய்யும் முறையில் பணி நீக்கம் செய்யப்படுவார்.

## 2.2 மத்திய அரசாங்கம்–பொதுநலம் சார்ந்த அரசுத் திட்டங்கள், அவற்றின் பயன்பாடுகள்

### சுகாதார திட்டங்களால் ஏழைமக்களுக்கு ரூ.50,000 கோடி சேமிப்பு – பிரதமர் மோடி

- மக்கள் மருந்தகங்களில் வெளிச்சந்தைகளை விட 50 முதல் 90% வரை குறைவான விலையில் அத்தியாவசிய மருந்துகள் கிடைக்கின்றன.

**இதன் 7,500 கிளை**

- இந்திரா காந்தி பிராந்திய மருத்துவ கல்லூரி வளாகம் ஷில்லாங் (மேகாலயா).
- ஆயுஷ்மான் பாரத் எனும் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை 1.5 கோடி பேர் பயனடைந்துள்ளனர்.
- இதனால் ரூ.30,000 கோடி மிச்சமாகியுள்ளது.
- மக்கள் மருந்தக வாரம் – மார்ச் 1 முதல் 7ம் தேதி வரை (மக்கள் மருந்தகம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த)

**ஜன அவுஷாதி கேந்திரா திட்டம் (PMBJP) (பிரதம மந்திரி மலிவு விலை மருந்து திட்டம்)**

- தொடங்கப்பட்டது – 2015, செப்டம்பர்.

**ஆயுஷ்மான் பாரத் திட்டம் (PMJAY–Pradhan Mantri Jan Arogya Yojana)**

- ஏழை எளிய மக்களுக்கான அரசின் மருத்துவ காப்பீட்டு திட்டம்.
- இதன் மூலம் இந்தியாவில் உள்ள ஏழை குடும்பங்களுக்கும் நல்ல தரமான சுகாதார வசதியினை கொண்டு வருவதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம்.
- இந்த திட்டத்தின் மூலம் ரூ.5 லட்சம் வரை பயனடைய முடியும்.
- தொடங்கப்பட்ட நாள்: 2018 செப்டம்பர் 23 (ஆரோக்ய மற்றும் குடும்பநல்வாழ்வு அமைச்சகத்தின் உறுதுணையுடன்)

### 50% ஒதுக்கீட்டில் மாநில அரசுகளுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ்

- 50%க்கும் அதிகமான இட ஒதுக்கீடு அளிக்கும் மாநிலங்கள் 1992ம் ஆண்டின் இந்திரா சவ்னி வழக்கின் தீர்ப்பை கருத்தில் கொள்ள வேண்டிய

தேவையை உச்சநீதிமன்றம் மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

**இந்திரா சவ்னி வழக்கு**

- அரசுபணியிடங்கள்மற்றும்கல்விநிறுவனங்களில் வழங்கப்படும் இடஒதுக்கீடு 50% ஐ மிகாமல் இருக்க வேண்டும் என இந்திரா சவ்னி கொடுத்த வழக்கில் 9 பேர் கொண்ட உச்சநீதிமன்ற அமர்வு 1992 ல் தீர்ப்பளித்திருந்தது.

**103வது அரசியலமைப்பு சட்டதிருத்தம்**

- சமூக மற்றும் பொருளதார பின்தங்கிய பிரிவினருக்கு 10% இடஒதுக்கீடு அளிக்கும் மசோதா பாராளுமன்றத்தால் 2019ல் சட்டமாக்கப்பட்டது.

**இந்திய அரசியலமைப்பு சட்டம் பிரிவு 322A**

- பின்தங்கிய வகுப்பினருக்கு மாநில அரசு அளிக்கும் ஒதுக்கீடுகளை குறைக்கும் தன்மையுடையது.

## 'ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டம் 17 மாநிலங்களில் அமல்

- "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டத்தை 17 மாநில அரசுகள் அமல்படுத்தியுள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- உத்தரகாண்ட் மாநில அரசு அண்மையில் அத்திட்டத்தை அமல்படுத்தியது. இதன் மூலமாக "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டத்தை அமல்படுத்திய மாநிலங்களின் எண்ணிக்கை 17-ஆக அதிகரித்துள்ளது.
- "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" திட்டத்தின் வாயிலாக ஏழைகள், புலம்பெயர் தொழிலாளர்கள் தினக்கூலிகள், தற்காலிகப் பணியாளர்கள் உள்ளிட்டோர் பலன் பெறுவர்.

**ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை**

- தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின் (2013) கீழ் உள்ள அனைத்து தகுதியுடைய ரேசன் அட்டைதாரர்கள்/பயனாளிகளுக்கும் அவர்களுக்கு உரித்தான பொருள்களை நாட்டில் எங்கு வேண்டுமானாலும் பெற்றுக்கொள்ளும் வசதியை அளிப்பதற்காக ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டத்தை இந்திய அரசின் உணவு & பொது விநியோகத் துறை செயல்படுத்தி வருகிறது.
- இதன் மூலம், குடும்ப அட்டைதாரரின் தேவையைப் பொருத்து முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இடம்பெயர் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- தொடக்கம் – 01 January 2020.
- அமைச்சகம் – நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோகம் அமைச்சகம்.

## மதிய உணவுத் திட்டத்தில் ஏப்ரல் முதல் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி

- பள்ளிகளில் அமல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தில் ஏப்ரல் மாதம் முதல் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி பயன்படுத்தப்படும் என்று மத்திய உணவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- நாட்டு மக்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் நோக்கில், ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசியை தமிழகம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக 3 மாதங்களுக்கு மத்திய அரசு வழங்கியது. சோதனை அடிப்படையில் கடந்த 2019-20-ஆம் நிதியாண்டில் இத்திட்டம் அமல்படுத்தப்பட்டது.
- தற்போது 6 மாநிலங்களில் உள்ள தலா 1 மாவட்டத்தில் மட்டும் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.
- "நாட்டில் 65 சதவீத மக்களுக்கு அரிசியே முதன்மை உணவாக உள்ளது.
- அரிசியில் ஊட்டச்சத்துகளை மேம்படுத்துவது மலிவானது. இதன் மூலமாக மக்களுக்கு எளிதில் ஊட்டச்சத்துகளைக் கொண்டு சேர்க்க முடியும்.
- ரத்தசோகை, ஊட்டச்சத்துக் குறைபாடு உள்ளிட்டவற்றுக்கு எதிரான போராட்டத்தில் இத்திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும். ஆந்திரம், குஜராத், தமிழகம், மகாராஷ்டிரம், சத்தீஸ்கர், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்களில் கடந்த ஜனவரி வரை சுமார் 94,574 டன் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசி நியாயவிலைக் கடைகள் வாயிலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் கேரளம், ஒடிஸா, மத்திய பிரதேசம் ஆகியவற்றில் சோதனை அடிப்படையில் விரைவில் அமல்படுத்தப்படவுள்ளது.
- ஒருங்கிணைந்த சிறார் வளர்ச்சித் திட்டத்திலும், மதிய உணவு வழங்கும் திட்டத்திலும் வரும் ஏப்ரல் முதல் ஊட்டச்சத்து மேம்படுத்தப்பட்ட அரிசியைப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.
- அரிசியில் ஊட்டச்சத்து மேம்படுத்துவதற்கான செலவை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம், பள்ளிக் கல்வித் துறை ஆகியவை ஏற்க உள்ளன.

**ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் (ஐசிடிஎஸ்)**

- இது ஒரு இந்திய அரசு நலத்திட்டம் ஆகும். இது உணவு, பாலர் கல்வி மற்றும் முதன்மையான சுகாதார பராமரிப்பு போன்றவற்றை 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு வழங்குவதை நோக்கமாக கொண்டது.
- இந்த சேவைகளில் அங்கன்வாடி மையங்களை குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் நிறுவப்பட்டு முன்னணி தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டனர்.
- ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் உடல்நலக்குறைவு ஆகியவற்றைத் தவிர, பெண் குழந்தைகளுக்கும் அதே வளங்களை வழங்குவதன் மூலம் பாலின சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடும் நோக்கமாக கொண்டது
- துவக்கம் – 2 அக்டோபர் 1975
- அமைச்சகம் – பெண்கள் மற்றும் குழந்தைகள் நல அமைச்சகம்.

## உடான் திட்டம்

- உடான் திட்டத்தின் கீழ் 390 விடான வழித்தடங்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான ஏல விண்ணப்பங்களை வரவேற்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- உடான் திட்டத்தின் கீழ் உள்நாட்டில் உள்ள முக்கிய நகரங்களுக்கு விமான சேவையை அதிகரிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த திட்டம் தொடங்கப்பட்டு நடப்பாண்டுடன் நான்கு ஆண்டுகள் நிறைவடையவுள்ளது.
- இந்த நிலையில், உடான் திட்டத்தின் கீழ் 325 வழித்தடங்கள் மற்றும் 56 விமான நிலையங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. இதில், ஐந்து ஹெலிகாப்டர் இறங்குதளம் மற்றும் இரண்டு கடல்விமான தளங்களும் அடக்கம்.
- உடான் 4.1 திட்ட தொடக்கத்தின் ஒரு பகுதியாக உள்நாட்டில் உள்ள மேலும் பல முக்கிய நகரங்களுக்கு விமான சேவையை விரிவுபடுத்திடும் வகையில் 392 விமான வழித்தட சேவைகளுக்கான ஏல விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**உடான் திட்டம்**

- தொடங்கப்பட்ட நாள் – 27 ஏப்ரல் 2017
- நோக்கம் – இந்திய அரசின் வட்டார வளர்ச்சி வானூர்தி நிலையங்களின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்காக.

## தனியார் ஊழியர்கள், சுயதொழில் புரிபவர்கள் ஓய்வூதியம் பெற உதவும் சரல் பென்ஷன் திட்டம் ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வருகிறது

- தனியார் நிறுவன ஊழியர்கள், சுயதொழில் செய்பவர்களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கச் செய்யும் 'சரல் பென்ஷன்' திட்டம் ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வருகிறது.
- அரசு ஊழியர்கள்போல, தனியார் நிறுவன ஊழியர்கள், சுயதொழில் புரிபவர்களும் தங்கள் ஓய்வுக் காலத்தை நிம்மதியாக கழிப்பதற்காக, காப்பீட்டு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் (ஐஆர்டிஏஐ), 'சரல் பென்ஷன் யோஜனா' என்ற ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.
- குறைந்தபட்ச தொகையாக மாதம் ரூ.1000 பிரீமியம் செலுத்த வேண்டும்.
- இத்தொகையை மாதந்தோறும், மூன்று, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை என செலுத்தலாம்.
- இது தவிர ஒருமுறை மட்டும் பிரீமியம் செலுத்தும் திட்டமும் உள்ளது.
- அதிகபட்சமாக எவ்வளவு தொகையும் செலுத்தலாம். அதற்கேற்ப ஓய்வூதியமும் அதிகம் கிடைக்கும். 40 முதல் 80 வயதுக்குள் இருப்பவர்கள் இதில் சேரலாம். இத்திட்டம் 2 வகைகளைக் கொண்டது. முதல் திட்டத்தின்படி, ஒருவரது ஓய்வுக் காலத்துக்குப் பிறகு ஓய்வூதியம் வழங்கப்படும். அவரது மறைவுக்குப் பிறகு மொத்த தொகையும் நாமினிக்கு வழங்கப்படும்.
- இரண்டாவது திட்டத்தின் கீழ், காப்பீடுதாரர், நாமினி இருவரும் இறக்கும் பட்சத்தில், அவரது சட்டப்பூர்வ வாரிசுக்கு ஓய்வூதிய தொகை வழங்கப்படும்.
- இத்திட்டத்தில் சேர்ந்த 6 மாதத்துக்குள் சரண்டர் செய்து ஓய்வூதியத் தொகையை பெற முடியும்.
- இத்திட்டத்தில் முதலீடு செய்யப்பட்ட முதலீட்டுத் தொகைக்கு ஓய்வூதியம் பெறும் காலம் வரை முழுவதும் வருமான வரி விலக்கு அளிக்கப்படும். ஓய்வு பெற்ற பிறகு ஒருவருக்கு வேறு எந்தவித வருமானமும் இல்லை என்றால், எந்த வரியும் இல்லாமல் முழு தொகையும் ஓய்வூதியமாக கிடைக்கும். இந்த சரல் பென்ஷன் யோஜனா திட்டம் வரும் ஏப்.1–ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

காப்பீட்டு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் (IRDAI)

- நோக்கம் – இந்தியாவில் காப்பீட்டு தொழிலை ஒழுங்குப்படுத்தல் மற்றும் மேம்படுத்த
- தொடங்கப்பட்ட ஆண்டு – 1999
- தலைமையம் – ஹைதராபாத்
- காப்பீடு மேம்பாட்டு மற்றும் வளர்ச்சி முகமை 10 உறுப்பினர்கள் கொண்ட தலைமை அமைப்பாகும்
- தலைவர்
- 5 முழுநேர உறுப்பினர்கள்
- 4 பகுதிநேர உறுப்பினர்கள்
- அனைத்து உறுப்பினர்களும் இந்திய நடுவண் அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

## தஞ்சை உள்பட 2 உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசியமயமாக்கும் மசோதா

- தஞ்சை உள்பட இரண்டு உணவு தொழில்நுட்ப நிறுவனங்களை தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் மசோதாவுக்கு மாநிலங்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- தமிழகத்தின் தஞ்சாவூரில் உள்ள இந்திய உணவு பதப்படுத்துதல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஹரியாணா மாநிலம் குண்ட்லியில் உள்ள தேசிய உணவு தொழில்நுட்ப தொழில்முனைவோர் பயிற்சி நிறுவனம் ஆகிய இந்த இரண்டு நிறுவனங்களையும் தேசிய நிறுவனங்களாக அறிவிக்கும் "தேசிய உணவு தொழில்நுட்பம், தொழில்முனைவோர் பயிற்சி மற்றும் மேலாண்மை மசோதா, 2009" என்ற மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்த இரண்டு நிறுவனங்களும் முழு சுதந்திரத்துடன், ஐஐடி, ஐஐஎம் நிறுவனங்களுக்கு இணையாக செயல்பட முடியும்.
- இந்தியா பல வகையான தானியங்கள் உற்பத்தியில் முன்னணி நாடாக விளங்கியபோதும், அவற்றை பாதுகாப்பாக குளிரூட்டிகளில் சேமித்து வைத்தல், பதப்படுத்துதல் துறைகளில் தொடர்ந்து சவால்களை சந்தித்து வருகிறது.
- மத்திய அரசின் "கிசான் சம்பதா யோஜனா" திட்டத்தின் கீழ் 107 லட்சம் டன் உணவுப் பொருள்கள் பதப்படுத்தப்பட்டிருப்பதோடு, 444 லட்சம் வேலைவாய்ப்புகளும் உருவாக்கப் பட்டிருக்கின்றன. மேலும், 147 லட்சம் விவசாயிகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைந்திருக்கின்றனர் என்று அவர் கூறினார்.

### பிரதான் மந்திரி கிசான் சம்பதா யோஜனா

- நோக்கம் : விவசாயிகளின் நல்வாழ்வுக்காகவும் வேளாண் துறையில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி விவசாய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை பெருக்குதல்.
- இதன் கீழ் 27 ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- திட்டகாலம் – 2016–20
- ஒதுக்கீடு – 6,000 கோடி
- தொடக்கம் – 2017 ஆகஸ்ட்

## வான் தான் விகாஸ் திட்டம்

- உள்ளூர் பழங்குடி மக்களுக்கு வான் தான் விகாஸ் திட்டத்தின் கீழ் அதிகளவில் வேலைவாய்ப்பை வழங்கியமைக்காக மணிப்பூர் மாநிலத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து நிலைகளிலும் மாநில அரசின் சிறப்பான செயல்பாட்டை பாராட்டி இந்த விருது அளிக்கப்பட உள்ளது.

### வான் தான் விகாஸ் கேந்திராஸ்

- 2019ல் இந்த திட்டம் துவங்கப்பட்டது.
- பழங்குடி மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற் கானது.
- வனபொருட்கள் சேகரிப்பவர்களின் உற்பத்தியை 20% லிருந்து 60% ஆக உயர்த்துதல்.

## மார்ச் 31–க்குள் 70,000 ஆயுஷ்மான் பாரத் மையங்கள்

- உலகத் தரத்தில் ஆரம்ப சுகாதார மையங்களை அமைப்பதில் முக்கிய மைல் கல்லாக மத்திய அரசு வரும் மார்ச் 31ஆம் தேதிக்குள் திட்டமிட்ட 70,000 ஆயுஷ்மான் பாரத்–நல மற்றும் ஆரோக்கிய மையங்களை அமைக்கவுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- இந்திய பொது சுகாதார வரலாற்றில் 2018 ஏப்ரலில் ஆயுஷ்மான் பாரத் – நல ஆரோக்கிய மையங்கள் தொடங்கப்பட்டது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.
- டிசம்பர் 2022க்குள் நாட்டில் ஊரகம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள 1,50,000 துணை சுகாதார நிலையங்களையும், ஆரம்ப சுகாதார நிலையங்களையும் ஆயுஷ்மான் பாரத்–நல ஆரோக்கிய மையங்களாக (ஏபி–எச்.டபிள்யு.சி)

மாற்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- இது ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் மக்களிடம் நெருக்கமான, சுதந்திரமான ஆரம்ப சுகாதார சேவையை வழங்கும் நோக்கமாகும். மையங்களில் தற்போதுள்ள குழந்தைகள் பராமரிப்பு உள்ளிட்ட மருத்துவ சேவைகளை வலுப்படுத்துவது மட்டுமின்றி இந்த ஏபி–எச்.டபிள்யூ.சி மையங்களில் பிற சேவைகளான தொற்றா நோய்கள், மனநலம் காது–மூக்கு–தொண்டை மருத்துவம், கண் மருத்துவம், வாய்வழி மருத்துவம் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படும்.
- இந்த மையங்களின் மூலம் வழங்கப்படும் சேவைகளில் வரும்முன் காக்கும் நல சேவை முக்கியமானதாகும்.
- இந்த மையங்களில் தொலைபேசி மூலம் ஆலேசெனை வழங்குதல் மேலும் ஒரு முக்கிய சேவையாகும்.

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா

- தொடங்கப்பட்ட ஆண்டு – 17.6.2015

### நோக்கம்:

- உயர்த்தப்பட்ட ரியல் எஸ்டேட் துறைக்கு எதிராக வீடுகளின் குறைப்பை அதிகரிப்பதற்காக பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா (PMAY) திட்டம் இந்திய அரசால் தொடங்கப்பட்டது.
- இந்தியா சுதந்திரம் பெற்ற 75வது ஆண்டு நிறைவான 2022இல் நாடு முழுவதும் 20 மில்லியன் வீடுகளை நிர்மாணிப்பதன் மூலம் "அனைவருக்கும் வீட்டு வசதி" என்ற நோக்கத்தை அடைய இந்த திட்டம் நோக்கமாக உள்ளது.

## சுவதேஷ் தர்ஷன்

- மத்திய சுற்றுலா அமைச்சகத்தால் கலாச்சார மையக்கருத்துகளை அடிப்படையாக கொண்ட சுற்றுலா வட்டங்களை உருவாக்குவதன் மூலம் சுற்றுலா செல்பவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும்.
- ஒருங்கிணைந்த நீடித்த வளர்ச்சியுடைய அதிக சுற்றுலா மதிப்புடைய பகுதிகள் இந்த வட்டத்தில் மேம்படுத்தப்படும்.
- இந்த திட்டம் மத்திய அரசால் 100% நிதியளிக்கப்படுவதாகும். 2015ல் துவங்கப்பட்டது.

## உலக தண்ணீர் தினம்

- உலக தண்ணீர் தினம் மார்ச் 22 அனுசரிக்கப்படுவதையொட்டி உயர் கல்வி நிறுவனங்களில் தண்ணீர் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு யுஜிசி உத்தரவிட்டுள்ளது.
- ஜல்சக்தி அபியான் "ஒரே பாரதம் உன்னத பாரதம்" ஆகிய திட்டங்களின் கீழ் நீர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை கல்வி நிறுவனங்களில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### ஜல்சக்தி அபியான்

- மழைநீர் சேகரிப்பை தீவிரமாக்க மத்திய அரசின் புதிய திட்டம்
- Phase I: 1 ஜுலை முதல் 15 செப்டம்பர் 2019 வரை
- Phase II: 1 அக்டோபர் முதல் 30 நவம்பர் 2019 வரை

### ஒரே பாரதம் உன்னத பாரதம்

- அக்டோபர் 31 2015 இல் சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினத்தில் இந்த திட்டம் துவங்கி வைக்கப்பட்டது, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் வசிக்கும் பலதரப்பட்ட மக்களின் கலை கலாச்சாரம் மற்றும் பண்பாடு ஆகியவற்றை ஒன்றிணைக்கும் நோக்கத்தோடு துவங்கப்பட்டது
- 2021ஆம் ஆண்டின் உலக தண்ணீர் தினத்தின் மையக்கருத்து: 'valuing water'.

# 3.புவியியல்



## 3.1 சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை

### மேற்குத் தொடர்ச்சி மலையில் 5 புதிய இன தவளைகள் கண்டுபிடிப்பு

- மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் புதிய இனங்களைச் சார்ந்த 5 புதர் தவளைகளை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்
- புதிய இனங்களைச் சேர்ந்த 5 புதர் தவளைகளை அவர்கள் கண்டறிந்துள்ளனர். வெளிப்புற உடலமைப்பு, மரபணு (டிஎன்.ஏ), ஒலியெழுப்புதல், நடத்தை உள்ளிட்டவற்றில் அத்தவளைகள் வேறுபட்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- உலகில் கண்டறியப்பட்டுள்ள புதர் தவளைகளில் 80 சதவீதம், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளிலேயே காணப்படுகின்றன. அவற்றிலும் பெரும்பாலான இனங்கள் குறிப்பிட்ட இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன.

### தேர்தல் விழிப்புணர்வு பிரச்சாரத்தில் சிட்டுக்குருவிகள்

- அசாம் மாநிலத்தில் தற்போது சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது.
- அம்மாநிலத்தின் ஹைலாகண்டி மாவட்டத்தில் தேர்தல் விளம்பர சின்னமாக சிட்டுக் குருவி அறிவிக்கப்பட்டு அனைவரும் வாக்களிக்க பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- இதன் மூலம் வாக்களிக்கும் சதவீதத்தை கூட்டவும் சிட்டுக்குருவிகளின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும் முயற்சிகள் மேற்கொளப்பட்டுள்ளது.

### பொங்கும் எரிமலை குழம்பு

- ஐஸ்லாந்து நாட்டின் தென்மேற்கில் உள்ள ரெய்கிஜானிஸ் தீபகற்பத்தில் ஏற்பட்ட எரிமலைச் சீற்றத்தால் பொங்கியோடும் "லாவா" எனப்படும் எரிமலைக் குழம்பு. இந்த எரிமலைச் சீற்றத்தால் அந்நாட்டில் நிலநடுக்கங்களும் ஏற்பட்டு வருகின்றன.
- இந்தியாவில் காணப்படும் ஒலே செயல்படும் எரிமைலை – பாரன் தீவு எரிமலை (அந்தமான் நிக்கோபார் தீவு).

### வண்ணத்துப் பூச்சியின் புதிய இனங்கள் கண்டுபிடிக்கப்பட்டது

- இந்தியாவின் வண்ணத்துப்பூச்சி இனங்களின் வரிசையில் புதிதாக இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. ஆராய்ச்சியாளர்கள் Nacaduba Sinhala Ramaswamii Sadhasivam ஆகியோரால் 2021ல் மேற்கு தொடர்ச்சிமலையில் உள்ள அகத்தியமலையில் கண்டுபிடிக்கப்பட்டது.



# 4.பொருளாதாரம்

## 4.1 புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் அரசுத்துறை

### ரூ.1 லட்சம் கோடியை கடந்தது ஜிஎஸ்டி வசூல்

- கடந்த பிப்ரவரி மாதம் ரூ.1.13 லட்சம் கோடி சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) வசூல் ரூ.1 லட்சம் கோடியை கடந்துள்ளது.

### தகவல் தொழில்நுட்ப துறை விற்பனையில் 5.2% உயர்வு

- தகவல் தொழில்நுட்ப 3வது காலாண்டில் (அக்டோபர் – டிசம்பர்) 5.2% அதிகரித்துள்ளதாக ரிசர்வ் வங்கி அறிவித்துள்ளது.

காரணம்:

- தொலைத் தொடர்பு, ரியல் எஸ்டேட், வர்த்தக துறை நிறுவனங்களின் சிறப்பான செயல்பாடுகளே காரணம் என ரிசர்வ் வங்கி கூறியது.

### நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு ரூ.43.84 லட்சம் கோடியாக அதிகரிப்பு

- நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு பிப்ரவரி 26–ஆம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 58,455 கோடி டாலராக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.43.84 லட்சம் கோடி) அதிகரித்துள்ளது.
- அந்நியச் செலவாணி கையிருப்பில் பவுண்ட், யூரோ, பென் உள்ளிட்ட இதர நாட்டு செலவாணிகள் உள்ளன. இவற்றை டாலரில் மறுமதிப்பீடு செய்யும்போது வெளிமதிப்பில் காணப்படும் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப அந்நியச் செலவாணி கையிருப்பில் மாற்றம் ஏற்படுகிறது.
- மதிப்பீட்டு வாரத்தில் தங்கத்தின் கையிருப்பு 17 கோடி டாலர் அதிகரித்து 3,542 கோடி டாலராகி உள்ளது.

### குவித்தலுக்கெதிரான வரி (Anti–dumping tax)

- அமெரிக்காவின் வரத்தகதுறை 18 அலுமினிய தகடு ஏற்றுமதி நாடுகளுக்கு குவித்தலுக்கெதிரான வரி விதிக்க முடிவெடுத்துள்ளது.
- சம்பந்த நாட்டில் வழங்கப்படும் மானியங்களின் காரணமாக மிகக்குறைந்த விலையில் ஏற்றுமதி செய்யப்படுவதால் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதால் அமெரிக்கா இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### ஜன்தன் திட்டத்தில் 50% அதிகமானோர் பெண்கள்: நிதியமைச்சகம்

- பிரதமரின் ஜன்தன் திட்டத்தில் உள்ள மொத்த கணக்குகளின் எண்ணிக்கையில் 55 சதவீதம் பெண்களுடையது என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.
- சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்காக செயல்படுத்தப்பட்ட பல்வேறு திட்டங்களை பட்டியலிட்ட மத்திய நிதியமைச்சகம்.
- பிப்ரவரி 24–ஆம் தேதி நிலவரப்படி பிரமரின் ஜன்தன் திட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள மொத்தம் 41.93 கோடி கணக்குகளில் 23.21 கோடி கணக்குகள் பெண்களுடையது.
- முத்ரா திட்டத்தில் பெண் தொழில்முனைவோர்களுக்காக 19.04 கோடி கணக்குகளுக்கு (68 சதவீதம்) பிப்ரவரி 26.2021 நிலவரப்படி இதுவரையில் ரூ.6.36 லட்சம் கோடி மதிப்பிலான கடன்கள் வழங்கப்பட்டுள்ளது என நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

**ஜன்தன் திட்டம் மற்றும் பிரதமர் மக்கள் நிதி திட்டம் (PMJDY)**

- தொடங்கப்பட்டது – 2014, ஆகஸ்ட் 28
- இதன் கீழ் ஒரு லட்சம் ரூபாய்க்கான விபத்து காப்பீடு 30,000 ரூபாய்க்கான ஆயுள் காப்பீடும் வழங்கப்படும்.
- இந்த திட்டத்தின் கீழ் வங்கியில் கணக்கு இல்லாத 7 1/2 கோடி குடும்பத்தினருக்கு காப்பீடு வசதியுடன் வங்கி கணக்கு தொடங்கப்பட்டது.

**முத்ரா திட்டம் (PMMY – Pradhan Mantri MUDRA Yojana)**

- தொடங்கப்பட்டது – 2015 ஏப்ரல் 8
- பொது நிறுவனம் அல்லாத விவசாயம் அல்லாத சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களுக்கு ரூ.10 லட்சம் வரை கடன் வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது.
- PM MUDRA திட்டத்தின் கீழ் 3 வகைகளை உள்ளடக்கியது.
  - Shishu: ரூ.50,000 வரை உள்ள கடன்கள்.
  - Kishore: ரூ.50,000 முதல் 5 லட்சம் வரை உள்ள கடன்கள்
  - Tarun: ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் வரை உள்ள கடன்கள்.

## 2022ம் நிதியாண்டில் இந்திய பொருளாதார வளர்ச்சி 11%

- மும்பையை தலைமையிடமாக கொண்டு செயல்படும் கரிசல் என்ற பொருளாதார பகுப்பாய்வு அமைப்பு 2022ம் நிதி ஆண்டில் இந்திய பொருளாதாரம் 11% வளர்ச்சியை அடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்மார்ட் – உன்னாதி

- பெண் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்க இந்தியாவின் மிகப்பெரிய தனியார் துறை வங்கியான HDFC ஸ்மார்ட்–உன்னாதி என்ற திட்டத்தை துங்கியுள்ளது.

## இந்தியா–அமெரிக்கா நிதிமையச்சர்கள் உரையாடல்

- அமெரிக்க நிதியமைச்சர் ஜேனட் யெல்லன், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுடன் தொலைபேசி வாயிலாகப் பேச்சுவார்த்தை நடத்தினார்.
- கரோனா தொற்றுக்கு எதிரான போராட்டத்தில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியாக இந்தியா விளங்கி வருவதற்கு ஜேனட் யெல்லன் பாராட்டு தெரிவித்தார்.
- "சர்வதேச பொருளாதார விவகாரம் குறித்து ஜேனட் யெல்லனுடன் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விவாதித்தார். உலக நாடுகளுக்கு கரோனா தடுப்பூசியை விநியோகிப்பதற்காக இந்தியாவுக்கு ஜேனட் பாராட்டு தெரிவித்தார்.

## நிதி மேம்பாட்டு நிறுவனம் அமைக்க மசோதா

- மத்திய அமைச்சரவை நிதி நிறுவன மேம்பாட்டு அமைப்பு அமைப்பதற்கான மசோதாவிற்கு ஒப்பதல் அளித்துள்ளது.

## நிதி மேம்பாட்டு நிறுவனம்

- இந்தியாவின் முதல் நிதி மேம்பாட்டு நிறுவனம் 1948–ல் தொழில் நிதி கார்ப்பரேஷனாக செயல்பட துவங்கியது.
- இது போன்ற சிறப்பு நிறுவனங்கள் வளரும் நாடுகளின் நிதி மேம்பாட்டிற்காக அமைக்கப்படுகிறது.

## தேர்தல் நிதி பத்திரங்கள்

- அரசியல் கட்சிகளுக்கு தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தேர்தல் செலவுக்காக தேர்தல் நிதி பத்திரங்கள் மூலம் நன்கொடை அளிக்கும் திட்டத்தை பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த 2018–ம் ஆண்டு ஜனவரியில் அறிமுகப்படுத்தியது.

## தேர்தல் நிதி பத்திரங்கள்

- 2018ல் இந்த திட்டம் அப்போதைய நிதி அமைச்சர் அருண் ஜெட்லியால் துவங்கப்பட்டது.
- அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் நன்கொடைகளை கண்காணிப்பதே இதன் முக்கிய நோக்கம்.
- 1000 ரூபாயில் துவங்கி கட்டுப்பாடுகளற்று எவ்வளவு நிதியாயினும் ஸ்டேட் வங்கியின் நிதி பத்திரம் மூலம் அரசியல் கட்சிகளுக்கு செலுத்தலாம்.
- இந்த நிதி பத்திரங்கள் முழுமையாக பாரத ஸ்டேட் வங்கியால் நிர்வகிக்கப்படுகிறது.

## காப்பீட்டுத் துறையில் 74% அந்நிய முதலீடு

- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டை 74 சதவீதமாக உயர்த்த வழிவகுக்கும் காப்பீட்டு

சட்டத்திருத்த மசோதா (2021) மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

- காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீடு இப்போது 49 சதவீதம் அனுமதிக்கப்படுகிறது. இதனை, 74 சதவீதமாக உயர்த்த காப்பீட்டு சட்டத் திருத்த மசோதா 2021 வழிவகை செய்கிறது.
- முதல்முறையாக வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் காப்பீட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. அப்போது 26 சதவீத அந்நிய நேரடி முதலீடு அனுமதிக்கப்பட்டது. அதன்பிறகு 2015–இல் அந்நிய நேரடி முதலீட்டை 49 சதவீதமாக உயர்த்தி திருத்தம் செய்யப்பட்டது. இப்போது, அதனை 74 சதவீதமாக உயர்த்த திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இந்தியப் பொருளாதாரம் 12% வளர்ச்சி காணும்

- கரோனா பொது முடக்கத்தின் விளைவாக செப்டம்பர் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் 7.5 சதவீதம் அளவுக்கு வீழ்ச்சியை சந்தித்தது.
- இந்த நிலையில், கட்டுப்பாடுகளில் தளர்வுகள் அறிவிக்கப்பட்டதன் எதிரொலியால் அண்மைக்காலமாக பொருளாதார நடவடிக்கைகள் வேகமெடுத்துள்ளன.
- இது வளர்ச்சிக்கான உகந்த சூழலை உருவாக்கியதன் விளைவாக டிசம்பர் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி எதிர்பார்த்ததைக் காட்டிலும் வலுப்பெற்று 0.4 சதவீத வளர்ச்சி விகிதத்தை எட்டிப்பிடித்தது.
- கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதிலிருந்து உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் மக்களிடையே நுகர்வுக்கான தேவை அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இது, சமீப காலங்களில் தயாரிப்புத் துறை உற்பத்தியை மேம்படுத்த வழிவகுத்துள்ளது.
- கடந்த 2020–இல் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.1 சதவீதமாக சரிவைக் கண்டிருந்தது.
- 2021–இல் நாட்டின் பொருளாதாரம் 12 சதவீத வளர்ச்சியை எட்டுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளது என மூடிஸ் அந்த ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

## பங்கு விலக்கல் இலக்கு எட்டக்கூடியதே: சிஇஏ

- வரும் 2021–22–ஆம் நிதியாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்டுள்ள பங்கு விலக்கல் இலக்கு – ரூ.1.75 லட்சம் கோடி.
- தலைமைப் பொருளாதார ஆலோசகர் (சிஇஏ) – கே.வி.சுப்ரமணியன்.

## இந்தியாவின் சிறந்த சிறுகுறு நிறுவனங்களுக்கான வங்கி HDFC

- ஆசிய மணி நிறுவனத்தால் வழங்கப்படும் சிறந்த வங்கிகள் விருது பட்டியலில் 2021ம் ஆண்டிற்கான சிறுகுறு நிறுவனங்களுக்கான சிறந்த வங்கியாக HDFC வங்கி தேர்வு செய்யப்பட்டுள்ளது.
- கடந்த சில ஆண்டுகளில் சிறு குறு நடுத்தர நிறுவனங்களுக்கு அதிக அளவில் நிதியுதவி அளித்தமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## S & P குளோபல் அமைப்பு இந்தியா பொருளாதார வளர்ச்சி 11% ஆக கணிப்பு

- 2021–2022ம் நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 11% அளவில் வளர்ச்சி அடையும் என கணித்துள்ளது.

# 5.அறிவியல்




## 5.1 அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள்

### கோவாக்சின் தடுப்பூசி

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி ஆய்வகத்திற்கான இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனம், பாரத் பயோடெக் இன்டர்நேஷனல் லிமிடெட் தடுப்பூசியான கோவாக்சின் உருவாக்கி உள்ளது.
- பாரத் பயோடெக் உருவாக்கிய தடுப்பூசி மிகவும் சுத்திகரிக்கப்பட்ட „முழு சக்தி வாய்ந்தது ஆகும். இந்த தடுப்பூசி "ஆல்கெல் ஐ எம்.டிஜி" உடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் வேதியியல் ரீதியாக அகோனிஸ்டாக அல்லது அலுமினிய ஹைட்ராக்சைடு ஜெல்லுடன் இணைத்து உடலுக்கு தீங்கு ஏற்படாமல் தேவையான நோயெதிர்ப்பு உருவாக்குகிறது.

### இலங்கை விமானப் படையின் 70–ஆவது ஆண்டு விழா

- இலங்கை விமானப் படையின் 70–ஆவது ஆண்டு விழா கொண்டாட்டத்தில் இந்திய விமானப் படை மற்றும் கடற்படை விமானங்கள் பங்கேற்றது.
- இலங்கை விமானப்படையின் (எஜ்எல்ஏஎ.ஃப்) 70–ஆவது ஆண்டு விழா மார்ச் 20–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
- இந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் வகையில் இந்த நாட்டில் முதல்முறையாக விமான சாகச நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- இந்த மாபெரும் நிகழ்வில் இந்திய விமானப் படை மற்றும் இந்திய கடற்படையின் 23 விமானங்கள் பங்கேற்கின்றன.

### புவி கண்காணிப்புக்கான ஜிஐசாட் செயற்கைக் கோள்

- புவி கண்காணிப்பு மற்றும் பேரிடர் மீட்பு பணிக்காக ஜிஐசாட்–1 என்ற அதிநவீன 'ஜியோ இமேஜிங்' செயற்கைக்கோளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தயாரித்தது.
- இதை ஜிஎஸ்எல்வி எ.ஃப்–10 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
- ஜிஐசாட் செயற்கைக்கோள் 2,268 கிலோ எடையுடையது. இதன் ஆயுட்காலம் 7 ஆண்டுகள்.
- இதிலுள்ள 5 விதமான 3டி கேமராக்கள் மற்றும் தொலைநோக்கி மூலம் புவி பரப்பை துல்லியமாக படம் எடுக்கவும், பார்க்கவும் முடியும். வானிலை நிலவரங்களை தொடர்ந்து கண்காணித்து புயல் உள்ளிட்ட பேரிடர் காலங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள இது உதவும்.

### வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்ட பிஎஸ்எல்வி சி–51 ராக்கெட்

- ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து பிஎஸ்எல்வி சி–51 ராக்கெட், 19 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் செலுத்தப்பட்டது.
- இந்த ராக்கெட் மூலம் பிரேசில் நாட்டுக்கு சொந்தமான அமேசானியா–1 செயற்கைக்கோள், இஸ்ரோ தயாரித்த சிந்து நேத்ரா, ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா அமைப்பின் சதிஷ் சாட், சென்னை ஜேப்பியார் தொழில்நுட்பக் கல்லூரி, நாக்பூர் ஜிஎச் ரைசோனி பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர் சக்தி பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கூட்டமைப்பில் உருவான யுனிட்டிசாட் ஆகிய 5 செயற்கைக்கோள்கள் மற்றும் அமெரிக்காவுக்கு சொந்தமான 13 நானோ செயற்கைக்கோள்கள் என மொத்தம் 19 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டன
- இது நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL), மூலம் வர்த்தகம் சார்ந்து ஏவப்பட்ட முதல் ராக்கெட் ஆகும்.

**அமேசோனியா–1**

- பிரேசில் நாட்டில் அமேசான் காடுகள் அழிக்கப்படுவதை தடுக்கும் நோக்கில் அவற்றை கண்காணிக்கவும் விவசாயம் சார்ந்த புவிசார் ஆய்வுக்காகவும் "அமேசோனியா–1" செயற்கைக்கோள் ஏவப்பட்டது.

**நியூஸ்பேஸ் இந்தியா லிமிடெட்**

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பு மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு பணிகளை வணிக ரீதியாக மேற்கொள்ள 2019 மார்ச் 06 அன்று விண்வெளித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உருவாக்கப்பட்டது.
- விண்வெளித் துறையின் கீழ் இந்திய அரசின் கீழ் உள்ள நிறுவனம் ஆகும்.
- தலைமையகம் – பெங்களூர்

**ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா**

- "ஸ்பேஸ் கிட்ஸ் இந்தியா" என்ற அமைப்பு பள்ளி மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் கண்டுபிடிப்பு ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில் தேசிய அளவில் அறிவியல் போட்டிகளை நடத்தி "இந்திய இளம் விஞ்ஞானி" விருதுகளை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது.
- 9 முதல் 12 –ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் விண்வெளி, எலெக்ட்ரிக்கல், எலெக்ட்ரானிக்ஸ் ஆகிய 3 பிரிவுகளில் தேர்வு செய்யப்படுகிறார்கள். அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அதில் சிறந்த மாணவர்கள் விண்வெளி ஆராய்ச்சி பயிற்சிக்காக ரஷ்யாவுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

## ஆர்க்டிகா–எம் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியது ரஷ்யா

- ஆர்டிக் கண்டத்தில் நிகழும் சுற்றுச்சூழல் மாற்றத்தை கண்காணிக்க ரஷ்ய விண்வெளித்துறை ஆர்க்டிகா–எம் என்ற செயற்கைகோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளது.
- இந்த நிலையில் ஆர்டிக் கண்டத்தை கண்காணிக்க ரஷ்ய விண்வெளித் துறை ஆர்க்டிகா–எம் என்ற செயற்கைக்கோளை உருவாக்கியது.
- கஜகஸ்தானில் உள்ள பைக்கோனூர் ஏவுதளத்தில் இருந்து, சோயூஸ் ராக்கெட் மூலம் செலுத்தப்பட்டது.

## சீனா வெளியிட்ட செவ்வாய் கிரக படங்கள்

- சீனாவின் தியான்வென்–1 விண்கலத்தால் எடுக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் படங்களை அரசு வெளியிட்டது.

**தியான்வென்–1**

- அனுப்பப்பட்ட நாள் – ஜுலை 23, 2020
- இடம் – சீனாவின் தேசிய விண்வெளி மையம் (CNSA)
- விண்கலத்தில் இடம்பெற்றவை – லேண்டர், ஆர்பிட்டர், ரோவர்
- செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்டாரத்தை அடைந்த நாள் – பிப்ரவரி 24
- 3 மாதங்களுக்கு இந்த சுற்றுவட்டப் பாதையில் பயணிக்கும் இந்த விண்கலம் வரும் மே அல்லது ஜுன் மாதத்தில் செவ்வாய் கிரக தென் பகுதியின் உடோபியா பிளானிஷ்யா என்ற இடத்தில் ரோவரை தலையிறக்கும்.
- தரைப்பரப்பிலிருந்து 350 கி.மீ உயரத்தில் இருந்து எடுக்கப்பட்ட செவ்வாயின் புகைப்படங்களை CNSA வெளியிட்டது.
- சீனாவின் தியான்வென்–1 விண்கலத்தால் எடுக்கப்பட்ட செவ்வாய் கிரகத்தின் படங்களை அரசு வெளியிட்டுள்ளது.

**"ஸ்பெக்ட்ரோகிராபி"**

- உத்திரகாண்ட் மாநிலம் நைனிடாலில் அமைந்துள்ள ஆர்யபட்டா அறிவியல் பதிவுகள் ஆராய்ச்சி நிறுவனம் முழுவதுமான உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட குறைந்த விலையிலான ஏரிஸ்–தேவாஸ்தல் என்ற வண்ணப்பட்டை பதிவு நிழற்படப்பிடிப்பு கருவியை உருவாக்கியுள்ளனர்.

## வானிலுள்ள இலக்குகளைத் தாக்கி அழிப்பதற்கான புதிய தொழில்நுட்பம் வெற்றிகரமாக சோதனை

- வானிலுள்ள இலக்குகளை வானிலிருந்து செலுத்தப்படும் ஏவுகணைகள் மூலமாக துல்லியமாகத் தாக்கி அழிப்பதற்கான புதிய தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி–மேம்பாட்டு நிறுவனம் (டிஆர்டிஓ) வெற்றிகரமாக சோதனை செய்தது.
- திட எரிபொருளைக் கொண்ட குழாய் வடிவ இயந்திரமானது ஏவுகணையுடன்

இணைக்கப்படும். இது ஏவுகணையை ஏவுவதற்கு வழக்கமாகப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் காட்டிலும் திறன்மிக்கதாகும்.

- இந்தத் தொழில்நுட்பத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி–மேம்பாட்டு நிறுவனம் மேம்படுத்தி வருகிறது. அத்தொழில்நுட்பத்தின் சோதனை ஒடிஸாவின் பாலேசுவரம் மாவட்டத்திலுள்ள சண்டீபூர் பகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. சோதனை வெற்றிகரமாக நிறைவடைந்ததாக டிஆர்டிஓ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## செவ்வாய் கிரகத்தில் பெர்சிவரன்ஸ் சோதனை ஓட்டம்: நாசா அறிக்கை

- பெர்சிவரன்ஸ் அனுப்பப்பட்ட நாள் – ஜுலை 30, 2020
- செவ்வாய் கிரகத்துக்கு அமெரிக்கா அனுப்பியுள்ள "பெர்சிவரன்ஸ்" ஆய்வுக்கலம், சோதனை முறையில் முதல்முறையாக செலுத்திப் பார்க்கப்பட்டது.
- 33 நிமிஷங்களுக்கு இயக்கப்பட்ட அந்த ஆய்வுக் கலம், சுமார் 6.5 மீட்டர் தொலைவுக்கு நகர்த்திப் பார்க்கப்பட்டது. முதலில் முன் பக்கமாக 4 மீட்டர் தொலைவுக்கு நகர்த்தப்பட்ட பெர்சிவரன்ஸ் பிறகு இடதுபுறமாக 150 டிகிரி கோணத்துக்குத் திருப்பப்பட்டது. அதன்பிறகு 2.5 மீட்டர் தொலைவுக்குப் பின்புறமாக அந்த ஆய்வுக்கலம் செலுத்தப்பட்டு, அந்த இடத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.
- செவ்வாய் கிரகத்தில் உயிரினங்கள் இருந்தனவா என ஆய்வு மேற்கொள்வதற்காக நாசா அனுப்பிய பெர்சிவரன்ஸ் ஆய்வுக் கலம் அந்த கிரகத்தில் கடந்த மாதம் 18–ஆம் தேதி வெற்றிகரமாக தரையிறங்கியது.
- வேற்று கிரகத்துக்கு அனுப்பப்பட்டதிலேயே மிகப் பெரியதும் அதிநவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுமான அந்த ஆய்வுக் கலம் செவ்வாய் கிரகத்தின் "ஜெஸெரோ" பள்ளப்பகுதியில் தரையிறக்கப்பட்டுள்ளது.

காரணம்:

- செவ்வாயின் மேற்பரப்பில் உள்ள மண் கல் மற்றும் பாறைகளை ஆய்வு செய்ய.
- அனுப்பப்பட்ட இடம்: புளோரிடாவின் கேப்கெனவால் விமானப்படை தளம்.(அட்லஸ் ராக்கெட் மூலம்)
- ஜெஸெரோ என்ற பள்ளத்தில் தரையிறக்கப்பட்டது.
- பெர்சிவரன்ஸ் ரோவர் திட்டத்தில் முக்கிய பங்கு வகித்த இந்திய பெண் விஞ்ஞானி–ஸ்வாதி (பெங்களூர்).

**செவ்வாய் கோள்**

- சூரியனிடமிருந்து நான்காவதாக காணப்படும் செவ்வாய் கோளானது அளவில் புதனுக்கு அடுத்தப்படியாக இரண்டாவது சிறிய கோள்.
- ரோமானிய போர் கடவுள் "மார்ஸ்" பெயரால் அழைக்கப்படுகிறது.
- இதன் மேற்பரப்பில் இரும்பு ஆக்சைடு உள்ளதால் செந்நிற தோற்றமளிக்கிறது.
- இதனால் "சிவந்த கோள்" என அழைக்கப்படுகிறது.

**இதன் துணைகோள்கள்**

- போபஸ், டீமஸ்
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) செவ்வாய் கோளின் வளிமண்டலம் மற்றும் தரைப்பகுதியை ஆராய 24.09.2014 அன்று மங்கள்யான் எனப்படும் விண்கலத்தை அனுப்பியது.
- செவ்வாயை ஆராயும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 4வது இடம்.
- ரஷ்யா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்.
- நாசா (அமெரிக்கா)
- ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்.

## தேசிய பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்தவுள்ள இஸ்ரோ

- இஸ்ரோவின் புதிய இந்தியா விண்வெளி மைய நிறுவனங்கள் அதிக அளவிலான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
- நமது நாட்டின் வர்த்தக வணிக ரீதியிலான விண்வெளி பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்க புதிய இந்திய விண்வெளி நிறுவனம் 2019ல் உருவாக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் – பெங்களூரு.

## இஸ்ரோ–நாசா இணைந்து புதிய ரேடார் உருவாக்கம்

- இந்திய விண்வெளி ஆய்வு மையம் புவி கண்காணிப்புக்கான அதிக தரமுள்ள ரேடாரை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசாவுடன் இணைந்து உருவாக்கி வருகிறது.
- இது 2022ம் ஆண்டில் வெளியிட திட்டமிட்டுள்ளது.
- இஸ்ரோ துவக்கம் – 1969
- தலைமையிடம் – பெங்களூரு
- தலைவர் – கே.சிவன்

## முதல் விண்வெளி இராணுவ பயிற்சி

- AsterX என்ற விண்வெளி பயிற்சியை பிரான்ஸ் நடத்தியுள்ளது.
- இதில் ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளும் பங்கெடுத்துள்ளன.

## இந்தியா–ஜப்பான் விண்வெளி மையங்களின் கூட்டு செயல்பாடுகள்

- இந்திய விண்வெளி ஆய்வு மையமும் ஜப்பான் நாட்டுடன் விண்வெளி ஆய்வு மையமான (JAXA) வும் இணைந்து புவிகண்காணிப்பு நிலவு ஆய்வுகளில் கூட்டு முயற்சி செயற்கைக்கோள் வழிகாட்டுதல்மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான வாய்ப்புகளை மேம்படுத்துதல் போன்றவற்றில் இணைந்து பணியாற்ற ஒப்புக் கொண்டுள்ளது.
- நிலவின் துருவ பகுதி ஆய்வுகளில் மேற்கொள்ள இந்தியாவும் ஜப்பானும் ஏற்கனவே இணைந்து பணியாற்றி வருகின்றன.
- இத்தாலியும் இந்தியாவும் ஏற்கனவே புவி கண்காணிப்பு பணிகளில் இணைந்து செயல்பட்டு வருகின்றன. ஆஸ்திரேலியாவுடன் இந்தியா இணைந்து பணியாற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது..

## உயர் வளிமண்டல ஆய்வுக்காக இஸ்ரோவின் "சவுண்டிங் ராக்கெட்" வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டது

- உயர் வளிமண்டல பரப்பில் நிலவும் காற்று மற்றும் பிளாஸ்மா அயனிகள் தொடர்பான ஆய்வுக்காக இஸ்ரோ சார்பில் 'சவுண்டிங் ராக்கெட்' வெற்றிகரமாக ஏவப்பட்டது.
- ககன்யான், சந்திரயான்–3 உட்பட பல்வேறு ஆய்வுத் திட்டங்களை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. வணிக ரீதியாக வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களும் விண்ணில் செலுத்தப்பட்டு வருகின்றன.
- இதற்கிடையே, சிறிய ரகஆய்வு சாதனங்களை புவியின்தாழ்ந்த சுற்றுப் பாதையில் நிலைநிறுத்தவும், வளிமண்டலம் தொடர்பான விண்வெளி ஆய்வுக்கும் சவுண்டிங் ராக்கெட்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- இஸ்ரோவிடம் ஆர்எச்–200, ஆர்எச்–300, ஆர்எச்–560 என 3 விதமான சவுண்டிங் ராக்கெட்கள் உள்ளன. இது 2 நிலைகளைக் கொண்டது. இவற்றின் மூலம் 100 கிலோ வரையிலான ஆய்வுக் கருவிகளை அதிகபட்சம் 475 கி.மீ. தூரம் கொண்ட புவியின் சுற்றுப் பாதையில் நிலைநிறுத்த முடியும். அதன்படி, கடந்த 1965–ம் ஆண்டு முதல் இதுவரை இஸ்ரோ சார்பில் 100–க்கும் மேற்பட்ட சவுண்டிங் ராக்கெட்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளன.

## செவ்வாய் கிரகத்தில் கண்டறியப்பட்ட மார்டியன் புளூபெரீஸ் போன்று குஜராத்தில் கட்ச் பகுதியில் கண்டெடுப்பு

- 2004 இல் நாசாவால் செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப பட்ட "ரோவர்OPERTUNITY" ஹேமடைட் நிறைந்த கோள வடிவ கற்களை கண்டறிந்தது.
- MER–1, MER–B என்ற சிறப்பு பெயர்களால் அழைக்கப்பட்ட ரோபோக்கள் 2018 வரை செவ்வாயில் ஆராய்ச்சிகள் மேற்கொண்டது.
- அந்த ஹேமடைட் கற்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் செவ்வாயில் நீர் இருந்ததற்கான தடயங்கள் உள்ளதாக கருதப்பட்டது.
- சமீபத்தில் செவ்வாய் கிரகத்தில் கண்டறியப்பட்ட ஹேமடைட் கற்களை போன்று குஜராத் கட்ச் பகுதியிலும் கண்டறியப்பட்டுள்ளது.

## தமிழக விஞ்ஞானியின் பெயர் சூட்டி பெருமைப்படுத்திய நாசா, நிலவில் விவசாயம் செய்ய உதவும் பாக்டீரியாவை கண்டுபிடித்த தமிழக விஞ்ஞானி

- அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசாவின் சர்வதேச விண்வெளி நிலையத்தில் புதிதாக நான்கு பாக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
- தமிழக விஞ்ஞானி கஸ்தூரி வெங்கடேஸ்வரன் தலைமையிலான குழு கண்டுபிடித்த "மித்திலோ பாக்டீரியாசியே' என்ற வகை பாக்டீரியாவுக்கு மித்திலோபாக்டீரியம் அஜ்மலீ என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- புதிய கண்டுபிடிப்புகள் நிகழும் போது அவற்றுக்கு அதிசிறந்த ஆளுமைகளின் பெயரைச் சூட்டுவது வழக்கம். அந்த வகையில், இதற்கு முன்னால் கண்டுபிடித்த பாக்டீரியாக்களில் ஒன்றுக்கு டாக்டர் அப்துல் கலாமின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
- அவ்வகையில் 50 ஆண்டுகளாக கடல்வாழ் உயிரியல் ஆராய்ச்சியில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு

வரும் அஜ்மல் கானை கவுரப்படுத்தும் விதம் தற்போது புதிதாக கண்டறியப்பட்ட பாக்டீரியாவுக்கு அவர் பெயர் சூட்டப்பட்டது.

- அஜ்மல் கானின் பெயர் பரிந்துரைத்தவர், நாசாவில் 25 ஆண்டுகளாக உயிரியல் விஞ்ஞானியாக பணிபுரிந்து வரும் அவரது நண்பரான விஞ்ஞானி கஸ்தூரி வெங்கடேஸ்வரன் ஆவார். இவர் நாசாவின் "ஜெட் புரொபல்ஷன்" ஆய்வுக்கூடத்தின் தலைவர்.

### 300 மீட்டருக்கும் அதிகமான இந்தியாவின் முதல் குவாண்டம் தொலைத்தொடர்பு அமைப்பு

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) 300 மீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கான குவாண்டம் தொலைத்தொடர்பு தொழில்நுட்பங்களை சோதித்துள்ளது.
- வீடியோ அழைப்புகள் மற்றும் கூட்டங்கள் விண்வெளி செயல் மையங்களுக்கு இடையே அகமதாபாத்தில் பரிசோதிக்கப்பட்டது.

**இஸ்ரோ: (ISRO)**

- தலைவர் – K.சிவன்
- துவக்கம் – 15 ஆகஸ்ட் 1969
- தலைமையிடம் – பெங்களூரு

### புதிய வகை ஆல்காக்கள் கண்டுபிடிப்பு

- பதின்டாவில் பஞ்சாப் மத்திய பல்கலைக்கழக உயிரியலாளர்கள் குழு இரண்டு புதிய வகை ஆல்காக்களை கண்டறிந்து உள்ளனர்
- ஹைபினே இண்டிகா (Hypnea Indica) என அதற்கு பெயர் சூட்டப்பட்டு உள்ளது
- இது கன்னியாகுமரியின் கடல் பகுதியிலும் கண்டறியப்பட்டுள்ளது குஜராத்தின் சோம்நாத் பதான் மற்றும் ஷிவ்ராஜிப்பூர் பகுதிகளிலும் டையு டாமன் பகுதிகளிலும் கண்டறியப்பட்டுள்ளது.
- இந்த வகை ஆல்காக்கள் உணவு தொழிற்சாலைகளில் அதிகம் பயன்படுத்தபடுகின்றது.

### சாஹின் 1A

- பாகிஸ்தான் அணுகுண்டை ஏவும் திறன் கொண்ட சாஹின் 1A என்ற நிலப்பகுதியிலிந்து நிலப்பகுதியில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணையை பரிசோதித்துள்ளது.
- 900 கி.மீ. தூரத்திற்கு இந்த ஏவுகணையை செலுத்த இயலும்.

## 5.2 சுகாதார அறிவியல் பற்றிய சமீபத்திய கண்டுபிடிப்புகள்

### ஸ்புட்னிக்–V இந்தியாவில் தயாரிக்க ஒப்பந்தம்

- ரஷ்யாவின் இறையாண்மை பெற்ற அமைப்பான ரஷ்ய நேரடி முதலீட்டு நிதி இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள விர்சோ (Virchow) என்ற பயோடெக் நிறுவனத்திற்கு தனது சொந்த கண்டுபிடிப்பான ஸ்புட்னிக்–V கோவிட்–19 தடுப்பூசியை தயாரிக்கும் உரிமை வழங்குவதற்கான 4ம் கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது.
- இதன் மூலம் தொழில்நுட்பங்கள் அனைத்தும் வழங்கப்படுவதன் மூலம் ஆண்டுக்கு 200 மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் தயாரிக்கப்பட உள்ளது.

# 5.3 ஊடகம் மற்றும் தொலைதொடர்பு

## நுகர்வோரின் குறைகளை தீர்க்க இ–தாகில் போர்டல்

- நுகர்வோரின் குறைகளை தீர்க்க இ–தாகில் போர்டல் செயல்படுகிறது. இப்போர்டல் 15 மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுகிறது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019கீழ் கடந்த 2020ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது.

## "சி விஜில்" செயலி

- தேர்தல் தொடர்பான புகார்களை அளிப்பதற்கான "சி விஜில்" செயலியில் தமிழில் புகாரை பதிவு செய்யும் வசதி விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளது.

## சி–விஜில் செயலி

- தேர்தல் தொடர்பான புகார்களைத் தெரிவிக்க அமைக்கப்பட்ட சி–விஜில் செயலியில் இதுவரை 1,120 புகார்கள் பெறப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்தார்.
- அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு – 2018
- இந்த செயலி மூலம் பெறப்படும் புகார்களின் மீது 100 நிமிடத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படும்.

## சென்னை பல்கலைக்கழகத்தில் இணையதள வழி கற்றலுக்கான திட்டங்கள்

- சென்னை பல்கலைக்கழகம் தொலைத்தொடர்பு கல்வி கூட்டமைப்புடன் (CEC) இணைந்து இணையதள வழி கற்றலுக்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளது.
- தொலைத்தொடர்பு கல்வி கூட்டமைப்பு பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) தன்னாட்சி பெற்ற அமைப்பாகும்.

### ஸ்வயம் (SWAYAM)

- Study Webs of Active Learning for Young Aspiring Minds (SWAYAM), என்ற திட்டம் 2017 ஜூலை 9ல் தற்போதைய கல்வி அமைச்சகத்தால் இணையதள வழி பாடத் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்காக துவங்கப்பட்டது.
- இதில் அனைத்து உயர்கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு பாடங்கள் உள்ளடங்கியுள்ளன.

### ஸ்வயம் பிரபா SWAYAM Prabha

- இந்தியா முழுவதும் 32 உயர்தரமுள்ள கல்வி சேனல்களை DTH வழியாக மாணவர்களுக்கு வழங்க அப்போதைய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் (தற்போதைய) கல்வி அமைச்சகம் துவங்கியது.
- இணையதள வசதி சரிவர கிடைக்கப்பெறாத இந்தியாவின் கிராமங்களிலுள்ள மாணவர்கள் இந்த தரமான கல்வி வசதியை தொலைக்காட்சியின் வழியாக பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த சேனல்களை ஒலிபரப்பு செய்ய GSAT–15 செயற்கைக்கோள் பயன்படுத்தப்படுகிறது.

## இணையதள ஏல தளம்: பிரநித் (PRANIT)

- இந்திய அரசின் மஹாரத்னா நிறுவனமான பவர்கிரிட் (POWERGRID) ஏலமுறைகள் அனைத்தையும் இணையத்தளத்தில் மேற்கொள்ள ஏதுவான புதிய தளத்தை துவங்கியுள்ளது.
- PRANIT (பிரனித்) என்ற பெயரிலான இந்த தளம் ஏல செயல்பாடுகள் அனைத்தையும் எளிமையாக்குவதற்கு உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### POWERGRID:

- மத்திய மின் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அமைப்பாகும்.
- மகாரத்னா அந்தஸ்து பெற்றது.
- தலைமையிடம் – குருகிராம், இந்தியா

# 6 தினசரி தேசிய நிகழ்வு



## 728 மாவட்டங்களில் தலா ஒரு விவசாய பொருள்

- ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விவசாயப் பொருள் உற்பத்தியில் கவனம் செலுத்தும் திட்டத்தை (One District One Focus Product – ODOFP) மத்திய அரசு கடந்த பிப்ரவரி 26–ம் தேதி அறிமுகப்படுத்தியது.
- மத்திய வேளாண் அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தில் பழங்களுக்கு 226 மாவட்டங்கள், காய்கறிகளுக்கு 107 மாவட்டங்கள், மசாலா பொருட்களுக்கு 105 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இதில் தமிழகத்தில் 36 மாவட்டங்கள் இடம் பெற்றுள்ளன. கன்னியாகுமரி, நாகப்பட்டினம், செங்கல்பட்டு, ராமநாதபுரம் மாவட்டங்களில் மீன் பொருட்கள், தஞ்சாவூர், கோவையில் தேங்காய், திருச்சியில் வாழைப்பழம், கிருஷ்ணகிரியில் மாம்பழம் என பொருட்கள் இடம் பெற்றுள்ளன.
- வேளாண் பொருட்களை விளைவிக்க எம்ஐடிஎச், என்எப்எஸ்எம், ஆர்கேவிஒய், விகேவிஒய் போன்ற திட்டங்களின் கீழ் விவசாயிகளுக்கு உதவிகள் கிடைக்கும்.
- இங்கு விவசாய கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனியாரால் தொடங்கப்படும் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு மத்திய அரசு தொழிற்சாலைக்கு மத்திய அரசு 35 சதவீத மானியம் அளிக்கிறது.

## தலைமை தேர்தல் அலுவலர்

- தமிழ்நாடு தேர்தல் அலுவலர் சத்யப்ரதா சாஹு ஆவார்.
- இந்திய தேர்தல் ஆணையம் மாநில அரசு யூனியன் மாநில அரசு, யூனியன் பிரதேச நிர்வாகத்துடன் கலந்தாலோசித்து தலைமை தேர்தல் அதிகாரியை நியமிக்கிறது.

## குளோபல் பயோ இந்தியா

- இந்திய உயிரி தொழில்நுட்பத் துறையின் பலம் மற்றும் வாய்ப்புகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெளிப்படுத்தும் விதமாக, குளோபல் பயோ இந்தியாவின் இரண்டாவது பதிப்பு 2021 மார்ச் 1 முதல் 3 வரை டிஜிட்டல் தளத்தில் நடைபெறவிருக்கிறது.
- ஐந்து டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான பொருளாதாரத்தை எட்டும் இலட்சியத்திற்கு உயிரி தொழில்நுட்பத் துறை பெரும் பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2025–ஆம் ஆண்டுக்குள் 150 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான உயிரி பொருளாதாரத்தை கட்டமைப்பதற்கு தேவையான ஆதரவை இந்திய அரசு வழங்கி வருகிறது.
- இந்த வருட குளோபல் பயோ இந்தியாவின் மையக் கருவாக 'வாழ்க்கையை மாற்றி அமைத்தல்' இருக்கும். 'உயிரி அறிவியலில் இருந்து உயிரி பொருளாதாரத்தை நோக்கி' என்பது இம்மாநாட்டின் மையக்கருத்து இருக்கும்.

## 18 மணி நேரத்தில் 25.54 கி.மீ சாலை ஹைதராபாத் நிறுவனம் சாதனை

- ஹைதராபாத்தைச் சேரந்த ஐஜேஎம் இந்தியா கட்டுமான நிறுவனம் 18 மணி நேரத்தில் 25.54 கி.மீ. தூரத்துக்கு சாலை அமைத்து புதிய சாதனை புரிந்துள்ளது. இதன் மூலம் லிம்கா உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த இந்நிறுவனத்தை மத்திய தரைவழி போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்கரி பாராட்டியுள்ளார்.
- சோலாப்பூர்–பிஜப்பூர் தேசிய நெடுஞ்சாலை நான்கு வழிப் பாதையாகும்.

## துறைமுகங்கள் மேம்பாட்டுக்கு ரூ.6 லட்சம் கோடி

- இந்திய கடல்சார் மாநாடு தில்லியில் நடைபெற்றது.
- நாட்டிலுள்ள துறைமுகங்களின் மேம்பாட்டுக்காக வரும் 2035–ஆம் ஆண்டுக்குள் சுமார் ரூ.6 லட்சம் கோடி முதலீடு செய்யப்படும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

## மாநிலத்தின் மிகப்பெரிய தொகுதி

- சென்னையின் சோழிங்கநல்லூர்
- ஸ்ரீபெரும்பத்தூர்

## 'சன்சத்" டிவி

- நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் தொலைக்காட்சி சேனல்களான மாநிலங்களவை தொலைக்காட்சி மற்றும் மக்களவைத் தொலைக்காட்சி ஆகியவை சன்சத் டிவி எனும் ஒரே சேனலாக இணைக்கப்பட்டுள்ளன. ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ் அதிகாரி ரவி கபூர் அதன் முதல் தலைமை நிர்வாக அதிகாரியாக ஓராண்டுக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

## ஜம்மு–காஷ்மீர் தொகுதி மறுவரையறை குழுவுக்கு மேலும் 1 ஆண்டு அவகாசம்

**ஜம்மு–காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம்:**

- அறிவிக்கப்பட்ட நாள் – ஆகஸ்ட் 9, 2019
- நடைமுறைப்படுத்தப்பட்ட நாள் – அக்டோபர் 31, 2019 (சர்தார் வல்லபாய் படேல் பிறந்தநாள்)

**ஜம்மு–காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் சட்ட பிரிவுகள்:**

- இந்திய அரசியலமைப்பு சட்டபிரிவு 370
- இந்திய அரசியலமைப்பு சட்டம், பிரிவு 35A
- ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தை இரண்டாக பிரித்து சட்டமன்றம் கொண்ட ஜம்மு காஷ்மீர் ஒன்றிய பகுதியாகவும், லடாக் ஒன்றிய பகுதியாகவும் செயல்படும் என அறிவித்தது.

**ஜம்மு–காஷ்மீர் தொகுதி மறுவரையறை குழு:**

- **தலைமை** – ரஞ்சனா பிரகாஷ் தேஷாய் (உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி)
- **உறுப்பினர்கள்** – 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள்
- 3 பேர் – தேசிய மாநாட்டு கட்சி
- 2 பேர் – பாரதிய ஜனதா கட்சி
- அஸ்ஸாம், மணிப்பூர், அருணாச்சல பிரதேசம், நாகலாந்து ஆகிய மாநிலங்களின் தொகுதி மறுவரையறை செய்யும் பொறுப்பும் இக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.
- ஜம்மு–காஷ்மீரில் சட்டப் பேரவைத் தொகுதி மற்றும் மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழு, தனது பணிகளை நிறைவு செய்ய மேலும் ஓராண்டு அவகாசம் பெற்றுள்ளது.
- ஜம்மு–காஷ்மீர் மாநிலம், ஜம்மு–காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்படுவதற்கு முன் லடாக்கில் 4 தொகுதிகள் உள்பட மொத்தம் 87 சட்டப் பேரவைத் தொகுதிகள் இருந்தன.
- ஜம்மு–காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டப்படி, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 24 தொகுதிகள் உள்பட 107 முதல் 114 பேரவைத் தொகுதிகள் வரை உருவாக்கலாம். இதனால், ஜம்மு–காஷ்மீரில் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை 83 முதல் 90 வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது.

## உலக பல்கலைக்கழக தரவரிசை

| Engineering and Technology | |
|---|---|
| Rank | University |
| 1 | MIT, U.S. |
| 2 | Stanford, U.S. |
| 3 | Cambridge, U.K. |
| 49 | IIT, Bombay |
| 54 | IIT, Delhi |
| 94 | IIT, Madras |

| Natural Sciences | |
|---|---|
| Rank | University |
| 1 | MIT, U.S |
| 2 | Stanfor, U.S |
| 3 | Hardvard, U.S. |
| 92 | IISc, Bangalore |

**இயற்கை அறிவியல் பிரிவு**

- பெங்களூரு இந்திய அறிவியல் நிறுவனம் (IISI) 92வது இடத்தை பிடித்துள்ளது.

**பொறியியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவு**

- பாம்பே, மெட்ராஸ், டெல்லி IITக்கள் முதல் 100 பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

## வாழ்வதற்கு வசதியான நகரங்கள் பட்டியலில் பெங்களூரு முதலிடம்

- மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்புற விவகாரங்கள் அமைச்சகம், நாட்டில் 111 நகரங்களில் மக்கள் வாழ்வதற்கு தேவையான வசதிகள் எந்த

அளவுக்கு இருக்கிறது என்பதை ஆய்வுசெய்ய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

- 2020ம் ஆண்டுக்கான இந்த பட்டியலில் 10 இலட்சத்திற்கு மேல் மக்கள் வசிக்கும் நகரங்களில் பெங்களூரு முதலிடம்.
- இதையடுத்து புனே, அகமதாபாத், சென்னை, சூரத், நவிமும்பை, கோவை, வடோதரா
- **கடைசி இடம்:** பரோலி, தன்பாத், ஸ்ரீநகர்.
- 10 இலட்சத்திற்குள் மக்கள் வசிக்கும் நகரங்கள் – சிம்லா
- வாழ்வதற்கு வசதியான நகரங்கள் பட்டியலில் 40 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வாழும் நகரங்களில் 100 மதிப்பெண்களுக்கு 62.61 புள்ளிகள் பெற்று சென்னை நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

**பொலிவுறு நகரங்கள் திட்டம்:**

- துவக்கம் – 2015
- அமைச்சகம் – மத்திய நகர்ப்புற வீட்டு வசதி அமைச்சகம்.
- நோக்கம் – நகர்ப்புற பகுதிகளில் சிறப்பான கட்டமைப்பு வசதிகள் மற்றும் தரமான வாழ்க்கைக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துதல்.

## சுதந்திர இந்தியாவின் 75–ஆவது ஆண்டு கொண்டாட்டம்

- சுதந்திர இந்தியாவின் 75–ஆவது ஆண்டு கொண்டாட்டத்தை திட்டமிடுவதற்காக, பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் 259 உறுப்பினர்களுடன் தேசிய அளவில் ஓர் உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- அந்தக் குழுவில் முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டீல், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.போப்டே, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், 28 மாநிலங்களின் முதல்வர்கள், பாஜக மூத்த தலைவர் அத்வானி, பெரும்பாலான மத்திய அமைச்சர்கள், சில மாநில ஆளுநர்கள் இடம் பெற்றுள்ளனர்.
- பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் போன்ற கலைஞர்கள், நோபல் பரிசு பெற்ற பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் ஆகியோரும் உயர்நிலைக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

## திரிபுராவின் புதிய அறிவியல் மையம்

- திரிபுரா மாநில ஆளுநர் ரமேஷ் பயாஸ் உதய்பூரில் அறிவியல் மையத்தை திறந்து வைத்தார்.
- அறிவியலில் இதுவரை அறிந்திராத பல புதிய தகவல்களை அறிவதற்காக தேசிய அறிவியல் அருங்காட்சியக குழுவால் இது உருவாக்கப்பட்டது.
- இந்த குழுவால் உருவாக்கப்படும் 22வது அறிவியல் மையம் இதுவாகும்.

## தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் (institutes of National Importance)

- தேசிய நாடக பள்ளிக்கு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் பட்டியலில் சேர்க்கப்பட உள்ளது.
- தேசிய நாடகப் பள்ளி வாரணாசி, பெங்களூரு, ஆர்தலி, கேங்டக் போன்ற பிராந்திய பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது.
- நாட்டின் குறிப்பிட்ட பகுதியில் மிகவும் திறமையான நபர்களை வளர்ப்பதில் ஒரு முக்கிய பங்காற்றும் முக்கயிமான பொது உயர் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் ஓர் அங்கீகாரம்.
- இந்தியாவில் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இந்த அந்தஸ்து வழங்கப்படுகின்றன.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்கள் பெறும் சிறப்பு அங்கீகாரம் மற்றும் நிதியை இந்திய அரசங்கத்திடமிருந்து பெறுகின்றன.
- தற்போது இந்தியாவில் 130 சிறப்பு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் உள்ளன.

## இந்திய அறிவியல் ஆராய்ச்சி ஊக்கத்தொகை – 2021

- இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையால் 2015ம் ஆண்டு முதல் அண்டை நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அறிவியல் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.
- ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூடான், மாலத்தீவு, மியான்மர், நேபாளம், இலங்கை, தாய்லாந்தை சேர்ந்த 40 நபர்களுக்கு 2021ம் ஆண்டுக்கான உதவித்தொகைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

## உலகின் முதல் பெண்கள் கப்பல்

- உலக கப்பல் பயண வரலாற்றில் முதன்முறையாக இந்தியா கப்பல் கார்பரேஷனின் (SCI) M.T.ஸ்வர்ணகிருஷ்ணா என்ற கப்பலை முழுவதுமாக பெண்கள் இயக்கி சாதனை புரிந்துள்ளனர்.

- சர்வதேச பெண்கள் தினத்தை (மார்ச் 8) கருத்தில் கொண்டு இந்திய பெண்கள் இந்த சாதனையை புரிந்துள்ளனர்.
- ஜவஹர்லால் நேரு துறைமுகத்திலிருந்து கப்பல் போக்குவரத்து இணை அமைச்சரால் (மான்சுக் மண்டவியா) இது துவங்கி வைக்கப்பட்டது.

**சர்வதேச கப்பல் போக்குவரத்து அமைப்பு:**

- இந்தியா உறுப்பினரான வருடம் – 1959
- துவக்கம் – 1948
- தலைமையகம் – இலண்டன், இங்கிலாந்து

## 75–ஆவது சுதந்திர தின நிறைவு நிகழ்ச்சிகள்

- நாடு சுதந்திரமடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதைக் கொண்டாடுவது தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்காக பிரதமர் மோடி தலைமையில் 259 உறுப்பினர்களைக் கொண்ட உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**இந்த நிகழ்ச்சியின் கருத்துருக்கம்:**

- 1947ம் ஆண்டு முதல் நாம் கண்டுள்ள வளர்ச்சியும் சாதனைகளையும் உலக நாடுகளுக்கு பறைசாற்ற வேண்டும்.
- சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களின் தியாகத்தையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- நாட்டை காப்பதற்காக உயிர் தியாகம் செய்த வீரர்களை பெருமைப்படுத்தும் வகையில் கொண்டாட்டங்கள் அமையும்.
- நாட்டின் வளர்ச்சிக்கு விஞ்ஞானிகள் உள்ளிட்ட பலர் தங்கள் கடின உழைப்பின் வாயிலாக பங்களித்துள்ளனர்.
- ஞானிகளின் ஆன்மீக ஒளியை பிரதிபலிக்க செய்யவேண்டும்.

## 50% அங்கன் வாடிகளில் மட்டும் குடிநீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது

- ஜல்சக்தி அமைச்சகத்தால் கடந்த ஆண்டு அக்டோபர் 2 முதல் இந்தாண்டு ஜனவரி 10 வரையிலான 100 நாட்களில் இந்தியா முழுவதுள்ள பள்ளிகளில் 100% குழாய் வழிகுடிநீர் வசதியை ஏற்படுத்தும் பிரச்சாரம் நடத்தப்பட்டது.
- ஆனால் 50% அளவிற்கு மட்டுமே இந்த சாதனை எட்டப்பட்டுள்ளதாகபாராளுமன்றநிலைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ஆந்திரா, கோவா, ஹரியானா, ஹமாச்சலப் பிரதேசம், தமிழ்நாடு, தெலுங்கானா, பஞ்சாப் போன்ற மாநிலங்கள் 100% குடிநீர் வசதியை பள்ளிகளில் ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## Shop to Donate தளம் துவக்கம்

- சேது பவுன்டேஷன் அமைப்பு பெண்களினால் கைகளால் செய்யப்பட்ட கைவினை பொருட்களை விற்பனை செய்வதற்கான கல்ப விருட்சம் Shop to Donate தளம் துவங்கப்பட்டுள்ளது.
- இதில் முதல் பொருளாக மேகாலயாவின் ஜெயந்தியா மலைப்பகுதியில் விளையும் லகாடாங் மஞ்சள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது.

## இந்தியா–வங்கதேசம் இடையிலான மைத்ரி சேது பாலத்தை திறந்து வைத்தார் மோடி

- இந்தியா வங்கதேசம் இடையே கட்டப்பட்டுள்ள மைத்ரி சேது பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
- வடகிழக்கு மாநிலமான திரிபுரா மற்றும் வங்கதேசம் இடையே பெனி ஆறு பாய்கிறது. இந்த ஆற்றின் குறுக்கே இரு நாடுகளையும் இணைக்கும் வகையில் மைத்ரி சேது பாலம் கட்டப்பட்டது. 1.9 கி.மீ. நீளமுள்ள இந்த பாலம் திரிபுராவின் சப்ரூம் நகரையும் வங்கதேசத்தின் ராம்கரையும் இணைக்கிறது. இந்த பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் திறந்து வைத்தார்.
- இரு நாடுகளிடையேயான போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் நோக்கில் பாலம் கட்டப்பட்டுள்ளது.

**இந்தியா–வங்கதேசம் இடையிலான நதி மீது "நட்பு பாலம்"**

- பாலத்தின் பெயர் – நட்பு பாலம் (மைத்ரி சேது)
- வங்கதேச பிரதமர் –ஷேக் ஹசீனா

## காஞ்சி காமகோடி குழந்தைகள் மருத்துவமனை இந்தியாவின் சிறந்த மருத்துவமனையாக தேர்வு

- இந்தியாவின் சிறந்த குழந்தைகள் நல மருத்துவமனையாக காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- காரணம்: சேவை மற்றும் மருத்துவ வசதிகள் மற்றும் சிகிச்சை கூட்டமைப்பிற்காக
- உலகளாவிய தர ஆய்வு நிறுவனமாக ஸ்டாஸ்டிகா நிறுவனமும், நியூஸ் வீக் இதழும் இணைந்து சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் மருத்துவமனைகளின் பட்டியலை கடந்த 5–ஆம் தேதி வெளியிட்டன. அதில் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட 25 நாடுகளில் உள்ள தலைசிறந்த மருத்துவமனைகளைத் தரஆய்வுக்குட்படுத்தி அதன் அடிப்படையில் சிறந்த மருத்துவமனைகள் தேர்வு செய்யப்பட்டிருந்தன.
- இந்தியாவைப் பொருத்தவரை மொத்தம் 11 மருத்துவமனைகளின் சேவைகள் சிறப்பாக உள்ளதாக அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தது. அதில் குழந்தைகள் நல சிகிச்சைகளைப் பொருத்தவரை நாட்டிலேயே சிறந்த மருத்துவமனையாக காஞ்சி காமகோடி அறக்கட்டளை மருத்துவமனை தேர்வாகியுள்ளது.

## ரூ.242 கோடியில் அயோத்தியில் விமான நிலையம் கட்ட ஒப்புதல்

- உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் விமான நிலையம் கட்டுவதற்கு ரூ.242 கோடி ஒதுக்கீடு செய்து அதற்கான ஒப்புதலை இந்திய விமான நிலையங்கள் ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- முதல் கட்ட விமான நிலைய பணிக்காக சுமார் 270 ஏக்கர் நிலத்தை உத்தரபிரதேச அரசு வழங்கியுள்ளது.

## NHRC – National Human Rights Commission (தேசிய மனித உரிமைகள் ஆணையம்)

- மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் – 1993
- ஆணையம் தொடங்கப்பட்ட ஆண்டு – அக்டோபர் 12, 1993.
- பாரிசில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபை சார்பில் மனித உரிமை பாதுகாப்பு ஆணைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இவ்வாணையம் இந்தியாவில் உருவாக்கப்பட்டது.
- தலைமையகம் – பரித்கோட் இல்லம் (புதுதில்லி)
- தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் தொடங்கப்பட்ட ஆண்டு – ஏப்ரல் 17, 1997.
- மாநில மனித உரிமை பாதுகாப்பு ஆணையத்தின் நியமனங்கள் அதன் சிறப்பு குழு பரிந்துரையின்படி மாநில ஆளுநரால் நியமிக்கப்படுகின்றனர்.

## இந்தியாவின் முதல் வன குணப்படுத்தல் மையம்

- உத்திரகாண்ட் மாநிலம் ராணிகேட் அருகில் உள்ள கலிகா பகுதியில் இந்தியாவின் முதல் வன குணப்படுத்தல் மையத்தை துவங்கி உள்ளனர்.
- 13 ஏக்கரில் அமைந்துள்ள இந்த மையம் மக்களை சுகாதாரமாக வலுப்படுத்தவும் வனத்தோடு மக்களை நேரடியாக தொடர்புபடுத்தவும் உத்திரகாண்ட் வனத்துறையால் உருவாக்கப் பட்டுள்ளது.

## இந்திய மலையக இணையத்தளம்

- பிரதமர் நரேந்திர மோடி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இந்திய மலையக இணையத்தளத்தில் சில பொருட்களை வாங்கினார். "டிரைப்ஸ் இந்தியா" என்ற பெயரிலான இந்த இணையத்தளத்தை பார்வையிடுவோர் மற்றும் பொருட்கள் வாங்குவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
- தமிழகத்தில் நீலகிரியில் வசிக்கும் தோடர் இனத்தைச் சேர்ந்த மோனிஷா மேற்கு வங்க மாநிலம் மிதினாபூரில் வசிக்கிறார். 25 வயதாகும் இவர் தோடா சால்வையைத் தயாரிக்கிறார். ஒரு சால்வை தயாரிக்க 6 முதல் 8 நாட்கள் வரையாகும். இந்த சால்வையைதான் பிரதமர் மோடி வாங்கியுள்ளார். பிரதமர் வாங்கியதன் மூலம் தங்களது தயாரிப்பு உலக அளவில் பிரபலமடைந்துள்ளதாக மோனிஷா குறிப்பிட்டுள்ளார்.
- TRIFED – Tribal Co-operative Marketing Federation of India.
- இந்த அமைப்பு பழங்குடியினர் மற்றும் மலையக மக்களின் நலத்திற்காக அவர்களின் பொருள்களின் உற்பத்திற்காக இந்திய பழங்குடியின நலவாழ்வு (Ministry of Tribal Affairs) அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டது.
- தலைமையிடம் – புதுதில்லி
- தொடங்கப்பட்ட ஆண்டு – 1987

## நாடாளுமன்றத்தில் நிறைவேறியது மத்தியஸ்தம்–சமரச சட்டத் திருத்த மசோதா

- மத்தியஸ்தம்–சமரச சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான அவசரச் சட்டத்தை மத்திய அரசு கடந்த ஆண்டு நவம்பரில் இயற்றியது.
- அந்த அவசரச் சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறும் நோக்கில், மத்தியஸ்தம்–சமரச

சட்டத் திருத்த மசோதா, பட்ஜெட் கூட்டத்தொடரின் போது மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

- குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் முறைகேடு செய்யப்பட்டிருப்பது தெரியவந்ததால், அந்த ஒப்பந்தம் தொடர்பாக மத்தியஸ்தம் மற்றும் சமரச வாயிலாக அளிக்கப்பட்ட தீர்வை அமல்படுத்துவதற்குத் தடை பெறும் வாய்ப்பை இந்த மசோதா வழங்குகிறது. அந்த மசோதாவுக்கு மக்களவை பிப்ரவரி 12–ஆம் தேதி ஒப்புதல் வழங்கியது. அதைத் தொடர்ந்து, மசோதாவை அறிமுகம் செய்து வைத்தார்.
- இம்மசோதாவை மாநிலங்களவையில் சட்டத்துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் மார்ச் 9 அன்று அறிமுகம் செய்து வைத்தர்.

## இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய மின்உற்பத்தி பூங்கா

- தெலுங்கானா மாநிலம் பெடபள்ளி மாவட்டம் ராமகுண்டம் அணை பகுதியில் 100 மெகாவாட் திறனுள்ள மிதக்கும் சூரியன் உற்பத்தி பூங்காவை தேசிய அனல்மின் உற்பத்தி அமைப்பு அமைத்து வருகிறது.
- ஜுன் மாதத்தில் பயன்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தென்னிந்தியாவில் எட்டயபுரம் (தமிழ்நாடு) பகுதியில் 230 மெகாவாட் உற்பத்தி நிலையம் உட்பட 447 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி நிலையங்களை செயல்பாட்டுக்கு கொண்டுவர தேசிய அனல்மின் உற்பத்தி அமைப்பு செயல்படுத்தி வருகிறது.

## இந்தியாவின் முதல் உலக திறன் மேம்பாட்டு மையம்: புவனேஷ்வர்

- ஒடிசா மாநில புவனேஷ்வரில் உலக திறன் மேம்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- ஒடிசாவின் முதல்வர் – நவீன் பட்நாயக்
- தலைநகரம் – புவனேஷ்வர்
- ஆளுநர் – கனேஷி லால்

## வளர்ச்சி மிகு நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 5–ஆம் இடம்

- அனைவரையும் கவரும் விதத்திலான வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா 5–ஆவது இடத்தைப் பிடித்துள்ளதாக பிரைஸ் வாட்டர் கூப்பர்ஸ் (பி.டபிள்யூ.சி) நிறுவனத்தின் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- பிரெக்ஸிட் ஒப்பந்தத்துக்குப் பிறகு பிரிட்டன் இப்பட்டியலில் நான்காவது இடத்துக்கு (11 சதவீதம்) முன்னேறியுள்ளது. இதன் மூலம், அந்த நாடு இந்தியாவை (8 சதவீதம்/5–ஆவது இடம்) விஞ்சியுள்ளது. இதே பட்டியலில், ஆஸ்திரேலியாவை பின்னுக்கு தள்ளி ஜப்பானும், ஆறாவது இடத்தை பிடித்துள்ளதாக பி.டபிள்யூ.சி ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரேஷன் பொருள்களை வாங்க "மேரா ரேஷன்" செயலி

- நாடு முழுவதும் "ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை" முறை விரைவில் முழுமையாக அமல்படுத்தப்பட உள்ள நிலையில் இதற்காக "மேரா ரேஷன்" என்கிற செல்லிடப்பேசி செயலியை மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.
- "ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை" முறையை முதன்முதலில் மத்திய அரசு 2019–ஆம் ஆண்டு 4 மாநிலங்களில் அறிமுகப்படுத்தியது. இந்தத் திட்டத்தை தற்போது 2020 டிசம்பர் மாதம் 32 மாநிலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதில், தமிழகம் உள்பட 17 மாநிலங்களில் முழுமையாக செயல்பாட்டுக்கும் வந்துவிட்டது. இதையொட்டி மத்திய அரசு "மேரா ரேஷன்" என்கிற செல்லிடப்பேசி செயலியையும் உருவாக்கியுள்ளது.
- கரோனா தொற்று காலகட்டத்தில் புலம்பெயர்ந்தவர்கள் மிகவும் பலனடைந்தனர். 2020 ஏப்ரல் முதல் 2021 பிப்ரவரி வரை 15.4 கோடி புலம் பெயர்ந்தவர்களுக்கான பரிவர்த்தனை நடைபெற்றது. எந்த பகுதியில் இருந்தாலும் உணவுப் பொருள்களுக்கான மானியம் அவர்களுக்கு கிடைத்தது.
- தற்போது ஒரே நாடு, ஒரே குடும்ப அட்டை திட்டத்தின் கீழ் மாதம் சுமார் ஒன்றரைக் கோடி பேர் இடம் பெயர்வு அல்லது புலம் பெயர்ந்தவர்களுக்கான பரிவர்த்தனைகள் நடைபெற்று வருகின்றன.
- ஆதார் அட்டையுடன் இணைக்கப்பட்ட பயோமெட்ரிக் ரேஷன் அட்டை மூலம் நாடு முழுவதும் எந்த பகுதியிலும் எந்த ரேஷன் கடையையும் விருப்பப்படி தேர்வு செய்து பொருள்களைப் பெற முடியும். வாங்காத பொருள்களை சொந்த ஊர் திரும்பிய பின்னரும் பெற்றுக் கொள்ள முடியும்.

## சர்வதேச ஆயுர்வேத திருவிழா

- நான்காவது சர்வதேச ஆயுர்வேத திருவிழாவை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி.
- ஆயுர்வேதத்தை ஒரு முழுமையான மானுட அறிவியல் என்று கூற முடியும். உடல்நலம் மற்றும் மன நலத்தையும் அளிப்பதில் ஆயுர்வேதம் மற்றும் பாரம்பரிய மருந்துகளின் தாக்கம் அளப்பரியது.

- இந்த மருத்துவமுறையை மேம்படுத்த மத்திய அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதற்காக தேசிய ஆயுஷ் இயக்கத்தை இந்தியா அமைத்திருக்கிறது.

## பழங்குடியின சபையில் குடியரசு தலைவர்

- உத்திர பிரதேச மாநிலம் சோன்பத்ரா மாவட்டத்தில் நடைபெற்ற வன்வாசி சமாஜம் என்ற பழங்குடியின சபை கூட்டத்தில் குடியரசு தலைவர் ராம்நாத் கோவிந்த் பங்கேற்றார்.

## தேசிய மக்கள்தொகை பதிவேடு இணையத்தளம் வாயிலாக சேகரிக்க திட்டம்

- தேசிய மக்கள்தொகை பதிவேடு இணையத்தளம் வாயிலாக சேகரிக்க உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது
- என்பிஆர் என சுருக்கமாக அழைக்கப்படும் தேசிய மக்கள்தொகை பதிவேடு இந்த ஆண்டு (2021) எடுக்கப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- என்பிஆர் என்பது முதன்முறையாக 2010-ம் ஆண்டு அப்போது ஆட்சியில் இருந்த மன்மோகன் சிங் அரசால் கொண்டு வரப்பட்டது. 2015-ம் ஆண்டு என்பிஆர் உடன் ஆதார் இணைக்கப்பட்டது. ஆனால், அசாம் மாநிலத்தில் தேசிய குடிமக்கள் பதிவேடு (என்ஆர்சி) நடைமுறைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து என்பிஆர் பற்றிய பல சர்ச்சைகள் உருவாகின.
- என்பிஆர் என்பது நாடு முழுவதும் வழக்கமான குடிமக்களிடம் இருந்து தகவல்களைத் திரட்டுவதுதான். மக்களிடம் இருந்து கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள், தேசிய அளவில் தகவல்கள் திரட்டப்படும். இதற்கான தகவல்கள் 1955-ம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் மற்றும் 2003-ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பு விதிமுறையின் கீழ் பெறப்படும்.

### தேசிய மக்கள்தொகை பதிவேடு

- மக்கள்தொகை கணக்கெடுப்புப் பிரிவு பதிவாளர் என்பிஆரை நடத்துவர்.
- என்பிஆர் என்பதே நாடு முழுவதும் மக்களிடம் இருந்து பல்வேறு விதத் தகவல்களைத் திரட்டுவதுதான். இதில் மக்கள் குறித்த விவரங்களைச் சேமிப்பதுதான் இதன் நோக்கம். இதில் கீழ்க்கண்ட அடிப்படைத் தகவல்கள் திரட்டப்படும். என்பிர்ஆர் தொடர்பான விவரங்கள் அனைத்தும் மத்திய அரசின் இணையதளத்தில் இடம் பெற்றுள்ளன.
- வழக்கமாக வசிக்கும் மக்கள் என்பது ஒரு பகுதியில் 6 மாதங்களுக்கு மேலாக வசிப்பவர்கள் கணக்கிடப்பட்டு அவர்கள் வழக்கமாக வசிக்கும் மக்களாகக் கருதப்படுவர்.

## படேல் சிலை

- 'இந்தியாவின் இரும்பு மனிதர்" என்று அழைக்கப்படும் சர்தார் வல்லபாய் படேல், நாட்டின் முதல் துணை பிரதமர், முதல் உள்துறை அமைச்சர் என்ற பெருமைக்கு சொந்தக்காரர், நாடு சுதந்திரம் அடைந்தபோது பல்வேறு பகுதிகளாக பிரிந்திருந்த இந்தியாவை ஒன்றிணைத்தவர். அவரது சொந்த மாநிலமான குஜராத்தில், நர்மதை நதியில் சர்தார் சரோவர் அணையில் இருந்து 3.2 கி.மீ. தொலைவில் சாதுபெட் என்ற இடத்தில் ரூ.3,000 கோடியில் 182 மீட்டர் உயரத்தில் அவருக்கு பிரம்மாண்ட சிலை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒற்றுமையின் சிலை என்று பெயர் சூட்டப்படிருக்கிறது. இது உலகின் மிக உயரமான சிலையாகும்.
- கடந்த 2018 அக்டோபர் 31-ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி சர்தார் படேல் சிலையை திறந்து வைத்தார்.
- சில மாதங்களிலேயே உலகின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக இது உருவெடுத்தது.
- சுற்றுலா பயணிகளை ஈர்க்க படேல் சிலையை ஹெலிகாப்டரில் சுற்றிப் பார்க்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சர்தார் சரோவர் அணைக்கட்டு சுற்றுலா, படகு சவாரி, பறவைகளை பார்வையிடுவது உள்ளிட்ட அம்சங்களும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.
- சென்னை உட்பட நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து சர்தார் படேல் சிலை அமைந்துள்ள குஜராத் மாநிலம், கேவாடியாவுக்கு நேரடி ரயில் சேவைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.
- இதுவரை 50 லட்சம் பேர் சர்தார் படேல் சிலையை பார்வையிட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜம்மு காஷ்மீரில் உலகின் உயரமான ரயில்வே பாலம்

- ஜம்மு காஷ்மீரில் செனாப் ஆற்றின் மேல் உலகின் மிக உயரமான ரயில்வே பாலம் அமைக்கும் பணி இறுதிகட்டத்தை எட்டியுள்ள நிலையில், இதனை வரலாற்று நிகழ்வு என்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

- 1315 மீட்டர் நீளத்தில் 17 இடைவெளி பகுதிகளைக் கொண்ட ரயில்வே பாலம் செனாப் ஆற்றின் மீது கட்டப்பட்டு வருகிறது.
- இந்தப் பாலத்தின் மொத்த நீளத்தில் 476 மீட்டர் ஆற்றின் மீது கட்டப்பட்டு வருகிறது. பாலத்தின் அதிகபட்ச உயரம் கடல் மட்ட அளவிலிருந்து 359 மீட்டராக உள்ளது.
- பிரான்சில் உள்ள ஈஃபில் டவர் உயரம் 304 மீட்டர் ஆகும்.
- இதன் மூலம் இந்த ரயில்வே பாலத்துக்கு உலகின் மிக உயரமான கட்டுமானம் என்ற பெருமை கிடைத்துள்ளது.
- இந்தப் பாலம் 2021 டிசம்பரில் முழுவதுமாக முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வர உள்ளது. காஷ்மீர் பள்ளத்தாக்கு பகுதிகளை நாட்டின் பிற பகுதிகளுடன் இணைக்க இந்த ரயில்வே பாலம் பயன்படும் எனவும் அவர் கூறினார்.

## பெண்களுக்கான உதவி எண்கள் ஒருங்கிணைப்பு

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் பெண்களுக்கு வழங்கி வந்த அனைத்து உதவி எண்களையும் ஒருங்கிணைத்து ஒரே எண்ணாக உருவாக்கி உள்ளதாக தெரிவித்துள்ளது.
- 100 மாவட்டங்களில் முதல் கட்டமாக மிக அவசர தேவைகளுக்கு 112 என்ற எண்ணும் சாதாரண தேவைகளுக்காக 181 என்ற எண்ணும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்திய–சர்வதேச அளவிலான நம்பிக்கைகுரிய நாடாக அறியப்படுகிறது: வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்

- இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியா கடந்த சில ஆண்டுகளில் உலக அளவிலான நன்மதிப்பையும் நம்பிக்கையும் பெற்றிருப்பதாக பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவிட்–19 தடுப்பு மருந்துகள் இதுவரை 100 நாடுகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 82 நாடுகளுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

## உலக காற்று தர குறியீடு–2020

- உலகின் மிகவும் அதிக காற்று மாசடைந்த தலைநகரங்களில் புதுதில்லி 3 ஆண்டாக இடம்பெற்று உள்ளது என 2020 உலக காற்று தரக்குறியீட்டில் தெவிக்கப்பட்டுள்ளது.
- இந்த குறியீடு சுவிட்சர்லாந்தை சேர்ந்த IQAir என்ற அமைப்பு வெளியிடப்படுகிறது.
- உலகளாவிய அதிக மாசடைந்த நகரமாக சீனாவின் ஜின்ஜியாங் முதலிடத்தில் உள்ளது.
- இந்த பட்டியலில் புதுதில்லி 10வது இடத்தில் உள்ளது.

### IQAir குறியீடு

- 2.5 அளவு துகள் அளவு மாசுக்களின் அடிப்படையில் இந்த குறியீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு 106 நாடுகளின் நகரங்களில் 50 அதிக மாசடைந்த நகரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளது.

## FSSAIல் அங்கன்வாடி உணவுகள்

- அங்கன்வாடிகளில் கொடுக்கப்படும் உணவுகளின் தரத்தையும் அதில் உள்ள சத்துக்களையும் FSSAI ஆய்வகங்கள் ஆய்வு செய்யும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி நிறுவனம் மிஷன் போஷன் என்ற திட்டத்தை கிராம பஞ்சாயத்துகளின் உதவியோடு தொடங்கியது.
- இது தற்போது கிராம பஞ்சாயத்து அளவில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களுக்கு தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகிறது.
- FSSAI – Food Safety and Standard Authority of India.

### FSSAI

- சட்டம் இயற்றபட்ட ஆண்டு – 2006
- உருவாக்கம் – 2011
- தலைமையிடம் – புதுதில்லி

## கன்டெய்னர் பிரச்சினையைத் தீர்க்க "பியோ" வின் புதிய சேவை

- கன்டெய்னர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய ஏற்றுமதி ஆணையம் புதிய சேவையைத் தொடங்கி உள்ளது. இதுகுறித்து, இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் ('பியோ') வெளியிட்ட செய்திக் குறிப்பு:
- ஏற்றுமதியாளர்களுக்கு தாங்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்களை அனுப்புவதற்கு கன்டெய்னர்கள் தேவைப்படுகின்றன. சில நேரங்களில் போதிய அளவு கன்டெய்னர்கள் கிடைக்காததால், குறித்த நேரத்துக்குள் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை உள்ளது.

- இந்நிலையில், ஏற்றுமதியாளர்களுக்கு உதவுவதற்காக, இந்திய ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் 'இ-மாடுல்' என்ற ஆன்லைன் சேவையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதில், ஏற்றுமதியாளர்கள், தங்களுக்குத் தேவையான கன்டெய்னர்கள் குறித்த விவரத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். இதன்மூலம், மொத்த இருப்பில் எவ்வளவு கன்டெய்னர்கள் உள்ளன என்பதை ஆய்வு செய்து, அதில் குறிப்பிட்ட ஏற்றுமதியாளருக்கு ஒதுக்க முடியும்.
- அத்துடன், துறைமுகங்களில் சரக்குக் கப்பல்களில் கன்டெய்னர்களை ஏற்றுவதற்கான காலநேரம் மிச்சமாவதோடு, துறைமுகங்களில் போக்குவரத்து நெரிசலும் குறையும்.

## நிர்பயா நிதி

- நாடு முழுவதும் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமான மத்திய அரசு நிர்பயா நிதியம் என்ற நிதியை உருவாக்கியது.
- மத்திய அரசு இதற்கு முதல் கட்டமாக ரூ.10 ஆயிரம் கோடி ஒதுக்கியது. இந்த நிதியிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் நிர்பயா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.
- இந்த திட்டத்தின் கீழ் தமிழக அரசுக்கு கடந்த 4 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட ரூ.190 கோடியில் தமிழக அரசு வெறும் ரூ.6 கோடியை மட்டுமே செலவு செய்துள்ளது.

### நிர்பயா நிதி

- 2013ல் அப்போதைய நிதி அமைச்சர் ப.சிதம்பரத்தால் அறிவிக்கப்பட்டது.
- முதல் கட்டமாக 1000 கோடி நிதி ஒதுக்கப்பட்டது.
- இந்த நிதியை மத்திய நிதி அமைச்சகம் நிர்வகிக்கிறது.
- இந்த நிதிநிலை செயல்படுத்தும் நோக்கம் மற்றும் கட்டமைப்பை பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் கண்காணிக்கிறது.

## உள்துறை அமைச்சகத்தின் கீழ் குழந்தைகள் நல உதவி எண்

- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வந்த குழந்தைகள் நல உதவி எண் (1098) உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுவதற்கான முன்னெடுப்பு துவங்கப்பட்டு உள்ளது.
- இந்தியா குழந்தைகள் நல பவுண்டேஷன் மூலம் இந்த 1098 எண் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## போஷான் பக்வாடா

- மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் மார்ச் 16 முதல் 31, 2021 வரையில் போஷான் பக்வாடா என்ற ஊட்டச்சத்து திட்டத்தை செயல்படுத்த உள்ளது.
- சமூக நலத்துறை அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை இந்த போஷான் பக்வாடாவை மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தும்.

### போஷான் பக்வாடா 2021

- போஷான் பஞ்சாயத்துகளில் ஊட்டச்சத்து குறைபாடுகளை பெண்கள் மற்றும் குழந்தைகளிடையே களைவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

### போஷான் அபியான்

- 2017-மார்ச் 8ல் துவங்கப்பட்டது

### போஷான் மா (போஷான் மாதம்)

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் போஷான் மாதமாக இந்தியா முழுதும் கடைப்பிடிக்கப்படுகிறது.

## உணவு பாதுகாப்புச் சட்டம்: 12 ஆய்வுக் குழுக்கள்

- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆய்வு செய்ய 12 நிறுவனங்களின் குழுக்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- இது குறித்து மாநிலங்களவையில் உணவு பாதுகாப்புத் துறை இணையமைச்சர் தன்வோ ராவ்சாஹிப் தாதாராவ் கூறியதாவது:
- கடந்த 2018-2020 வரையிலான காலகட்டத்தில் பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் என 26 குழுக்கள் ஆய்வுக்கு நியமிக்கப்பட்டன. தற்சமயம் 12 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்கள் உணவு பாதுகாப்புச் சட்டத்தை அமல்படுத்தியதால் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் என்றார் அவர்.
- உணவு பாதுகாப்புச் சட்டம், கடந்த 2013-ஆம் ஆண்டு அமல்படுத்தப்பட்டது. அந்த சட்டத்தின்படி, ஒரு குடும்பத்துக்கு மாதம் ஒன்றுக்கு 35 கிலோ உணவு தானியம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலம் நாடு முழுவதும் 81.83 கோடி பயன்பெறுகிறார்கள்.

## சுரங்க மேம்பாட்டு சட்டத் திருத்த மசோதா

- கனிமச் சுரங்க மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை சட்டத்திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- 1957–ஆம் ஆண்டைய சுரங்கங்கள், தாதுக்கள் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான மசோதா, மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.
- நிலக்கரி, சுரங்கத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி பேசியதாவது:
- தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைப் போன்று இந்தியாவும் 95 தாதுக்களை உற்பத்தி செய்கிறது. இருந்தபோதிலும் தங்கம், நிலக்கரி போன்ற முக்கிய தாதுக்கள் இன்னும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இறக்குமதியைக் குறைத்து, உள்நாட்டிலேயே உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலம், நேரடியாகவும் மறைமுகமாகவும் 55 லட்சம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும். தா துவள ஆராய்ச்சியில் தனியாருக்கு அனுமதி அளிக்கப்படும். அந்த நிறுவனங்கள் அதிநவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆராய்ச்சியில் ஈடுபடும். அதிக எண்ணிக்கையிலான சுரங்கங்களும் ஏலத்துக்கு விடப்படும்.
- சுங்கத்துறையின் பங்களிப்பு 1.75 சதவீதமாக உள்ளது. இந்தச் சீர்திருத்தம் மூலம், அத்துறையின் பங்களிப்பு 2.5 சதவீதமாக அதிகரிக்கும் என்றார் அவர்.

## உலக பசி குறியீடு

- 2020ம் ஆண்டு உலக பசிக்குறியீட்டில் 107 நாடுகளில் இந்தியா 94வது இடம் பெற்றுள்ளது.
- 2019ம் ஆண்டிற்கான பட்டியலில் இந்தியா 102வது இடம் பெற்றிருந்தது தற்போது 8 இடங்கள் முன்னேறி 94வது இடம் பெற்றுள்ளது.

### உலக பசி குறியீடு

- கன்சர்ன் வேர்ல்டுவைட் மற்றும் வெல்த் ஹங்கர்லைம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஆண்டுதோறும் உலக பசி குறியீட்டை வெளியிடுகின்றது.
- 2006ம் ஆண்டில் முதன்முதலில் வெளியிடப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபரில் இந்த அறிக்கை வெளியிடப்படும்.
    - 15வது ஆண்டு அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

## தலைமன்னார் – தனுஷ்கோடி கடலில் நீந்தி பெண் சாதனை

- ஹைதராபாத்தில் நர்சரி பள்ளி நடத்தி வருபவர் ஷியாமளா இவர் தெலங்கானா முதல்வர் சந்திரசேகர ராவின் மகளும் மேலவை உறுப்பினருமான கவிதாவின் உதவியால் கடந்த ஆண்டு கரோனா பரவும் நேரத்தில் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை கடலில் 30 மைல் தூரத்தை நீந்தி சாதனை செய்ய தயாரானார்.
- இலங்கை அரசிடமிருந்து அனுமதி கிடைத்ததை தொடர்ந்து இலங்கை கடற்படையினரின் கண்காணிப்பில் தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரை 30 மைல் தூரத்தை ஷியாமளா 13 நேரம் 43 நிமிடத்தில் கடந்தார்.
- இதன் மூலம் உலகிலேயே இந்த கடல் பகுதியை நீந்தி கடந்த 2–வது பெண் என்ற பெருமையை பெற்றார் ஷியாமளா.

## 67–ஆவது தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு

- 67–ஆவது தேசிய திரைப்பட விருதுகள் தில்லியில் அறிவிக்கப்பட்டன. பாலிவுட் நடிகை கங்கணா ரனாவத் சிறந்த நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார். சிறந்த நடிகருக்கான விருது தமிழ் நடிகர் தனுஷ் (படம் அசுரன்) மற்றும் மனோஜ் பாஜ்பாய் (போன்ஸ்லே) ஆகிய இருவருக்கும் இணைந்து வழங்கப்பட்டுள்ளது. இதில், தமிழ் திரைப்படங்களுக்கு 6 தேசிய விருதுகள் உள்ளிட்ட 7 விருதுகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முழு நீள திரைப்பட விருதுகள்: 2019–ஆம் ஆண்டுக்கான சிறந்த தேசிய திரைப்படமாக "மரக்கார் அரபிக்கடலின்டே சிம்ஹம்" என்கிற மலையாள படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.2,50,000 பண முடிப்புடன் ஸ்வர்ண கமல் விருது அடங்கும். சிறந்த தேசிய நடிகராக இந்த ஆண்டுக்கு இரு நடிகர்கள் தேர்வு செய்யப்பட்டு ரஜத் கமல் விருது பெற்றுள்ளனர். "போன்ஸ்லே" ஹிந்தி படத்தில் நடித்த நடிகர் மனோஸ் பாஜ்பாய், தமிழில் "அசுரன்" படத்தில் நடித்த நடிகர் தனுஷ் ஆகியோர் தேர்வாகியுள்ளனர். இதே ஆண்டின் சிறந்த நடிகையாக "மணிகர்னிகா: தி குயின் ஆஃப் ஜான்ஸி" என்ற ஹிந்தி படத்தில் நடித்த கங்கணா ரணாவத் ரஜத் கமல் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.
- தமிழ் படங்கள் பெற்ற தேசிய விருதுகள்: சிறந்த குணசித்திர நடிகர் (துணை நடிகர்)–

விஜய் சேதுபதி (படம்: சூப்பர் டீலக்ஸ்), சிறந்த இசையமைப்பாளர் – டி.இமான் (விஸ்வாசம்), சிறந்த குழந்தை நட்சத்திரம் – நாக விஷால் (கே.டி.என்கிற கருப்பு துரை), சிறந்த ஒலிப்பதிவு – ரசூல் பூக்குட்டி (ஒத்த செருப்பு சைஸ்–7) மற்றும் சிறப்பு ஜூரி விருது என இரண்டு விருதுகள் இந்தப் படத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

- மற்ற மொழிகளில் சிறந்த பொழுதுபோக்குத் திரைப்படம் – மகரிஷி (தெலுங்கு), சிறந்த தேசிய ஒருமைப்பாட்டு திரைப்படம் – தாஜ்மஹல் (மராத்தி), சமூகப் பிரச்னை – ஆனந்தி கோபால் (மராத்தி), சுற்றுச்சூழல் பாதுகாப்பு – வாட்டர் பரியல், சிறந்த தேசிய குழந்தைகளுக்கான படம் – கஸ்தூரி (ஹிந்தி) உள்பட 28 விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- பிராந்திய மொழி படங்கள்: இந்திய அரசியல் சாசன அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 18 வட்டார மொழிகளிலும் சிறந்த படங்கள் தேர்வு செய்யப்பட்டு, 2019 –ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இதில், சிறந்த தமிழ் படமாக வெற்றிமாறன் இயக்கத்தில் வி கிரியேஷன் தயாரித்த "அசுரன்" தமிழ் படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ரூ.1 லட்சம் பண முடிப்பும், ரஜத் கமல் விருதும் அடங்கும். சிறிய திரைப்படங்களுக்கான வரிசையில் "ஆன் இன்ஜினியர்டு ட்ரீம்" என்ற திரைப்படம், குடும்பப் பாங்கான படமாக "ஒரு பாதிரா ஸ்வப்னம் போலே" என்கிற மலையாள படம் உள்பட 22 குறும்படங்கள் விருதுக்கு தேர்வாகியுள்ளன.

## கேன்–பெட்வா இணைப்பு

- மத்திய பிரதேச மாநிலத்தில் பாயும் யமுனையின் துணை நதியான கேன் நதியிலிருந்து உத்திரபிரதேசத்தின் பந்தேல் கண்ட் பகுதியை வளமாக்க பெட்வா நதியுடன் இணைக்கும் திட்டத்திற்கு இரண்டு மாநிலமும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- கேன் நதியிலிருந்து பெட்வா நதியை இணைக்கும் பாதையின் குறுக்காக பன்னா புலிகள் காப்பகம் அமைந்திருப்பதனால் சில சிக்கல்களுக்கு பின்னர் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இதற்காக 230 கி.மீ. கால்வாய் அமைக்கப்பட்டு 77 மீட்டர் உயரம் 2 கி.மீ அகலம் கொண்ட அணை கட்டப்பட உள்ளது. இந்த இணைப்பின் மூலம் 3.64 இலட்சம் ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என தெரிவிக்கப்பட்டது.

### பன்னா புலிகள் காப்பகம்

- மத்திய பிரதேசத்தில் அமைந்துள்ளது.

## மழைநீர் சேகரிப்பு திட்டம்

- மார்ச் 22 சர்வதேச தண்ணீர் தினத்தை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் மழைநீர் சேகரிப்பு பிரச்சாரம் துவங்கி வைக்கப்பட்டது.
- இந்த திட்டத்தில் அதிக அளவில் பெண்கள் பங்கேற்க பிரதமர் நாட்டு பெண்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.
- இந்த விழிப்புணர்வு இயக்கம் மத்திய ஜல்சக்தி அமைச்சகத்தால் துவங்கப்பட்டு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படும் என பிரதமர் அறிவித்துள்ளார்.

### தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் (MGNREGA)

- சட்டம் – 2005
- செயலாக்கம் – 2006

## எத்தனால் மேம்பாட்டு கொள்கையை நாட்டிலேயே முதலாவதாக பீகார் மாநிலம் உருவாக்கியுள்ளது

- தேசிய உயிரி எரிபொருள் ஒருங்கிணைப்பு குழுவால் பீகாரின் எத்தனால் மேம்பாட்டு கொள்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த வகையில் தேசிய அளவில் எத்தனால் மேம்பாட்டு கொள்கையை வெளியிட்டுள்ள முதல் மாநிலம் பீகார் ஆகும்.

## இந்தியாவின் முதல் அரசு கால்நடை அவசர ஊர்தி

- ஆந்திர பிரதேச மாநிலத்தில் இந்தியாவிலேயே முதலாவதாக கால்நடைகளை அவசர நேரத்தில் கால்நடை மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லும் அரசு ஆம்புலன்ஸ் சேவை துவங்கப்பட உள்ளது.

## 'கடந்த 4 ஆண்டுகளில் என்.ஜி.ஓ.க்கள் பெற்ற வெளிநாட்டு நன்கொடை ரூ.50,975 கோடி"

- இதில் அமெரிக்காவிலிருந்து மட்டும் அதிகபட்சமாக ரூ.19,941 கோடி நன்கொடை வந்துள்ளது.
- சராசரியாக 18,000 என்.ஜி.ஓ.க்கள் 130 நாடுகளிலிருந்து நன்கொடை பெற்றுள்ளன. வெளிநாட்டு நன்கொடை (ஒழுங்குமுறை) சட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 22,400 என்.ஜி.ஓ.க்கள் பதிவு செய்துள்ளன என்று மத்திய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

## "6.5 லட்சம் கிராமங்களுக்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்பு"

- நாடு முழுவதும் 6.5 லட்சம் கிராமங்களுக்கு கண்ணாடி இழை கேபிள் இணைப்பு (ஆப்டிகல் ஃபைபர்) வழங்குவதற்கான நடவடிக்கையை மத்திய அரசு எடுத்து வருகிறது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத் கூறினார்.
- டிஜிட்டல் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை விரைந்து மேம்படுத்தும் வகையிலும், அனைவருக்குமான குறைந்த விலை அகண்ட அலைவரிசை பயன்பாட்டு வசதி கிடைக்கச் செய்யும் நோக்கத்துடனும் தேசிய அகண்ட அலைவரிசை இயக்கத்தை (என்பிஎம்) மத்திய அரசு கடந்த 2019–ஆம் ஆண்டு டிசம்பர் 17–ஆம் தேதி அறிமுகம் செய்தது.

## தேசிய பிராட் பேண்ட் திட்டம் (National Broad Band Mission)

- தேசிய டிஜிட்டல் தொலைத்தொடர்பு கொள்கை – 2018ன் ஒரு அங்கம்.
- இந்தியா முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களையும் 2022க்குள் பிராண்ட்பேன்ட் வசதியை பெறச்செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## ஆசியாவின் மிகப்பெரிய துலிப் பூந்தோட்டம்

- ஜம்மு–காஷ்மீரின் தால் ஏரியின் கரைகளில் அமைந்துள்ள ஆசியாவின் மிகப்பெரிய துலிப் மலர்கள் தோட்டம் பார்வையாளர்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.
- இந்த தோட்டம் ஜம்மு–காஷ்மீரின் சபர்வான் மலைத்தொடரின் அடிவாரப்பகுதியில் அமைந்துள்ளது.
- வசந்த காலத்தின் இரண்டு மாதங்களில் இந்த தோட்டத்தில் பூக்கள் பூக்க ஆரம்பித்து பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றன.

## முகநூல் அரசியல் விளம்பர செலவினம்: முதலிடத்தில் மேற்கு வங்கம்

- சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருக்கும் மாநிலங்களில் மேற்கு வங்க மாநிலமே முகநூல் அரசியல் விளம்பரங்களுக்கு அதிகம் செலவு செய்திருப்பது தெரியவந்துள்ளது. இதற்காக அந்த மாநில தேர்தலில் களம் காணும் அரசியல் கட்சிகள் கடந்த 90 நாளள்களில் ரூ.3.74 கோடியை செலவழித்துள்ளன.
- மேற்கு வங்கத்துக்கு அடுத்த இடத்தில் தமிழகம் உள்ளது. முகநூல் அரசியல் விளம்பரத்துக்காக தமிழக அரசியல் கட்சிகள் ரூ.3.3 கோடியை செலவழித்துள்ளன.
- சமூக ஊடக வலைதளம் அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரத்தின் மூலம் இது தெரியவந்துள்ளது.

| மாநிலம் | கட்சிகள் செலவழித்த தொகை |
|---|---|
| மேற்கு வங்கம் | ரூ. 3.74 கோடி |
| தமிழ்நாடு | ரூ. 3.3 கோடி |
| அஸ்ஸாம் | ரூ. 61.77 லட்சம் |
| கேரளம் | ரூ. 38.86 லட்சம் |
| புதுச்சேரி | ரூ. 3.34 லட்சம் |

## உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்கான தேசிய வங்கி மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றம்

- நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவற்கு நிதி வழங்குவதற்கான பிரத்யேக தேசிய வங்கியை அமைக்க வழிவகுக்கும் மசோதா நாமாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
- இந்த மசோதாவின் மூலமாக உருவாக்கப்படும் வங்கியின் வரவு–செலவு கணக்கு விவரங்கள், ஆண்டுதோறும் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப்படும்.
- நாடாளுமன்றம் எழுப்பும் கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் இந்த தேசிய வங்கி அமைக்கப்படவுள்ளது.
- உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நிதி வழங்குவதற்காக அமைக்கப்படும் தனியார் வங்கிகளுக்கு 5 ஆண்டுகளுக்கும், தேசிய வங்கிக்கு 10 ஆண்டுகளுக்கும் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க இந்த மசோதா வழிவகை செய்கிறது.
- முதல் கட்டமாக தேசிய வங்கிக்கு ரூ.10 லட்சம் கோடியை மூல தளமாக வழங்குவதற்கு மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன்களைப் பெறுவதற்கும் தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு வங்கிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
- சாலைகள், பாலங்கள் கட்டுமானத்துக்கு மட்டுமல்லாமல் பள்ளிகள், மருத்துவமனைகளின்

கட்டுமானத்துக்கும் தேசிய வங்கி நிதி வழங்கும். உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் வகையில் தேசிய வங்கி அமைக்கப்படும்.

## வங்கதேசத்தின் 50–வது சுதந்திர தின விழாவில் பிரதமர்

- வங்கதேசத்தின் 50–வது சுதந்திர தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.
- கடந்த 1947–ம் ஆண்டு இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் உதயமான பிறகு, மொழிப் பிரச்சினை, மேற்கு பாகிஸ்தானின் (பாகிஸ்தான்) ராணுவ நடவடிக்கைகளால் கிழக்கு பாகிஸ்தானில் சுதந்திர போராட்டம் ஏற்பட்டது. கடந்த 1971–ம் ஆண்டு அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, பாகிஸ்தான் மீது போர் தொடுத்தார். 13 நாட்கள் போரில் பாகிஸ்தான் ராணுவம் தோல்வி அடைந்தது.
- வங்கதேசத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஷேக் முஜிபர் ரஹ்மானின் மகள் ஷேக் ஹசீனா தற்போது இந்த நாட்டின் பிரதமராக பதவி வகிக்கிறார். அவரது தலைமையிலான அரசு நாட்டின் 50–வது சுதந்திர தினத்தை கோலாகலமாக கொண்டாடி வருகிறது.
- வங்கதேச மாணவர்களுக்காக "ஸவர்ணா ஜெயந்தி" என்ற உதவித் தொகை திட்டம் ஏற்படுத்தப்படும். மேலும், வங்கதேச தொழில் முனைவோர் 50 பேரை இந்தியாவுக்கு வருகை தருமாறு அழைப்பு விடுக்கிறேன் என்றார் மோடி.

### வங்காளதேச விடுதலைப் போர்

- வங்காளதேச விடுதலைப் போர் 1971இல் மேற்கு பாகிஸ்தானுக்கும் கிழக்கு பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கும் இடையில் நடந்தது.
- இப்போரில் இந்தியாவும் முக்தி பாஹினியும் (வங்காளதேச விடுதலை இராணுவம்) வென்று வங்காளதேசம் உருவாக்கப்பட்டது
- 1971இல் டிசம்பர் 16ஆம் தேதி பாகிஸ்தான் தளபதி ஏ. ஏ. கே. நியாசி இந்திய தளபதி ஜெகத் சிங் அரோராவிடம் சரணடைந்தார்.

## மொபைல் நீர் வழங்கல் மற்றும் தண்ணீர் அறிவியல் மையம்

- ஹைதராபாத்தை தலைமையிடமாக கொண்ட மைத்ரி அக்வாடெக் உலகின் முதல் காற்றிலிருந்து நீர் அளிக்கும் மொபைல் அமைப்பு மற்றும் தண்ணீர் அறிவியல் மையத்தை அமைக்க உள்ளது.
- இந்த திட்டம் விசாகப்பட்டினம் மாநகராட்சியின் துணையுடன் துவங்கப்பட்டது.
- அக்வாடெக் மேகதூத் சொல்லுயூஷன்ஸ் கியோஷக் (Kiosk) இயந்திரம் காற்றிலிருந்து நீரை உற்பத்தி செய்து நீரை வழங்க உள்ளது.
- மக்களிடையே நீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வையும் இந்த அமைப்பு ஏற்படுத்துகிறது.

## தேசிய நிறுவன சட்ட மேல் அரசியல் முறையீட்டு அமைப்பு

- இது நிறுவன சட்டம் 2013ன் கீழ் உருவாக்கப்பட்டது.

### பணிகள்

- இங்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் மேல் முறையீடு செய்ய இயலும்.
- திவால் நடைமுறை சட்டம் தீர்ப்புகளின் மேல் முறையீடுகள்.
- இதன் தலைவர் இந்திய உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியின் ஆலோசனையில் நியமனம் செய்யப்படுகின்றனர்.

## தகவல் அறியும் உரிமைச்சட்டம்

- சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு 2002.
- இந்திய அரசியலமைப்பின் விதி எண் 19ல் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பேச்சுரிமை போன்ற உரிமையாக வரையறுக்கப்பட்டது.

## கோவோவாக்ஸ் தடுப்பூசி செப்டம்பரில் அறிமுகம்

- புதிய கோவோவாக்ஸ் தடுப்பூசி வரும் செப்டம்பர் மாதம் அறிமுகம் செய்யப்பட வாய்ப்புள்ளது என்று சீரம் இந்தியா நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி (சிஇஓ) அடார் புனோவாலா கூறினார்.
- புணேயில் உள்ள சீரம் நிறுவனம் ஏற்கெனவே "கோவில்ஷீல்ட்" கரோனா தடுப்பூசியை தயாரித்து இந்தியா மற்றும் பிற நாடுகளுக்கு விநியோகித்து வரும் நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த "நோவாவாக்ஸ்" என்ற தடுப்பூசி தயாரிப்பு நிறுவனத்துடன் இணைந்து "கோவோவாக்ஸ்" என்ற இரண்டாவது கரோனா தடுப்பூசியையும் தயாரித்து வருகிறது.
- ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள கோவிட்–19 தடுப்பு மருந்துகள் :
- Pfizer : USA
- Sputnik V: Russia

- Covaxine : Bharath biotech
- Covishield : University of Oxford

## பிஜஎஸ் தரச்சான்று

- கடைகளில் விற்பனை செய்யப்படும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி நிறுவனங்கள் அனைத்தும் மத்திய அரசின் பிஜஎஸ் தரச்சான்றிதழை கட்டாயமாகப் பெற வேண்டும் என்று இந்திய உணவுப் பொருள்கள் ஒழுங்காற்று அமைப்பான எஃப்எஸ்எஸ்ஏஐ உத்தரவிட்டுள்ளது.
- 2011–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட விதிமுறைகளின்படி, இந்திய தரக்கட்டுப்பாட்டு அமைப்பின் (பிஜஎஸ்) சான்றிதழைப் பெறாமல் எந்த நிறுவனமும் குடிநீர் பாட்டில்கள் மற்றும் கேன்களை விற்பனை செய்யக் கூடாது.
- குடிநீர் தயாரிப்பதற்கான எஃப்எஸ்எஸ்ஏஐ சான்றிதழைப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் நிறுவனங்கள், பிஜஎஸ் தரச்சான்றிதழை கட்டாயமாகப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய நிறுவனங்களுக்கு மட்டுமே எங்களது சான்றிதழ் அளிக்கப்படும் என்று எஃப்எஸ்எஸ்ஏஐ அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கதேசத்தில் பிரதமர்

- வங்கதேச தந்தை என்றழைக்கப்பட்ட 'ஷேக் முஜிபுர் ரஹ்மானின் நினைவிடத்தில் பிரதமர் மோடி அஞ்சலி செலுத்தினார்.
- வங்கதேசத்தின் டாக்கா–மேற்கு வங்கத்தின் நியூ ஜல்பைகுரி இடையிலான புதிய பயணிகள் ரயிலை பிரதமர் நரேந்திர மோடியும் ஷேக் ஹசீனாவும் காணொலி முறையில் தொடங்கி வைத்தனர்.

### ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள ரயில் இணைப்புகள்

- டாக்கா– கொல்கத்தா
- குலானா– கொல்கத்தா

## 7வது சுகாதார மாநாடு (NATHEALTH)

- மெய்நிகர் முறையில் நடைபெற்ற 7வது தேசிய சுகாதார மாநாட்டில் (NATHEALTH) டாக்டர் ஹர்ஷ்வர்தன் உரையாற்றினார்.

### பிரதம அமைச்சர் ஆத்ம நிர்பார் ஸ்வஸ்திய யோஜனா:

- கோவிட்–19 காலத்தில் மருத்துவ உள்கட்டமைப்பை வலுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டது.

## ஐக்கிய நாடுகள் அமைதி படை

- சமீபத்தில் இந்தியா 2 இலட்சம் டோஸ் கோவிட்–19 தடுப்பு மருந்துகளை இலவசமாக இந்த அமைதி படைக்கு அனுப்பியுள்ளது.

### ஐக்கிய நாடுகள் அமைதிப்படை:

- ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் மேற்பார்வையில் செயல்படும் ஒரு அமைப்பு.
- இதற்கான செலவினங்கள் ஐ.நா. உறுப்பு நாடுகளிடமிருந்து பெறப்படுகிறது.

### சர்வதேச அளவில்

- 2020 நிலையில் உலக அளவில் 13 ஐக்கிய நாடுகள் அமைதி திட்டங்கள் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பிய கண்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.
- உலக முழுதும் 120 நாடுகளை சேர்ந்த நபர்கள் இந்த படையில் பணியாற்றுகின்றனர்.

## பாங்டேம் வனவிலங்கு சரணாலயம்

- ஹிமாச்சல பிரதேசத்தில் உள்ள பாங்டாம் ஏரி வனவிலங்கு சரணாலயத்தில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான இடம்பெயர்வு பறவைகள் குளிர்காலத்தில் வருகைபுரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அமைவிடம்: ஹிமாச்சல பிரதேசத்தின காங்ரா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- 1994ல் இந்திய அரசு முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் பட்டியலில் இந்த பகுதியை சேர்த்துள்ளது.
- 2012ம் ஆண்டில் பாங்டேம் ஏரி ராம்சார் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 4 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர்: அமைச்சகம்

- இந்தியாவில் 2019–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் 4 கோடி கிராமப்புற குடும்பங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஜல் சக்தி அமைச்சகம் தெரிவித்தது.
- 2024–ஆம் ஆண்டுக்குள் அனைத்து கிராமப்புற குடும்பங்களுக்கும் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் நோக்கில் ஜல் ஜீவன் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி 2019, ஆகஸ்ட் 15–ஆம் தேதி அறிவித்தார்.
- தற்போது 7.24 குடும்பங்கள் (38 சதவீதம்), அதாவது மூன்றில் ஒரு பங்கு ஊரக குடும்பங்கள் குழாய் மூலம் குடிநீரைப் பெறுகின்றன. இதில்

100 சதவீதம் குழாய் மூலம் குடிநீர் வழங்கி கோவா முதல் மாநிலமாகவும், அடுத்த இடங்களில் தெலங்கானா, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளும் உள்ளன.

## தேர்தல் நிதிப் பத்திரங்கள் ஏப்ரல் 1 முதல் விற்பனை

- அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவதற்காக, தேர்தல் நிதிப் பத்திரங்களை ஏப்ரல் 1–ஆம் தேதி முதல் விற்பனை செய்வதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- அரசியல் கட்சிகள் நன்கொடை பெறுவதை முறைப்படுத்தும் நோக்கில் தேர்தல் நிதிப் பத்திரங்களை பாஜக தலைமையிலான மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. அதன்படி, ஜனவரி, ஏப்ரல், ஜுலை, அக்டோபர் ஆகிய மாதங்களின் முதல் 10 நாள்களுக்கு எஸ்பிஐ–யின் குறிப்பிட்ட கிளைகளில் தேர்தல் நிதிப் பத்திரங்கள் விற்பனை செய்யப்படும்.

### தேர்தல் நன்கொடை பத்திரத் திட்டம்

- தொடங்கப்பட்ட ஆண்டு – 2018 ஜனவரி
- State bank of India மூலம் மட்டுமே பெறமுடியும்.
- ஒவ்வொரு காலாண்டின் தொடக்கத்திலும் 10 நாள்கள் வரை இந்த பத்திரத்தை பெற்று 15 நாள்களுக்குள் ஏதாவோர் அரசியல் கட்சியின் வங்கி கணக்கில் வரவு வைக்க வேண்டும்.
- மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு கடைசியாக நடைபெற்ற பொது தேர்தல் அல்லது சட்ட பேரவைக்கான தேர்தலில் ஒரு சதவிகிதத்துக்கு அதிகமான வாக்குகளை பெற்ற கட்சிகளே தேர்தல் நன்கொடை பத்திரத்தை பெறமுடியும்.
- நிதி மசோதா 2017 மூலம் கொண்டுவரப்பட்ட சட்டதிருத்தத்தில் ரூ.2000க்கு மேல் தேர்தல் நன்கொடை பத்திரம் மூலம் பெறுகிற நன்கொடை தொடர்பான தகவல்களை தேர்தல் ஆணையத்திடம் அளிக்க தேவையில்லை என அரசு சட்டத்தை திருத்தியுள்ளது.
- தற்போது தேர்தல் ஆணையத்திடம் நன்கொடை பத்திரம் மூலம் எவ்வளவு பணம் பெறப்பட்டது என்கிற தகவல் இருக்கும். ஆனால் நன்கொடையை யார் அளித்தார் என்கிற தகவல் இருக்காது.

## ஆசியாவின் இதயம் மாநாடு

- உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானில் அமைதி நடவடிக்கைகளுக்காக பிராந்திய நாடுகளிடம் ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்காக கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் துருக்கியில் ஆசியாவின் இதயம்" என்ற பெயரில் ஆசிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்கள் இடையேயான முதல் மாநாடு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.
- 2021–ஆம் ஆண்டுக்கான "ஆசியாவின் இதயம்" 9ஆவது மாநாடு தஜிகிஸ்தான் நாட்டின் தலைநகர் துஷான்பேயில் தொடங்கியது.
- மாநாடு, இரண்டு நாள்கள் நடைபெறுகிறது. இதில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் பங்கேற்றார்.
- மாநாட்டின் ஒரு பகுதியாக தஜிகிஸ்தான் அதிபர் இமாமலி ரஹ்மானை ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார். அப்போது, இரு தரப்பு பொருளாதாரம் உள்பட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை அதிகரிப்பது குறித்து இருவரும் விவாதித்தனர்.
- ஆப்கானிஸ்தானுடன் தஜிகிஸ்தான் 1,400 கி.மீ. எல்லையைப் பகிர்ந்து கொண்டுள்ளது. எனவே, அந்நாட்டில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் தஜிகிஸ்தான் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது.

## போக்ஸோ சட்டம்

- போக்ஸோ சட்டத்தில் மைனர்களை (18 வயதிற்குட்பட்டவர்களையும்) தண்டிப்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.
- பெண் குழந்தைகளை பாலியல் அத்துமீறல்களிலிருந்து காப்பதற்கு 2012ல் இந்த சட்டம் கொண்டு வரப்பட்டது.
- இந்த சட்டம் 18 வயதிற்கு குறைந்தவர்களை குழந்தைகளாகவே கருதுகிறது. அவர்களின் நலம் சார்ந்த சுகாதார, மனரீதியிலான, அறிவுசார், சமூக மேம்பாட்டு விவகாரங்களில் சிறுவர்களை நல்வழிப்படுத்தலே இதன் முக்கிய அம்சமாகும்.

# 7 சர்வதேச நிகழ்வு



### சீன சைபர் தாக்குதல்

- மும்பையில் இயங்கும் அமெரிக்க நிறுவனம் இந்தியாவில் "Shadowpad" என்ற பெயரில் சீன நாடு சைபர் தாக்குதல் நடத்தியதாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திற்கு தெரிவித்துள்ளது.
- 'Shadowpad' என்ற பெயரில் இந்தியாவின் Indian Power Sector's Regional Load Dispatch centres குறிவைப்பதாக தெரிவித்துள்ளது.

### ஓபெக்

- OPEC என்பதன் விரிவாக்கம் – Organization of the Petroleum Exporting Countries
- ஒரு நிரந்தர அரசுகளுக்கிடையிலான அமைப்பாகும்.
- ஈரான், ஈராக், குவைத், சவுதி அரேபியா மற்றும் வெனிசுலா நாடுகள் இணைந்து 1960ம் ஆண்டு பாக்தாத் மாநாட்டில் இந்த அமைப்பு உருவாக்கப்படும்.
- தலைமையிடம் – வியன்னா, ஆஸ்திரியா
- ஈரான், ஈராக், குவைத், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, அல்ஜீரியா, லிபியா, நைஜீரியா, கபான், ஈக்குவடோரியல் கினியா, குடியரசு காங்கோ, அங்கோலா, ஈக்குவடார், வெனிசுலா ஆகிய 14 உறுப்பு நாடுகளைக் கொண்டுள்ளது.

### சர்வதேச ஆற்றல் முகமை

- 1973 எரிபொருள் பற்றாக்குறை காலத்திற்கு பின் 1974ல் உருவாக்கப்பட்டது.
- தலைமையிடம் – பாரிஸ், பிரான்ஸ்
- 2017ல் இந்தியா இந்த அமைப்பில் பகுதிநேர உறுப்பினராக இணைந்தது.
- மெக்ஸிகோ – 2018ல் இந்த அமைப்பில் இணைந்த முதல் லத்தீன் அமெரிக்கா நாடாகும்.

### குவாட் (Quad) தலைவர்கள் மாநாடு

- ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா நாட்டு தலைவர்களின் முதல் மாநாடு நடைபெற உள்ளது.
- இந்தியா, ஜப்பான், அமெரிக்கா என்ற மூன்று நட்பு நாடுகளின் கூட்டமைவு பல ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது.
- இந்த அமைப்பில் கடந்த ஆண்டில் ஆஸ்திரேலியா இணைந்து நான்கு நாடுகள் கூட்டமைவாக உருவானது. இதற்கான யோசனை ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே வால் அளிக்கப்பட்டது.

**நோக்கங்கள்**

- இந்தோ பசிபிக் பிராந்தியத்தில் நிலைத்ததன்மையை ஏற்படுத்துதல்.
- மலபார் பயிற்சியில் பங்கெடுத்தல்.
- பொருளாதார, கொள்கைகள் மற்றும் செயல்பாட்டில் சீனாவின் ஆதிக்கத்தை வலுவிழக்கச் செய்தல்.

### இந்தியா–சுவீடன் மாநாடு 2021

- பிரதமர் நரேந்திர மோடி சுவீடன் பிரதமர் இருவரும் பங்கேற்ற காணொலி காட்சி வாயிலான 52வது மாநாடு சமீபத்தில் நடைபெற்றது.

### ஐ.நா. ஆய்வு அறிக்கை

- இந்தியர்கள் 2019–ம் ஆண்டில் 6.80 கோடி டன் அளவில் உணவுகளை விரயம் செய்திருப்பதாக ஐநாவின் ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.
- "உணவு விரயக் குறியீடு 2021" என்று உணவு விரயம் தொடர்பான ஆய்வறிக்கை ஒன்றை ஐநா வெளியிட்டுள்ளது. உலகளாவிய அளவில் 2019–ம் ஆண்டு 9.31 கோடி டன் அளவில் உணவுகள் விரயம் செய்யப்பட்டுள்ளன.
- இதில் 61 சதவீதம் வீடுகளிலிருந்தும், 26 சதவீதம் உணவு விடுதிகளிலிருந்தும், 13 சதவீதம் சில்லறை விற்பனையின் மூலமும் விரயம் ஆகியிருப்பதாக அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- அந்த வகையில் இந்திய வீடுகளில் 2019–ம் ஆண்டு 6.80 கோடி டன் அளவில் உணவு விரயம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தியாவில் தனி நபர் ஆண்டுக்கு 50 கிலோ உணவை விரயம் செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தனி நபர் ஆண்டுக்கு 59 கிலோ

உணவையும், சீனாவில் தனி நபர் ஆண்டுக்கு 64 கிலோ உணவையும் விரயம் செய்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக உலக அளவில் தயாரிக்கப்படும் உணவில் 17 சதவீதம் விரயம் ஆக்கப்படுகிறது.

- பசுமை குடில் வாயு வெளியேற்றத்துக்கு உணவு விரயம் முக்கிய காரணமாக இருக்கிறது என்றும் உணவு விரயத்தைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபாட்டை கட்டுப்படுத்த முடியும் என்றும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் தொடர்பான அமைப்புத் தெரிவித்துள்ளது.

## புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் பிரான்சுடன் ஒத்துழைப்பு

- புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் பிரான்சுடன் இணைந்து செயல்படுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது
- மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது. அதில் பிரான்சுடன் கடந்த ஜனவரி மாதம் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. இது தொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட அறிக்கையில், "புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக பிரான்சுடன் கையெழுத்தான ஒப்பந்தம் தொடர்பாக அமைச்சரவைக் கூட்டத்தின்போது எடுத்துரைக்கப்பட்டது.
- புதப்பிக்கத்தக்க ஆற்றல் வாயிலாக 2030-ஆம் ஆண்டுக்குள் 450 ஜிகா வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அந்த இலக்கை அடைவதற்கு பிரான்சுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் முக்கியப் பங்களிக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## செக் குடியரசு தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்ய விருப்பம் : ஹவோர்கா

- செக் குடியரசின் இந்தியாவிற்கான தூதர் வாவோர்கா ஆர்காடு நவாப் இளவரசர் முகமது அப்துலுடன் சமீபத்தில் விழாவில் பங்கேற்றார்.
- அப்போது இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்யவும் வர்த்தகத்தை வலுப்படுத்தவும் செக் குடியரசு விரும்புவதாகவும் ஆடோ்டோமேட்டிவ், உணவு பதப்படுத்தல், ஆடைகள், நிதி சேவைகள், பாதுகாப்பு, விமானம் போன்ற துறைகளில் இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற உள்ளது.
- செக் குடியரசில் ஆண்டுக்கு 1.2 மில்லியன் கார்கள் உற்பத்தியாகின்றன. தமிழ்நாடும் ஆட்டோமொபைல் டெட்ராய்டாக திகழ்வதால் தொழில் வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டும் என கூறப்பட்டுள்ளது.
- செக் குடியரசு தலைவர் – மிலாஸ் செமான்
- பிரதமர் – ஆன்ட்ராக் பேபிஸ்
- தலைநகரம் – பராகுவே

## இந்தியாவின் கரோனா தடுப்பூசி கொள்கை மிகச் சிறப்பாக உள்ளது

- கரோனா நோய்த்தொற்றை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. இதன் கரோனா தடுப்பூசி கொள்கை மிகச் சிறப்பாக உள்ளது என்று சர்வதேச செலவாணி நிதியத்தின் (ஐஎம்எஃப்) தலைமை பொருளாதார நிபுணர் கீதா கோபிநாத் தெரிவித்தார்.

IMF – International Monetary Fund (**அனைத்துலக நாணய நிதியம்**)

- தொடங்கப்பட்ட ஆண்டு – 1945
- தலைமையிடம் – வாஷிங்டன் (USA)
- அமெரிக்க டாலர் ஒழுங்குடைமையை பிரதானமாக பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது.

**கீதா கோபிநாத்**

- பிறந்த ஊர் – கண்ணூர்
- அக்டோபர் 2018இல் அனைத்துலக நாணய நிதியத்தை முதன்மை பொருளாதார அறிஞராக நியமிக்கப்பட்டார்.
- மேலும் இவர் கேரள முதலமைச்சருக்கு பொருளாதார ஆலோகராகவும் உள்ளார்.

## ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா–ஜப்பான் உறுதி

- இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகாவுடன் தொலைபேசியில் உரையாடினார்.
- அப்போது இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இருவரும் உறுதி பூண்டனர்.

**க்வாட் கூட்டமைப்பு:**

- இந்தியா
- ஜப்பான்
- ஆஸ்திரேலியா

- அமெரிக்கா
- ராணுவ பாதுகாப்பு, கடல்வழி போக்குவரத்து பொருளாதார உதவி என்று பல விஷயங்களை இந்த நாடுகள் பகிர்ந்து கொள்ளும்.
- முக்கியமாக கடற்படை போர் பயிற்சிகளை குவாட் நாடுகள் பலதுறை ஒன்றாக செய்துள்ளது.
- சீனாவுடன் மோதல் நிலவும் நிலையில் க்வாட் கூட்டமைப்பு அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

## வைரஸ் பாஸ்போர்ட்

- சீன அரசு அந்நாட்டு சர்வதேச பயணிகளுக்கான சுகாதாரச் சான்றிதழ் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. அது வைரஸ் பாஸ்போர்ட் எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்த டிஜிட்டல் முறையிலான சுகாதார சான்றிதழில் தடுப்பூசி அளிக்கப்பட்ட நிலை மற்றும் அவரது தனிப்பட்ட நோய் விவரங்கள் இடம் பெற்றிருக்கும்.
- கோவிட் ஊரடங்கிற்கு பிறகான உலக பொருளாதார மீட்சிக்கு இந்த திட்டம் பயன்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிலவில் ஆராய்ச்சி நிலையம் அமைக்க சீனா–ரஷியா ஒப்பந்தம்

- புவியின் துணைக்கோளான நிலவு குறித்து ஆராய்ச்சி செய்வதற்கான நிலையத்தை அமைப்பதற்கு சீனா–ரஷியா இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.
- நிலவின் மேற்பரப்பிலோ சுற்றுவட்டப்பாதையிலோ இந்த ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது. நிலவு சார்ந்த அனைத்து ஆய்வுகளையும் இங்கு மேற்கொள்ள முடியும். மற்ற நாடுகளும் இந்த ஆராய்ச்சி நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## 'க்வாட்" உச்சி மாநாடு

- அமெரிக்கா, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நான்கு நாடுகள் கூட்டமைப்பின் (க்வாட்) உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்கும் முதலாவது உச்சி மாநாடு மார்ச் 12இல் நடைபெறுகிறது.
- 2004–இல் பல நாடுகளில் ஏற்பட்ட சுனாமி பேரழிவுக்குப் பின் இந்த கூட்டமைப்பு (க்வாட்) உருவாக்கப்பட்டது. அதன் பின் 2007–இல் இந்த அமைப்பு முறைப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து இந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் அடிக்கடி சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். இந்த நிலையில், தற்போது இந்த நாடுகளின் உயர்மட்டத் தலைவர்கள் பங்கேற்கும் உச்சி மாநாடு நடைபெறவுள்ளது.
- 'க்வாட்" கூட்டமைப்பு நாடுகளின் உயர்மட்டத் தலைவர்கள் கலந்துகொள்ளும் முதலாவது உச்சிமாநாடு, காணொலி வழியில் நடைபெறுகிறது. இந்த மாநாட்டில், அதிபர் ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிஸன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா ஆகியோர் பங்கேற்கின்றனர்.

## பொருளாதார சுதந்திர குறியீடு – 2021

- அமெரிக்காவின் தி ஹெரிடேஜ் பவுண்டேஷன் அமைப்பு வெளியிட்டுள்ள பொருளாதார சுதந்திர குறியீட்டில் சிங்கப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் இந்தியா 121 இடம் பெற்றுள்ளது. ஆசிய பகுதியில் 40 நாடுகளில் 26வது இடத்தில் இந்தியா உள்ளது.

## ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை (UNSC)

- பன்னாட்டு அமைதி மற்றும் பாதுகாப்பினை பராமரிப்பதே இதன் கடமையாகும்
- நிறுவப்பட்டது – 1946
- ஐ.நா பாதுகாப்பு அவை 15 உறுப்பினர்கள் – வெட்டுரிமை உள்ள ஐந்து நிரந்தர உறுப்பினர்கள் மற்றும் நிரந்தரமில்லாது இரண்டாண்டுகள் செயலாற்றக்கூடிய தேர்ந்தெடுக்கப்படும் பத்து உறுப்பினர்களையும் கொண்டது.
- நிரந்தர உறுப்பினர்கள் – சீனா, பிரான்சு, ரஷ்யா, இங்கிலாந்து, மற்றும் அமெரிக்கா.
- 2021 – 22 ஆண்டுகளுக்கான நிரந்தரமில்லாத உறுப்பினர்கள் பட்டியலில் இந்தியா இடம் பெற்றுள்ளது.

## ஜனநாயகக் கொள்கைகள் "க்வாட்" நாடுகளை ஒன்றிணைத்துள்ளன

- 'க்வாட்" என்றழைக்கப்படும் நாற்கரக் கூட்டமைப்பில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- கூட்டமைப்பின் நாடுகள் பங்கேற்ற "க்வாட்" மாநாடு காணொலி வாயிலாக நடைபெற்றது. மாநாட்டை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தொடக்கி வைத்தார்.
- அதில் பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகோ ஆகியோர் பங்கேற்றனர்.
- காணொலி வழியாக நடைபெற்ற க்வாட் கூட்டமைப்பு மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா, நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரிஸன்.

## காற்று குமிழி ஒப்பந்தம் (Air Bubble Pact)

- இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இந்தியா அதிக எண்ணிக்கையிலான நாடுகளுடன் காற்று குமிழி ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளதாகவும் சவுதி அரேபியா, குவைத் போன்ற நாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதிலும் கிழக்கு ஆசிய நாடுகளில் ஜப்பான், சீனா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பிட்ட நாடுகளுக்கு இடையே குறிப்பிட்ட அளவிலான விமான போக்குவரத்தை துரிதப்படுத்துவதன் மூலம் கோவிட்–19 காலத்திற்கு பிறகான பொருளாதார மீட்பு பணிகளை மேற்கொள்ளல்.

### வந்தே பாரத்:

- கோவிட் காலத்தில் 45 இலட்சத்திற்கும் மேற்பட்ட இந்திய குடிமக்களை இந்தியாவிற்கு மீண்டும் அழைத்து வர வந்தே பாரத் திட்டம் செயல்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பினர் பதவி: போர்ச்சுகல் ஆதரவு

- ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பினராகும் இந்தியாவின் முயற்சிக்கு போர்ச்சுகல் நாடு முழு ஆதரவு அளிக்கும் என்று சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் (ஐபியு) தலைவர் துவார்த்தே பச்சேகோ தெரிவித்தார்.
- போர்ச்சுகல் நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினரான துவார்த்தே பச்சேகோ, சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைவராக சமீபத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- கரோனா தொற்று காலகட்டத்தில் சமூக, பொருளாதார ரீதியாக எவ்வாறு சர்வதேசத்துக்கும் சவாலாக இருந்தது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா, மற்ற நாடுகளால் மதிக்கப்படுவதோடு ஓர் முன்னுதாரணமாகவும் பார்க்கப்படுகிறது.
- "சிறந்த நாடாளுமன்ற நடைமுறைகள் குறித்த கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் முக்கிய சர்வதேச பிரச்னைகள் குறித்து பல்வேறு நாடுகளின் அரசுகள், மக்கள் உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்குரிய இடமாகவும் ஐபியு உள்ளது."
- நாடாளுமன்றங்களுக்கு இடையேயான இந்த ஒன்றியம் 1889–இல் தொடங்கப்பட்டது. இதில் ஜனநாயகத்தைப் பின்பற்றும் இந்தியா உள்ளிட்ட 179 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

## பின்லாந்து பிரதமர் சன்னா மரினுடன் காணொலி வாயிலாக உரையாடிய பிரதமர் நரேந்திர மோடி

- கரோனா பாதிப்பின்போது உள்நாட்டு சவால்களை திறம்பட சமாளித்ததோடு, உலக நாடுகளின் தேவைகளையும் இந்தியா பூர்த்தி செய்தது என்று பிரதமர் நரேந்திர மோடி கூறினார்.
- பின்லாந்து பிரதமர் சன்னா மரின்.
- பின்லாந்து பிரதமர் பேசுகையில் "கல்வி, தொழில்நுட்பம் மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் விரிவுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன" என்று கூறினார்.

## சர்வதேச புதுபிக்கதக்க ஆற்றல் முகமை (IRENA)

- கோவிட்–19 பொருள் தொற்று காலம் பெட்ரோலியம் பயன்பாடுகளில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களுக்கு பொருளாதாரம் நகர்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளதாக சர்வதேச புதுப்பிக்கத்தக்க ஆற்றல் முகமை தெரிவித்துள்ளது.

### IRENA

- தோற்றம் – 26 ஜனவரி 2009
- தலைமையிடம் – அபுதாபி, ஐக்கிய அமீரகம்
- தலைவர் – பிரான்செஸ்கோ லா கேமரா

## உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய சக்தி உற்பத்தி பூங்கா – சிங்கப்பூர்

- உலகின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய சக்தி உற்பத்தி பூங்கா சிங்கப்பூரில் கட்டமைக்கப்பட்டு வருகிறது.
- உலகின் அதிக தலா கார்பன்–டை–ஆக்ஸைடு உமிழ்நாடான சிங்கப்பூர் தற்போது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களில் மின்சார உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தி வருகிறது.

## பிரதமர் மோடி–அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பு

- மூன்று நாள் பயணமாக இந்தியாவுக்கு வந்த அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் லாய்ட் ஜே.ஆஸ்டின்.
- கடந்த 2016–ஆம் ஆண்டு இந்தியாவுக்கு "பிரதானமான பாதுகாப்புத் துறை கூட்டணி நாடு" என்ற அந்தஸ்தை அமெரிக்கா அளித்தது.
- அமெரிக்காவிடம் இருந்து ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஆளில்லாத விமானங்கள், 114 போர்

விமானங்களை வாங்குவது தொடர்பாகவும் விவாதிக்கப்பட இருக்கிறது.

## நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகள் அவசியம் ஐ.நா.வில் இந்தியா வலியுறுத்தல்

- "சர்வதேச தண்ணீர் தினம்" மார்ச் 22–ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. அதையொட்டி, "நீர் குறித்த ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030–ஆம் ஆண்டுக்குள் அடைதல்" என்ற தலைப்பிலான விவாதம் காணொலி வாயிலாக நடைபெற்றது.
- மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் கூறுகையில், "உலகில் சுமார் 110 கோடி மக்களுக்கு குடிநீர் முறையாகக் கிடைப்பதில்லை. சுமார் 270 கோடி மக்கள் ஆண்டில் ஒரு மாதமாவது குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர்கொள்கின்றனர்.
- விளிம்புநிலை மக்களுக்கும் குடிநீர் முறையாகக் கிடைப்பதை அனைத்து நாடுகளும் உறுதி செய்ய வேண்டும். நீர் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும். நில அமைப்பு, அதிகரிக்கும் தேவை, நீர்நிலைகள் மாசுபாடு ஆகியவை குடிநீரை மக்களுக்கு விநியோகிப்பதில் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றன.
- நீர் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு, நீரை மறுசுழற்சி செய்து பயன்படுத்துவது உள்ளிட்டவை பெரும்பலனைத் தரும்.

## இந்தியா–பிரேசில்–தென்னாப்பிரிக்கா நாடுகளின் ஆறாவது பெண்கள் கூட்டமைவு

- மார்ச் 16–2021ல் மெய்நிகர் முறையில் ஆறாவது இந்தியா–பிரேசில்–தென்னாப்பிரிக்கா நாடுகளின் பெண்கள் கூட்டமைவு நடைபெற்றது.
- இந்த கூட்டத்திற்கு இந்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிரிதி ராணி தலைமை வகித்தார்.

## சர்வதேச அணுசக்தி முகமை

- துவக்கம் – 1957
- ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் சர்வதேச அளவிலான சுதந்திரமான அமைப்பாகும். ஆண்டறிக்கையை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் சமர்ப்பிக்கின்றன.
- உலகம் முழுவதும் உள்ள உறுப்பு நாடுகள் அணுசக்தியை பாதுகாப்பாகவும் அமைதியான முறையிலும் தொழில்நுட்ப மேம்பாடுகளுடன் பயன்படுத்திக் கொள்ளவும், இந்த முகமை வழிவகை செய்கின்றது.
- அமைதி மற்றும் பாதுகாப்பிற்காக இந்த அமைப்பிற்கு 2005ம் ஆண்டில் நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## இந்தியா–இஸ்ரேல் இணைந்து உருவாக்கும் மாத்திரை வடிவிலான கோவிட்–19 தடுப்பு மருந்து

- தற்போது உலக முழுவதும் பயன்பாட்டில் உள்ள கோவிட்–19 தடுப்பூசிகளுக்கு மாற்றாக வாய்வழி மாத்திரையாக எடுத்துக்கொள்ளும் தடுப்பு மருந்துகளை இந்தியா மற்றும் இஸ்ரேல் இணைந்து உருவாக்கும் பணியில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- Oravax என்ற நிறுவனம் மற்றும் Premas மற்றும் Oramed நிறுவனங்கள் இணைந்து தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

## காசநோய் ஒழிப்பில் சிறப்பான செயல்பாடு கேரளத்துக்கு மத்திய அரசு விருது

- காசநோயை ஒழிப்பதில் சிறப்பாக செயல்பட்டதற்காக, தேசிய அளவிலான விருது கேரளத்துக்கு கிடைத்துள்ளது. அந்தப் பிரிவில் இருந்து விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரே மாநிலம் கேரளமாகும்.
- கடந்த 5 ஆண்டுகளில் கேரள சுகாதாரத் துறை மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக மாநிலத்தில் 37.5 சதவீதம் காசநோய் குறைந்துள்ளது. இதை மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் நியமித்த 26 பேரைக் கொண்ட நிபுணர் குழு, எர்ணாகுளம், கொல்லம், காசர்கோடு, மலப்புரம் ஆகிய நகரங்களுக்குச் சென்று ஆய்வு செய்து உறுதி செய்தது.
- நிபுணர் குழு 60 துணை ஆய்வுக் குழுக்களின் உதவியுடன் 83,000 பேரிடம் ஆய்வு நடத்தியது. இதுதவிர தனியார் மருத்துவர்கள், மருந்துக் கடை உரிமையாளர்களிடம் அந்த நிபுணர் குழு ஆலோசனை நடத்தியது. முடிவில், காசநோய் ஒழிப்பில் கேரளம் சிறப்பாக செயல்பட்டதாக மத்திய அரசுக்கு அந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்தது. அதுமட்டுமின்றி, உலகிலேயே சிறந்த காசநோய் ஆராய்ச்சிக் கட்டமைப்பைக் கொண்டுள்ள

இடங்களில் ஒன்றாக கேரளம் திகழ்கிறது என்றும் அந்த நிபுணர் குழு அமைப்பு சான்றளித்திருப்பதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் தீர்மானம்: இந்தியா புறக்கணிப்பு

- இலங்கை இறுதிக்கட்டப் போரில் போர்க் குற்றங்கள் நடைபெற்ற குற்றச்சாட்டில் அந்த நாட்டு அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்தது. எனினும், பிற நாடுகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 47 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஆணையத்தில், 22 நாடுகள் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. பாகிஸ்தான், சீனா, வங்கதேசம், ரஷியா உள்ளிட்ட 11 நாடுகள் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்தன. இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட 14 நாடுகள் வாக்களிப்பில் பங்கேற்காமல் புறக்கணித்தன.
- ஐ.நா. அமைப்புக்கான இந்தியத் தூதுரகத்தின் முதன்மைச் செயலர் பவன்குமார் பதே கூறுகையில், "இலங்கை விவகாரத்தில் நாங்கள் இரண்டு அடிப்படை அம்சங்களை வலியுறுத்தி வருகிறோம். தமிழ்ர்களுக்கு சம உரிமை, நீதி, கௌரவம், அமைதி ஆகியவை கிடைக்க வேண்டும்; இலங்கையின் ஒருமைப்பாடு ஸ்திரத்தன்மை, இறையாண்மையும் பாதுகாக்கப் பட வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடு.

### ஐ.நா. மனித உரிமை ஆணையம்

- ஐ.நா. மனித உரிமை ஆணையம் கடந்த 2006 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இது ஐ.நா மனித உரிமைகளை மேம்படுத்துவதும், பாதுகாப்பதும் தொடர்பான சர்வதேச மன்றமாகும்.
- தலைமையகம் – ஜெனீவா, சுவிட்சர்லாந்து
- தற்போதைய தலைவர் – Nazhat Shameem Khan

## இந்தியா–அமெரிக்கா இடையே மீண்டும் உள்நாட்டு பாதுகாப்பு பேச்சுவார்த்தை

- இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உள்நாட்டு பாதுகாப்பு பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு அதிபர் ஜோ பைடன் நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.
- அமெரிக்க உள்நாட்டு பாதுகாப்புத் துறைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு இருநாட்டுத் தலைவர்களும் உறுதியேற்றனர். அதையடுத்து, உள்நாட்டு பாதுகாப்பு பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க அவர்கள் ஒப்புக் கொண்டனர்.
- அந்த பேச்சுவார்த்தையில் இணைவழிக் குற்றங்களுக்கு எதிரான பாதுகாப்பு, புதிய தொழில்நுட்பங்கள், தீவிரவாதம் உள்ளிட்ட பிரச்னைகள் தொடர்பாக விவாதிக்கப்படவுள்ளது.
- "க்வாட்" நாற்கர கூட்டமைப்பு, கரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கைகள், பருவநிலை மாற்ற விவகாரங்கள் உள்ளிட்டவற்றில் இந்தியாவும் அமெரிக்காவும் ஏற்கெனவே ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றன" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான உள்நாட்டு பாதுகாப்பு பேச்சுவார்த்தை முன்னாள் அதிபர் ஒபாமாவால் முதன் முதலில் முன்னெடுக்கப்பட்டது. முதலாவது பேச்சுவார்த்தை கடந்த 2011ஆம் ஆண்டிலும் இரண்டாவது பேச்சுவார்த்தை 2013–ஆம் ஆண்டிலும் நடைபெற்றது.

## பாப்பி–2021

- தீவிரவாதத்திற்கு எதிரான பாப்பி என்ற பயிற்சியில் இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் பங்கேற்கின்றன. கைபர் மாவட்டம் பகுத்கவாவில் இந்த பயிற்சி நடைபெறுகிறது.
- பிராந்திய தீவிரவாதத்திற்கு எதிரான கட்டமைவு (RATS) என்ற உஸ்பெகிஸ்தானின் தாஷ்கண்ட் கூட்டத்தில் இந்த பயிற்சி குறித்து முன்னெடுக்கப்பட்டது.
- 8 உறுப்பு நாடுகள் கொண்ட சாங்காய் கூட்டமைவு நாடுகள் இதில் பங்கேற்கின்றன.

### பாபி பயிற்சி

- சாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைபு : SCO
- இந்த அமைப்பு 2001 ஜுன் 15ல் துவங்கப்பட்டது. 2003ல் இருந்து செயல்பாட்டுக்கு வந்தது.
- அப்போதைய உறுப்பு நாடுகளாக கஜகஸ்தான், சீனா, கிர்கிஸ்தான், ரஷ்யா, தஜகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகள் உறுப்பினர்களாக இருந்தனர்.
- 2017ம் ஆண்டில் இந்தியாவும், பாகிஸ்தானும் இந்த அமைப்பில் உறுப்பு நாடுகளாக இணைந்தன.

## சர்வதேச அறிவுசார் சொத்துரிமை குறியீடு 2021

- 53 நாடுகளின் பட்டியலில் இந்தியாவுக்கு 40–வது இடம்
- இதனை வெளியிடும் நிறுவனம் – United States Chamber of Commerce–யை சார்ந்த Global Innovation Policy Center (GIPC).

## இந்தியா–தென்கொரியா நாடுகளுக்கிடையேயான நல்லுறவு

- இந்தியா–தென்கொரியா நாடுகளுக்கு இடையேயான நல்லுறவை வெளிப்படுத்தும் நட்பு பூங்காவை தில்லி ராணுவ மைதானத்தில் தொடக்கி வைத்து நன்றி பரிமாறும் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், தென் கொரிய பாதுகாப்புத்துறை அமைச்சர் சூ உக்.

## கருக்கலைப்பு விடுமுறை

- எதிர்பாராத அல்லது தவிர்க்க முடியாத சூழ்நிலையில் ஏற்படும் கருக்கலைப்புக்கு விடுமுறை அளிக்கும் மசோதாவை நியூசிலாந்து நிறைவேற்றியுள்ளது.
- இந்த சட்டத்தின் மூலம் பணிபுரிபவர்களுக்கு மூன்று நாட்கள் விடுமுறை பெற இயலும்.
- உலகில் இந்த சலுகையை அளிக்கும் சட்டத்தை இயற்றியுள்ள இரண்டாவது நாடு நியூசிலாந்து ஆகும்.
- இந்த வகையிலான சட்டத்தை உலகின முதல் முதலில் இயற்றிய நாடு இந்தியா.

# 8 தமிழ்நாடு



## திருக்குறளை ஹீப்ரு மொழியில் மொழிபெயர்க்க திட்டம்

- திருக்குறளை ஹீப்ருவில் மொழிபெயர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக தமிழ் வளர்ச்சித் துறை மற்றும் உலக தமிழராய்ச்சி நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.
- அறநூல் என்ற வகையில் உலக அளவில் அதிகமாக மொழிபெயர்ப்பு செய்யக்கூடிய நூலாக திருக்குறள்தான் உள்ளது.
- தமிழக அரசு சார்பில் சீனம், வங்காளம், இந்தி ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## கற்போம், எழுதுவோம் கல்வி திட்டம்

- எழுத்தறிவு தேர்வு எழுதுவதற்கு 100% வருகைப்பதிவு கட்டாயம்.

**வயது வந்தோருக்கான கல்வியறிவுத் திட்டம்:**

- இதன் நோக்கம் அடிப்படை கல்வியுடன், திறன் சார்ந்த தொழில் பயிற்சிகளை அளித்து அதன் மூலமாக ஒரு முழுமையான மேம்பாட்டினை அடைய.
- வயது வந்தொர் கல்வித் திட்டத்தினை மிகச் சிறப்பாக செயல்படுத்தியமைக்காக கிராம பஞ்சாயத்து மாவட்டம் மற்றும் மாநிலம் ஆகிய நிலைகளில் தேசிய எழுத்தறிவு விருதுகளை கடந்த 2013, 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் தமிழகம் பெற்றுள்ளது.

## தமிழகத்துக்கு தேசிய அளவில் விருது

- எண்ணெய், எரிவாயு சேமிப்பு குறித்து பொதுமக்களிடையே அதிக அளவில் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக, தமிழக அரசுக்கு அகில இந்திய செயல்திறன் விருது கிடைத்துள்ளது.
- மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுதுறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின் பேரில், கடந்த 2020-ம் ஆண்டு, "சக்ஷம்" என்ற பெயரில் எரிபொருள் சிக்கனம் குறித்து ஒரு மாத விழிப்புணர்வு நிகழ்ச்சியை எண்ணெய் நிறுவனங்கள் நடத்தின.
- எரிபொருள் சிக்கனம் குறித்து கடந்த ஆண்டில் அதிக அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியதற்காக, தமிழக அரசுக்கு அகில இந்திய அளவிலான சிறந்த செயல் திறன் விருது வழங்கப்பட்டு உள்ளது.

## தபால் ஓட்டுகள்

- தமிழ்நாடு, புதுச்சேரி சட்டபேரவை தேர்தலில் முதல்முறையாக 80 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தபால் வாக்குமுறை பயன்படுத்தபட உள்ளது
- கொரோனா காலகட்டத்தை கருத்தில் கொண்டு 80 வயதிற்கு மேற்பட்டவர்கள் வாக்கு சாவடிக்கு வருவதை தடுக்க இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- தபால் வாக்கை பதிவு செய்வதற்காக 12-D என்ற ஒப்புதல் படிவத்தை பூர்த்தி செய்தல் வேண்டும்.
- தேர்தல் தேதிக்கு 5 நாட்கள் முன்னதாக சம்பந்தப்பட்ட நபரை அணுகி ஒப்புதல் பெற்று வாக்கு செலுத்தும்முறை தேர்ந்தெடுக்கப்பட்டு ஓட்டளித்தல் நடைபெறும்

## தேர்தலில் வாக்களிக்க 11 ஆவணங்கள் விவரம்

- சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம் எனத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
  - கடவுச்சீட்டு
  - ஓட்டுநர் உரிமம்
  - மத்திய–மாநில அரசுத்துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் வழங்கப்பட்ட பணியாளர் அடையாள அட்டை

- புகைப்படத்துடன் கூடிய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அஞ்சலக சேமிப்பு கணக்கு புத்தகம்.
- மத்திய அரசு வழங்கும் நிரந்தர கணக்கு எண் அட்டை
- தேசிய மக்கள் பதிவேடு அடையாள அட்டை
- தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அட்டை
- தொழிலாளர் நலத்துறை மூலம் வழங்கப்பட்ட காப்பீட்டு அட்டை
- புகைப்படத்துடன் கூடிய ஒய்வூதிய ஆவணம்
- சட்டப்பேரவை,நாடாளுமன்றமாநிலங்களவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அலுவலர் அடையாள அட்டை
- ஆதார் அட்டை உள்ளிட்டவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தலாம்.

## தபால் துறையின் குறைதீர் திட்டம் (Dak Adalat)

- தபால் துறை அஞ்சல் வழியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் மக்களின் குறைகளை கேட்டறியும் திட்டமான தபால்–தக்–அதாலத்தை துவங்க உள்ளது.

### குடிநீர் இணைப்பு திட்டங்கள்

- குடிநீர் வசதிகளை மேம்படுத்தும் இல்லந்தோறும் இணைப்பு மற்றும் அழைத்தால் இணைப்பு போன்ற திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில் சட்ட வளர்ச்சி இருக்கை தொடக்கம்

- தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழக சட்டத் துறையில் சட்டம் மற்றும் அதன் வளர்ச்சிக்கான இருக்கை தொடங்கப்பட்டுள்ளது.
- இணையவழியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சட்டம் மற்றும் அதன் வளர்ச்சிக்கான இருக்கையை உச்ச நீதிமன்ற நீதிபதி ரோகிண்டன் நரிமன் தொடங்கி வைத்தார்.
- இதையடுத்து, முதலாவது எம்.கே.நம்பியார் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்து அவர் பேசியபோது, "நீதிமன்றங்கள் தொடர்ந்து விழிப்புடன் இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் நிகழும் தவறுகளைக் கூட கட்டுப்படுத்த அவை தவறியதில்லை. அடிப்படை உரிமைகள் தொடர்ந்து வளப்படுத்தப்பட வேண்டும். ஏ.கே. கோபாலன், கோகுல்நாத் வழக்கில் எம். கே.நம்பியார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது" என்றார்.
- உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி எம்.என்.வெங்கடாசலய்யா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், வழக்கறிஞர் சி.எஸ். வைத்தியநாதன், அட்டர்னி ஜெனரல் கே.கே. வேணுகோபால், முன்னாள் அட்டர்னி ஜெனரல் கே.பராசரன், சாஸ்த்ரா நிகர்நிலை பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.வைத்தியசுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## தமிழகம் உள்பட கடல் சார் மாநிலங்களில் நீலப் புரட்சிக்கு ரூ.20,000 கோடி முதலீடு

- நீலப் புரட்சியை நீடித்த வளர்ச்சியாக மாற்றும் வகையில், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ரூ.20,000 கோடிக்கும் மேலாக தமிழகம் உள்ளிட்ட அனைத்து கடல்சார் மாநிலங்களில் முதலீடு செய்யப்படுவதாக மத்திய மீன் வளம், கால்நடை வளர்ப்பு, பால்வளத் துறை இணையமைச்சர் பிரதாப் சந்திர சாரங்கி தெரிவித்தார்.
- தேசிய மீன்வளக் கொள்கை – 2020 வகுக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 7வது ஐந்தாண்டு திட்ட ஆண்டுகளில் (1985–1990) மீன் வேளாண்மை மேம்பாட்டு முகமை அரசு உதவியுடன் துவங்கப்பட்டது.
- 8வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (1992–97) அதிக முக்கியத்துவம் கடல் மீன் திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.

### நீலப்புரட்சி 2.0 (நீல் கரந்தி மிஷன்)

- தேசிய மீன்வளத்துறை மேம்பாட்டு வாரியம் 2006ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- மீன் பிடித்தலை மேம்படுத்த மத்ஸ்ய சம்பதா யோஜனா என்ற திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- Dr.ஹிராலால் சவுத்ரி மற்றும் Dr.அருண் கிருஷ்ணன் போன்றோர் நீலப்புரட்சியின் தந்தை என அறியப்படுகின்றனர்.

## சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணப்பட்ட பாக்டீரியாவுக்கு தமிழக விஞ்ஞானியின் பெயர்

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் காணப்பட்ட ஒரு வகை பாக்டீரியாவுக்கு தமிழக விஞ்ஞானி சையது அஜ்மல் கானின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

- அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளால் விண்ணில் சர்வதேச விண்வெளி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
- இதில் பல்வேறு இடங்களில் இருந்து 4 இன பாக்டீரியாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பான ஆய்வுப் பணியில் நாசாவுடன் ஹைதராபாத் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களும் பங்கேற்றுள்ளனர்.
- இதில் ஒரு வகை பாக்டீரியா, மெத்திலோரூப்ரம் ரோடீசியனம் ஆக அடையாளம் காணப்பட்டாலும் மற்ற வகை பாக்டீரியாக்கள் அடையாளம் காணப்படாமல் இருந்தது. இந்நிலையில் தற்போது புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ள ஒரு வகை பாக்டீரியாவை தமிழகத்தின் அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியராக இருக்கும் சையத் அஜ்மல் கான் பெயரில் "மெத்திலோ பாக்டீரியம் அஜ்மலி" என்று அழைக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் குழு பரிந்துரைத்துள்ளது. உருளை வடிவிலான இந்த பாக்டீரியா, வளிமண்டல நைட்ரஜன் வாயுவை தாவரங்கள் மற்றும் பிற உயிரினங்கள் பயன்படுத்தக்கூடிய வடிவமாக மாற்றுவது, தாவர வளர்ச்சி, தாவர நோய்க் கிருமிகளுக்கு எதிரான செயல்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையது ஆகும்.

## தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் தமிழ்நாட்டில் அதிக வருவாய் பற்றாக்குறை

- தேர்தல் நடைபெறும் 5 மாநிலங்களில் 65994 கோடி வருவாய் பற்றாக்குறையுடன் தமிழகம் முதலாவது இடத்தில் உள்ளது.
- இந்திய அளவில் தமிழ்நாடு 3வது பெரிய பொருளாதாரமாகவும் மேற்கு வங்கம் 6வது இடத்திலும், கேரள 11வது இடத்திலும், அஸ்ஸாம் 17வது இடத்திலும் புதுச்சேரி 26வது இடத்திலும் உள்ளது.
- 19 இலட்சம் கோடி மாநில உள்நாட்டு உற்பத்தியை கொண்டு தேசிய அளவில் 9% அளவிற்கு GDP யில் பங்கு பெறுகிறது.
- ஐந்து மாநிலங்களில் அஸ்ஸாம் 8.6% வளர்ச்சியுடன் முன்னிலையில் உள்ளது.
- தமிழ்நாட்டின் உற்பத்தியில் 51% சேவை துறையிலிருந்தும், 38% தொழிற்சாலைகளிலிருந்து 11% வேளாண் துறையிலிருந்தும் பெறப்படுகிறது.
- தமிழ்நாட்டின் பொருளாதார சராசரி வளர்ச்சி 8% ஆக உள்ளது (2016–2020) இந்த காலகட்டத்தில் இந்தியாவின் வளர்ச்சி சராசரி 6.7% ஆக உள்ளது.
- தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பின்மை சராசரி 4.8% ஆக உள்ளது. (தேசிய சராசரி 6.9%).

**வருவாய் பற்றாக்குறை:**

- முதன்மை பற்றாக்குறை நிதிப்பற்றாக்குறைக்கும், வட்டி செலுத்துதலுக்கும் உள்ள வேறுபாடாகும்.
- வருவாய் பற்றாக்குறை என்பது வருவாய் செலவினத்திற்கும் அதிலிருந்து பெறும் வருவாய்க்கும் தொடர்பாகும்.

வாய்மையே வெல்லும்